1283

# தமிழ் நாடு

## திட்டப் பொறியை நடவடிக்கைகள்

### ஆசிரியர் வழிகாட்டி

VOL 4 FEB 1989 No. 2.

12.11.31 / 1989
1989.4.2
13842

வெளியீடு 14-9-1989

Issued 14-9-1989




தமிழ்நாடு

# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, பிப்ரவரி 21, 1989–தொகுதி 4–எண் 2

Tuesday, the 21st February, 1989–Volume 4–No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George**

**Madras-600 009**

விலை ரூ. 3.00]

[Price Rs. 3.00

உள்ளடக்கம்

21—2—1989


பக்கங்கள்

1 ஒத்திவைப்புத் தீர்மானம்—

சிவகாசியில் காவல் துறையினரின் அத்துமீரிய நடவடிக்கைகள் .. .. .. 145—150

2 அமைச்சரின் அறிக்கை—

பயிரிடு குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் அளிக்கும் சட்டம் இயற்ற அரசு முடிவு .. 150—151, 152

3 தகவல் கோரல்—

(அ) திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் இலங்கைக்குச் சென்றிருப்பதாக வந்துள்ள செய்தி .. .. 151—152, 157

(ஆ) ஸ்டான்டர்டு மோட்டார் நிறுவனம் தொடர்பான பிரச்சினை .. .. 153

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் .. .. .. .. 153—154, 157

(ஈ) மத்தியப் பிரதேசத்திலிருந்து பீடி இலைகள் வராததால் தமிழ்நாட்டில் பீடி தொழில் பாதிக்கப்பட்டிருத்தல் .. 154—155

(உ) மெட்டல் பாக்ஸ் தொழிலாளர் பிரச்சினை .. .. .. .. 155—156

(ஊ) வட ஆற்காடு மாவட்டம் பள்ளூர் கிராமத்தில் சத்துணவு உண்ட குழந்தைகள் பாதிப்பு .. .. .. 158, 159, 160

(எ) மூடப்பட்டுள்ள பஞ்சாலைகளைத் திறக்க நடவடிக்கை .. .. .. 160—161

(ஏ) கல்லணைக் கால்வாயிலிருந்து தண்ணீர் விடவேண்டியதன் அவசியம் .. .. 161—162

(ஐ) மதுரை மாவட்டத்தில் தண்ணீர் இல்லாததால் பயிர்கள் பாதிப்பு .. .. 162—163

## உள்ளடக்கம்—தொடர்ச்சி


பக்கங்கள்

(ஒ) உசிலம்பட்டி, திருமங்கலம் பகுதிகளை வறட்சிப் பகுதிகளாக அறிவித்து நிவாரணம் வழங்குதல் .. .. .. 163

(ஒ) தஞ்சை மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை உடனடியாக எடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியம் 163—165

(ஓள) திண்டிவனம், செஞ்சி பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு .. .. .. 165—166

(ஃ) சென்னையில் குடிநீர்த் தட்டுப்பாடு .. 172—173

4 ஒழுங்குப் பிரச்சினை—

உறுப்பினர் ஒருவர் தெரிவித்த தகவலை நிரூபிக்கும் பொறுப்பு .. .. .. 158—159

5 கவன ஈர்ப்பு—

(அ) அரிசி விலை உயர்வு குறித்து .. 166—169

(ஆ) திருவாரூரில் உள்ள வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளில் ஏற்பட்டுள்ள பழுதுகள் குறித்து .. .. .. 169—171

6 சட்ட முன்வடிவுகள்—

(அ) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1989 .. .. .. .. 173—210

திரு. எல். கணேசன் .. .. 179, 194, 208—209, 210

திரு. ரா. சொக்கர் .. .. 173—175

திரு. என். பழனிவேல் .. .. 175—176

திரு. எம். இ. ராமசந்திரன் .. 177—179

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் .. 180—183

திரு. பி. என். வல்லரசு .. .. 183—184

திரு. எம். அப்துல் லத்தீப் .. .. 185—188

திரு. எஸ். திருநாவுக்கரசு .. .. 188—206


D
V21,3/1989
N84-42






மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி .. 190, 191, 192, 196—198 200, 201—202, 203, 204, 206—207

(ஆ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989. .. .. .. 210—256

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா 210, 246, 251—255

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி .. .. 210—214

திரு. எஸ். டேனியல் ராஜ் .. .. 214—216

திரு. ஆர். அண்ணாநம்பி .. .. 216—218, 219, 220, 221

திரு. எஸ். திருநாவுக்கரசு .. .. 221, 222—227, 228—230, 231, 232—234, 235, 239

திரு. அ. இராசேந்திரன் .. .. 240—243

திரு. பொன். விஜயராகவன் .. .. 243—245, 246—247

திரு. பி. எச். பாண்டியன் .. .. 247—251

அரசினர் தனித் தீர்மானம்—

மின் வாரியக் கடன் உச்சவரம்பு .. . 256—276

மாண்புமிகு திரு. கே. என். நேரு .. 256, 274—276

திரு. க. குருநாதன் .. .. 257—258

திரு. செ. நூர்முகமது .. .. 258—262

திரு. பி. வி. இராஜேந்திரன் .. .. 262—266

திரு. சோ. அழகர்சாமி .. .. 266—268

திரு. ஏம். அப்துல் லத்தீப் .. .. 268—271

திரு. கே. ஏ. செங்கோட்டையன் .. 271—274

8 அறிவிப்பு—

ஆளுநரின் செய்தி .. .. .. 276

9 அரசினர் தீர்மானம்—

பேரவை ஒத்திவைக்கப் பெறுதல் .. .. 277

10 பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 277

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.**

*1989, பிப்ரவரி 21, செவ்வாய்க்கிழமை.*

*மாசி 10, விபவ—திருவள்ளுவர் ஆண்டு 2020.*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

'இச்செயலை இவ்வாறு செய்து முடிப்போம்' என்று சொல்லுதல் எவர்க்கும் எளிய செயல் தான்; சொல்லியபடி செய்து முடித்தலே அரிய செயலாகும்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### சிவகாசியில் காவல் துறையினரின் நடவடிக்கைகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஆர். பால சுப்பிரமணியம் அவர்கள் சிவகாசியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைக் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல் களை ஒத்திவைக்க வேண்டுமென்ற தீர்மானத்தை மொழிய அனுமதிகோரி முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். சிவகாசி காவல்துறை அதிகாரிகளின் அத்து மீறிய செயல்களைக் கண்டித்தும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டித்தும் 12—2—1989 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவகாசி நகரில் உண்ணா விரதம் இருக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. உண்ணாவிரதப் பந்தலும் போடப்பட்டது. உண்ணாவிரதம் தாழ்த்தப்பட்ட மக்களின்

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்] [1989 பிப்ரவரி 21

பிரதிநிதிகளால் எஸ். பி. ராஜ் என்பவரின் தலைமையில் நடப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. உண்ணாவிரதத்தையொட்டி, நகரில் போலீஸ் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு நூற்றுக் கணக்கான ஆயுதம் தாங்கிய போலீசாரைக்கொண்டு வந்து இறக்கி தெருக்களில் அணிவகுப்பு நடத்தப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அருள்கூர்ந்து சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாக நான் முடிக்கிறேன். பொது மக்களை அச்சுறுத்தி பீதி அடையச் செய்யும் வகையில் எல்லா நடவடிக்கைகளும் அமைந்திருந்தன. ஆர்.டி.ஓ., தாசில்தார் சுடுவதற்கான உத்தரவை பிறப்பிக்கத் தயாராக இருந்தார்கள். உண்ணாவிரதப் பந்தல் காவல் துறையினரால் பிய்த்து எறியப் பட்டது. உண்ணாவிரதம் இருக்க வந்தவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள். 20 பேர் வரை கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டனர். மற்றவர்கள் துரத்தப்பட்டார்கள். இந்த நடவடிக்கையை முன்னின்று நடத்தியவர்கள் டி.எஸ்.பி. கிருஷ்ணமூர்த்தி, எஸ். பி. அன்வர்ஷா . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பெயர்களைச் சொல்லாமல் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து இந்த நடவடிக்கையால் அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் மத்தியில் பெருத்த பீதியும், அச்சமும் நிலவுகிறது. குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும் பீதி அடைந்திருக்கிறார்கள். சிவகாசியை ஒட்டியுள்ள ஊர் சிவகாமி புரம். அந்த ஊரில் கள்ளச் சாராய வேட்டை என்ற பெயரால் அடிக்கடி கள்ளச் சாராய வேட்டை நடைபெறுவது உண்டு. சில காலத்திற்கு முன்னால் கள்ளச் சாராயப் பேர்வழி ஒருவரை கைது செய்தார்கள். அதன் தொடர்பாக எஸ்.ஐ. கத்திக் குத்துக்கு ஆட்பட்டு இறந்து போய்விட்டார். அந்தச் சம்பவத்தை மனதில் கொண்டு அடிக்கடி போலீசார் அந்த ஊருக்குச் சென்று காட்டுமிராண்டித்தனமாக தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தாக்குதல் நடத்தி, அந்த ஊரில் இருந்த இரண்டு பேரைப் பிடித்துக்கொண்டு போய் மறைவிடத்தில் கொண்டு சென்று அவர்களைச் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். இந்த நிகழ்ச்சி அந்தப் பகுதியில் பல காலமாக ஒரு பெரிய பீதியை



1989 பிப்ரவரி 21] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

உருவாக்கியிருக்கிறது. மீண்டும் அது தொடர்ந்து கொண்டே இருக்கிறது. நினைத்தபோதெல்லாம் போலீசார் அந்த ஊருக்குள் நுழைவதும், தாழ்த்தப்பட்ட மக்களை அடிப்பதும், துன்புறுத்துவதும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அதேபோல் பல நிகழ்ச்சிகள், அந்தப் பகுதியில் சித்து ராஜபுரம் என்ற ஊரில் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள், மற்ற மக்கள்—கள்ளச் சாராய வேட்டை என்ற பெயரால் சைக்கிள் கடையில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு பையனை அழைத்து சாராய வியாபாரியின் வீட்டைக் காட்டவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். எனக்குத் தெரியாது என்று சொன்னவுடன் அந்தப் பையனை கண்மூடித்தனமாகத் தாக்கியதோடு, ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்க வந்தவர்களை அடித்து விரட்டியிருக்கிறார்கள். அவர்கள் கண்மூடித்தனமான தாக்குதலுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அதேபோல் அதே ஊரில் உள்ள சித்து ராஜபுரத்தைச் சேர்ந்த கிருஷ்ணசாமி என்பவர் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : தங்களுக்குத் தரப்பட்ட வாய்ப்பை நீங்கள் இப்படிப் பயன்படுத்தக்கூடாது.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்ற நோக்கத்தோடு தான் இதை யெல்லாம் கொண்டு வருகிறேன். இந்தச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அங்கே இருக்கின்ற மக்கள் பீதி அடைந்திருக்கிறார்கள். அதனால் இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது பற்றி விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காவல்துறை அதிகாரிகள்மீது கண்டிப்பான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் தந்தார்கள். ஆனால் அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் விதிமுறைப்படி அமைந்திருக்கவில்லை. இருந்தாலும் அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஒட்டி அவர் ஒரு நீண்ட விளக்கக் கடிதத்தை—பல நண்பர்கள் அவரிடத்தில் கொடுத்ததை—அதிலே இணைத்து இருந்த காரணத்தால் அதுபற்றி விசாரிக்கலாம் என்று நான் அவரிடத்திலும் கூறியிருந்தேன். தங்கள் அறையில்

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 பிப்ரவரி 21

இதுபற்றி விவாதித்தபோது தாங்கள் என்னிடத்தில் சொன்னது, இப்படி ஒரு பிரச்சினையை அவர் எழுப்புவார், ஆனால் அது ஒத்திவைப்புக்குரியது அல்ல என்று அவருக்கு விளக்கப்படும் என்றுதான் என்னிடத்திலே கூறப்பட்டது. ஒத்திவைப்புத் தீர்மானம் என்பது அண்மையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு எந்தத் தேதியில் என்ன சம்பவம் நடைபெற்றது என்று குறிப்பிட்டுத் தரப்பட்டால்தான் அந்தத் தேதியிலே நடைபெற்ற சம்பவத்தைக் குறித்து நான் அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு அலுவலகம் மூலமாகத் தகவல்களைப் பெற இயலும். அப்படி இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் எந்த முறையும் கடைப்பிடிக்கப்படவில்லை. இருந்தாலும் முதல் ஒத்திவைப்புத் தீர்மானமாக வருகிற காரணத்தாலும், இதை இந்த அவையிலே எழுப்ப வேண்டுமென்கிற மெத்த ஆர்வம் கொண்டவராக நம்மு டைய திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் விளங்கிய காரணத் தாலும், நானும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திலே இன்னைக்குப் பேசியதாக இருக்கட்டுமே என்பதாலும் இதைக் குறித்துச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

அங்கே நடைபெற்றதாகச் சொல்லப்படுகின்ற காவலருடைய நடவடிக்கை இப்பொழுதல்ல, 7—7—1987 ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பவமாகும். அண்மையிலே நடைபெற்ற ஒன்றல்ல. அதன் தொடர்பாக சில நிகழ்ச்சிகள் நடைபெறுவதாக அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். 1987 ஆம் ஆண்டு 7 ஆவது மாதத்தில் நடை பெற்ற சம்பவம். சிவகாசிபுரத்தைச் சேர்ந்த பாலசுப்பிர மணியன் என்பவர் கொடுத்த கொள்ளை சம்பந்தமான புகார். அங்கேயும் பாலசுப்பிரமணியன் என்பவர்தான் புகார் கொடுத் திருக்கிறார். அவர் ஒரு புகார் கொடுத்தார். ஒரு கொள்ளை சம்பந்தமான புகார் அது. அதன்மீது வழக்குப் பதிவு செய்து கொண்டு விசாரணை செய்ய சிவகாசி குற்றப் பிரிவு உதவி ஆய் வாளர் தர்மராஜ், காவலர் நடராஜன் என்பவரோடு சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்றார். அப்பொழுது ஒரு கும்பல் காவல் துறையினரைத் தாக்கியதில் சப்-இன்ஸ்பெக்டர் தர்மராஜ் மரணம் அடைந்தார். இது 1987 ஆம் ஆண்டு நடைபெற்றது. அதைக் குறித்து இன்னொரு வழக்கு. கொள்ளையைக் கண்டு பிடிக்கப்போன இடத்தில் கொலை நடைபெற்ற காரணத்தால் இன்னொரு வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அதில் எதிரிகள் கைது செய்யப்பட்டார்கள். தலைமறைவாக இருந்த சில எதிரிகளைக்



1989 பிப்ரவரி 21] [டாக்டர் மு. கருணாநிதி]

கைது செய்ய சப்-இன்ஸ்பெக்டர் மாறன் என்பவரும், சப்-இன்ஸ் பெக்டர் அன்வர் ஷா என்பவரும் அவர்களுடைய தலைமையிலே காவலர்களை அழைத்துக்கொண்டு அங்கே சென்றார்கள். அப்பொழுதும் காவலர்கள் தாக்கப்பட்டார்கள்; அரிவாளால் வெட்டப்பட்டார்கள். இவைகளெல்லாம் 1987 ஆம் ஆண்டு நடை பெற்ற சம்பவங்களாகும். தற்காப்புக்காகப் போலீசார் சுட்ட போது, தர்மர், முத்தையா என்ற இரண்டு பேர், அவர்களைத் தாக்கியவர்களிலே இரண்டு பேர் காயம் அடைந்து, பிறகு மருத்துவமனையிலே மரணம் அடைந்தார்கள். 1987 ஆம் ஆண்டி தான் சப்-இன்ஸ்பெக்டர் கொல்லப்பட்ட சம்பவம், அதன் தொடர் பாக நடைபெற்ற நடவடிக்கைகளின் காரணமாக மேலும் இருவர் கொலையுண்ட சம்பவம் இவைகளெல்லாம் அன்றைக்கு நடைபெற் றிருக்கின்றன. அதற்கும், இப்பொழுது தாக்கப்பட்டுள்ள இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலே கண்டுள்ள விவரத்திற்கும் எந்தத் தொடர்பு இருக்கிறதென்று எனக்குப் புரியவில்லை. அவைகளெல் லாம் மேலும் விசாரிக்கப்படும் என்ற உறுதியை மாத்திரம் இங்கே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இப்பொழுது சிவகாசியில், சிவன்கோயில் பகுதியிலே, சாலை யோரத்தில் கடைகளை வைத்துப் போக்குவரத்துக்கு நெரிசலை உண்டாக்கினார்கள் என்ற காரணத்திற்காக அந்தக் கடைகளை யெல்லாம் அப்புறப்படுத்துகின்ற முயற்சியிலே காவல் துறையினர் ஈடுபட்டார்கள். என்றும், அதை எதிர்த்து ராஜு என்பவர் உண்ணாவிரதம் மேற்கொண்டார் என்றும், அப்படி உண்ணா விரதம் மேற்கொண்டபோது, எடுக்கப்பட்ட காவல் துறையி னுடைய நடவடிக்கைகள் கண்டிக்கத்தக்கது என்றும், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசிய திரு. பால சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டு இருக்கின்றார்கள். இவை களைப் பற்றி மேலும் விவரங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. காவல் துயினர் யாராக இருந்தாலும், நியாயம், நேர்மை, இவை களை மீறி நடந்து கொள்ளக்கூடாது, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்றெல்லாம் பாரபட்சம் காட்டக்கூடாது என்று காவல் துறைக்கு கண்டிப்பாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அதனை யும் மீறி காவல்துறையினர் நடந்து கொண்டார்களேயானால் அதை இந்த அரசு நிச்சயமாகக் கண்காணித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தச் செய்தியைப் பொறுத்தவரையில், கோயிலுக்குப் பக்கத்திலே, போக்குவரத்துக்கு நெரிசலாகக் கடைகளை வைத்துக்கொண்டு,

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 பிப்ரவரி 21

அதை பிரிக்க மாட்டோம் என்பதும், அதன் காரணமாக எழுகின்ற பேராக்குவரத்துச் சங்கடங்களை அகற்ற காவல் துறை விருப்பு வதும் நியாயமாகத்தான் இருக்க முடியும். அதிலும் பொதுமக்க ளுக்கு இடையூறோ அல்லது சிறு கடைக்காரர்களுக்கு இடை யூறோ இருக்குமேயானால் அதை இந்த அரசு கவனிக்கும் என்பதைத் தெரிவித்து, இந்த அளவில் இந்த ஒத்திவைப்புத் தீர் மானத்திற்கு நான் கருத்துக்களைத் தெரிவித்து இருக்கின்ற காரணத்தால், தொடர்ந்து இதை விவாதிக்காமல் விட்டு விடலாம் என்று அவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள் கின்றேன். (குறுக்கீடு).

(மு.ப. 9-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே யாரும் பேசுவதற்கு இடமில்லை; உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 2. அமைச்சரின் அறிக்கை.

### பயிரிடு குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் அளிக்கும் சட்டம் இயற்ற அரசு முடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110 இன் கீழ் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் பேரவைக்கு இப் போது ஓர் அறிக்கை அளிப்பார்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயலாலும் மற்றும் வெள்ளத் தாலும் பாதிக்கப்பட்ட தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு சட்டம் 60/86-இன் படி 30—6—1985 வரை கட்டவேண்டிய குத்தகை நிலுவைகளை ஐந்து சம தவணைகளில் வட்டியின்றி செலுத்திட வகை செய்யப்பட்டது. இச் சட்டத்தின்படி அளிக்கப் பட்ட கடைசித் தவணை 30—9—1988-வுடன் முடிவடைந்தது.

1987 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் கடும் வறட்சி நிலவியது. 1988 ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவ மழை சாதகமாக இருந்த போதிலும், வடகிழக்குப் பருவ மழை பொய்த்துவிட்டது. அதனால் பயிரிடு குத்தகைதாரர்கள் மேலே குறிப்பிட்ட பருவ நிலை பாதிப்பினின்று மீள முடியாத நிலை ஏற்பட்டு, தவணை முறையில் செலுத்த வேண்டிய குத்தகை நிலுவைகளை செலுத்த முடியாமல் போய்விட்டது.



1989 பிப்ரவரி 21] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

அதனால் பயிரிடு குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் அளிக்க அரசு கருதுகிறது. இதற்கு உரிய சட்டம் இயற்ற அவசியம் ஏற்படுகிறது. எனவே, அரசு 30—9—1986 இல் உள்ள நிலுவையும் மறறும் 20—2—1989 வரையில் நிலுவையிலுள்ள குத்தகைப் பாக்கிகளையும் செலுத்த இயலாத பயிரிடு குத்தகைதாரர்கள், தனிப்பட்ட நிலவுடைமையாளருக்கோ அல்லது பொதுப் பொறுப்புக் கழகங்களுக்கோ குத்தகைத் தொகை நிலுவைகளை செலுத்தாத காரணத்திற்காக நிலத்திலிருந்து 30—9—1986 அன்றும் அதன் பிறகும், வெளியேற்றப்பட்டவர்களை மீண்டும் தொடர்ந்து பயிரிடு குத்தகைதாரர்களாக இருக்க அனுமதிக்கவும், குத்தகை நிலுவைகளை செலுத்தாத காரணத்தால் வெளி யேற்றப்படவிருக்கும் பயிரிடு குத்தகைதாரர்களின் மீதான நில வெளியேற்ற நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கவும், மேற்கண்ட பயிரிடு குத்தகைதாரர்கள் 31—3—1990 ஆம் நாளுக்குள் தவணை பாக்கிகளை செலுத்த அவகாசம் அளிக்கவும் அரசு கருதுகிறது. குத்தகை செலுத்தாத காரணத்திற்காக எந்தவொரு பயிரிடு குத்தகைதாரரையும் 31—3—1990 வரை நிலத்திலிருந்து வெளி யேற்றம் செய்யக்கூடாதெனவும் அரசு கருதுகிறது.

இது சம்பந்தமாக உரிய சட்டம் கொண்டுவரப்படும்.

## 3. தகவல் கோரல்.

### (அ) திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் இலங்கைக்குச் சென்றிருப்பதாக வந்துள்ள செய்தி.

**திரு. சுமதி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, On a point of information, ஆளுங்கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவர் இலங்கை சென்றுள்ளார். அண்மையிலே டெல்லி சென்றிருந்த நமது மாண்புமிகு முதல்வரவர்கள் அங்கே பத்திரிகையாளர்கள் கூட்டத்திலே பேசுகிறபொழுது, யாழ்ப் பாணம் நீங்கள் செல்வீர்களா என்ற கேள்விக்கு, பிரதமரைச் சந்தித்ததற்குப் பிறகு, அதுபற்றி ஆலோசிக்கப்படும், முடி வெடுக்கப்படும் என்று சொல்லியிருந்தார்கள். எனவே, இப் பொழுது ஆளுங்கட்சியினுடைய முக்கிய தலைவர் ஒருவர் இலங்கைக்குச் சென்று இருக்கின்ற காரணத்தினாலே, இலங்கை இந்தியர் பிரச்சினைகளைப்பற்றிப் பேச்சு வார்த்தை நடத்து கொண்டிருக்கின்ற நேரத்தில் நமது மாண்புமிகு முதலமைச்சரவர்

[திரு. குமரி அனந்தன்] [1989 பிப்ரவரி 21

களிடமிருந்து ஏதாவது செய்தியினைக் கொண்டு போய் இருக்கின்றாரா அல்லது மாண்புமிகு முதலமைச்சர் தெரிந்து அவரை அனுப்பி சில தகவல்களைச் சேகரிக்க அனுப்பி இருக்கிறார்களா என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இலங்கைக்குச் சென்றுள்ள தி.மு.க. நண்பரைப் பற்றிய ஒரு குறிப்பைத் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் என்ற முறையில் இந்த அவையினுடைய முன்னவர் பேராசிரியர் அவர்கள் பத்திரிகைகளுக்கு விளக்கியிருக்கின்றார். எனவே, இலங்கைக்குச் சென்றிருப்பவர் என்னிடத்திலே அறிவித்துவிட்டுச் செல்லவும் இல்லை: நான் அவரை அனுப்பி வைக்கவும் இல்லை. இரண்டும் இல்லாத காரணத்தால் என்னிடமிருந்து அவர் செய்தி கொண்டு போக வழியும் இல்லை. பிரதமரிடத்திலும், பிரதமரிடத்திலே பேசிய பிறகு பிரதமருடைய சொற்படி வெளிவிவகாரத் துறை அமைச்சரிடத்திலும் நான் தமிழ் ஈழப் பிரச்சினை குறித்து விரிவாகப் பேசியிருக்கிறேன். தொடர்ந்து பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே இந்த நேரத்தில் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் இலங்கைக்குச் சென்றிருப்பதாகத் தகவல் வந்ததே தவிர எங்களுக்கு அறிவிக்கப்படவில்லை. அதற்கும் இந்தப் பேச்சுக்களுக்கும் தொடர்பு இல்லை.

### 2. அமைச்சரின் அறிக்கை—தொடர்ச்சி.

### பயிரிடு குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் அளிக்கும் சட்டம் இயற்ற அரசு முடிவு—தொடர்ச்சி.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ராகுபடி செய்கின்ற விவசாயிகளுக்கு ஓர் அறிவிப்பைத் தந்திருப்பதற்கு நன்றி. அதிலே நீண்ட காலமாக நீதிகை செலுத்த முடியாமல் கடந்த 4 தவணை . . . . .

மாண்புமிகு போலைந் தலைவர்: மாண்புமிகு அமைச்சர்கள் அவையில் அறிக்கை படிக்கிறபோது அதன்மீது வந்தனிதமான விவாதமும் கூடாது என்பது விதி.



1989 பிப்ரவரி 21]

### 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் தொடர்பான பிரச்சினை

திரு. சோ. அழகர்சாமி: அடுத்த பிரச்சினை என்னவென்றால் நான் ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். தாங்கள் அதை கனை ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றிக் கொடுத்திருந்தீர்கள். எற்கெனவே அதுபற்றிப் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மேலும் அது தொடர்பான தகவல்கள் கிடைத்திருந்தால் அவைக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு போலைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆளுநர் உரையிலே பேசியபோது தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் அன்றையதினமே இந்த மன்றத்தில் பதில் சொல்லப் பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே ஒரு முறை தொழிற் சங்கத் தலைவர்களுடனும், நிர்வாகத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது. மேலும் அது தொடர வேண்டுமென்பதற்காக அந்தப் பேச்சுவார்த்தை ஒரு சுமுகமான முடிவை எட்ட வேண்டுமென்பதற்காக வருகின்ற 27 ஆம் தேதி அன்றும் பேச்சுவார்த்தை நடைபெற இருக்கிறது. ஆகவே, அந்தப் பிரச்சினை ஒரு சுமூகமான முடிவினை நோக்கிச் சென்று கொண்டிருக்கிற காரணத்தால் இதற்குமேல் இந்தச் சந்தர்ப்பத்தில் விவரம் தெரிவிப்பது பொருத்தமாக இராது என்பதால் இதையே அவர்கள் விளக்கமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

### (இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. பொன். விஜயராகவன்: மாண்புமிகு போலைத் தலைவர் அவர்களே, விக்கிரமசிங்கபுரம் மதுரை கோட்ஸ் நிறுவனத்தில் ஓய்வுபெற்ற ஊழியர்கள் தங்களுக்கு வழங்கவேண்டிய பணத்தை நிர்வாகம் வழங்கவில்லை; போராட்டம் நடத்தியபோது 500-க்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதை கனை ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றியிருக்கிறீர்கள். இன்றுடன் இந்தக் கூட்டத்தொடர்

[திரு. பொன். விஜயராகவன்] [1989 பிப்ரவரி 21

முடிவடைகின்ற காரணத்தால் அதனுடைய நிலைமை என்ன? மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பதில் ஏதாவது இருக்கிறதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு உரிய பதிலைப் பெறுவதற்காகத் தொடர்புடைய அமைச்சருக்கு அது அனுப்பப் பட்டிருக்கிறது. பதில் வந்தவுடன் தங்களுக்கு அளிக்கப்படும்.

**(ஈ) மத்தியப் பிரதேசத்திலிருந்து பீடி இலைகள் வராததால் தமிழ் நாட்டில் பீடித் தொழில் பாதிக்கப்பட்டிருத்தல்.**

**திரு. எம். அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தின் இந்தக் கூட்டத் தொடர் இன்றுடன் நிறைவு பெறுகிறது. ஆகவே, அவசர முக்கியமான ஒரு பிரச்சினை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் விளக்கம் பெற விரும்புகிறேன். தாங்கள் என்னை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் பீடித் தொழில் இன்றைக்கு ஒரு மிகப் பெரிய அபாயத்தை நொருங்கிக் கொண்டிருக்கிறது. பீடித் தொழிலுக்கு அடிப்படையாக இருக்கிற பீடி இலைகள் அதிகமாக, சுமார் 80 சதவீதம் மத்தியப் பிரதேசத் திலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இப்போது மத்தியப் பிரதேசம் ஒரு புதிய கொள்கையை அறிவித்திருக்கிறது. பீடி இலை வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுவதற்கு சில கட்டுப் பாடுகளை விதித்திருக்கிறார்கள். இந்த நிலையில் பீடி இலை இல்லாமல் இந்தத் தொழிலை நடத்த முடியாமல் ஆயிரக்கணக் கான தொழிலாளர்கள் வேலை இழக்கக்கூடிய அபாயம் ஏற்பட் டிருக்கிறது. இது குறித்து அரசு என்ன நடவடிக்கை மேற் கொண்டிருக்கிறது? மத்திய பிரதேச அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறதா? மத்திய அரசு இதில் தலையிட்டிருக் கிறதா என்பதைச் சொன்னால் இந்தத் தொழிலில் ஏற்பட்டிருக் கிற பீதி அகற்றப்படும், தொழில் காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கை ஏற்படும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு என்ன விளக்கம் தரப் போகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலுக்கு அத்தியா வசியமான பொருளான இலை மத்தியப் பிரதேசத்திலிருந்து வர



1989 பிப்ரவரி 21] [திரு. பொன். முத்துராமலிங்கம்]

வேண்டியிருக்கிறது. மத்தியப் பிரதேசம் விதித்திருக்கிற சில நிபந்தனைகள் காரணமாக அந்த இலையைக் கொண்டுவருவதில் சற்று தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. இது குறித்து தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள்—அரசின் கவனத்திற்குக் கொண்டு வந் திருக்கிறார்கள். நம்முடைய அதிகாரிகள் மத்தியப் பிரதேச அரசுடன் கலந்து ஆலோசிக்கும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. விரைவில் அதற்கான முடிவினை இந்த மன்றத்திலே அறிவிக் கிறேன்.

(மூற்பகல் 9-20)

**(உ) மெட்டல் பாக்ஸ் தொழிலாளர் பிரச்சினை.**

**திரு. உ. ரா. வரதராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்றம் இன்றைக்கு கடைசி நாளாக நடக்கின்ற காரணத்தினாலே, கடைசி நிலைத்தன்று இரண்டுக்கும் மேற்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்வது வழக்கம். நான் 'மெட்டல் பாக்ஸ்' தொழிலாளர் பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துப் பல நாட்கள் ஆகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது குறித்து இன்றைய நிலைமை என்ன என்பது பற்றி விளக்கினால் உதவிகரமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலே இயங்காமல் இருக்கக் கூடிய 'மெட்டல் பாக்ஸ்' நிறுவனத்தைப் பற்றி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே விளா எழுப்பியிருக்கிறார்கள். மெட்டல் பாக்ஸ் நிறுவனம் நீண்டகாலமாக மூடப்பட்டு, தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். இதை இந்த அரசு பொறுப் பேற்ற உடனேயே அரசினுடைய கவனத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூலமாக வந்தவுடன், பி.ஐ.எஃப்.ஆர். டெல்லியிலே நடைபெற்ற விசாரணையின்போது முதல் முயற்சி யாக அரசாங்கத்தின் சார்பாக மாநிலத் தொழிலாளர் நல அணை யாளர் அனுப்பி வைக்கப்பட்டு தொழிலாளர்களுடைய பங்கு பற்றி அங்கு எடுத்துச் சொல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. தொடர்ந்து நாங்கள் அதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருக் கிறோம். நிர்வாகத்தோடும் அரசின் சார்பாக பேச்சு வார்த்தை

[திரு. பொன். முத்துராமலிங்கம்] [1989 பிப்ரவரி 21

நடைபெற இருக்கிறது. எனவே ஒரு நல்ல சூழ்நிலை உருவாகும் என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. உ. ரா. வரதராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அருள்கூர்ந்து திரு. வரதராசன் அவர்கள் உட்காரவேண்டும். அதுவே அவசரப்பொது முக்கியம் வாய்ந்தது அல்ல. உங்களுக்காக ஒரு வாய்ப்புத்தான் கொடுத்தேன். அந்த வாய்ப்பை யிருதியும் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது.

**திருமதி எஸ். பி. சற்குணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 'மெட்டல் பாக்ஸ்' நிறுவனம் பற்றி அருமை உறுப்பினர் குறிப்பிட்டு ஒரு கேள்வியை எழுப்பி இருந்தின்றார்கள். இது என்னுடைய தொகுதியைச் சார்ந்த நிறுவனமாக இருந்தின்ற காரணத்தினால், தொழிலாளர்களுடைய நன்மையைக் கருதி, ஏற்கெனவே மாட்டிய மாநிலத்திலே தேவநார் பகுதியிலே இருக்கின்ற ஒரு 'டின் பேக்டரியும், மங்களூர் பகுதியிலே இருந்தின்ற 'டின் பேக்டரி'-யும் மூடப்பட்ட நிலைமை மாற்றப்பட்டு, அங்கே வாசாங்கத்தின் சார்பாக பேச்சுவார்த்தை நடத்தி, அந்த நிறுவனம் மீண்டும் நடைபெறுகின்ற சூழ்நிலை ஏற்பட்டு தொழிலாளர்களை நன்மை அடைந்திருக்கின்றார்கள். எனவே அரசு சார்பில் நடத்தப்படுகின்ற பேச்சு வார்த்தையில், இதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மெட்டல் பாக்ஸ்' நிறுவனத்தினுடைய பல்வேறு கிளைகள் பல மாநிலங்களில் பரவி இருக்கின்றன. இதிலே மராட்டிய மாநிலத்திலே உள்ள தொழில் நிறுவனம் பேச்சுவார்த்தை நடத்தி சுமூகமான முடிவினை ஏற்படுத்தியிருக்கிறது. அதையும் அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளுமா என்று மினா எழுப்பியிருந்தார்கள். நிச்சயமாக அவற்றையும் கவனத்திலே எடுத்துக்கொண்டு இணக்கமான முடிவுகள் ஏற்படுவதற்கு அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1989 பிப்ரவரி 21]

**(அ) இராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் இலங்கைக்குச் சென்றிருப்பதாக வந்துள்ள செய்தி—தொடர்ச்சி.**

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கோபால் சாமி அவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது தொடர்பாக வினா எழுப்பப்பட்டு முதலமைச்சர் அவர்களால் விடை தரப்பட்டு விட்டது. உறுப்பினர் அருள்கூர்ந்து அமரவும். (குறுக்கீடு) முழுமையாக விடையை முதலமைச்சர் அவர்களே தந்துவிட்டார்கள். அந்நேரடு அது முடிந்துபோய் விட்டது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புது information .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிலே ஒன்றும் புது 'Information' இல்லை (குறுக்கீடு).

**(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்—தொடர்ச்சி.**

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இரண்டு உரிமைப் பிரச்சினைகளை நான் கொடுத்திருந்தேன். ஒன்று பாரதப் பிரதமர் அவர்கள் பேசாத பேச்சைப் பற்றிப் பேசியபோது அது பற்றிய நகலை நீங்கள் வாங்கித் தருவதாகச் சொல்லியிருந்தீர்கள். இன்னொன்று, நீதிமன்றத்திலே குறிப்பிட்ட தீர்ப்பைப் பற்றியது. அது இரண்டில் என்ன ஆயிற்று என்று சொன்னால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொலைக் காட்சித் துறைக்கு எழுதப்பட்ட மடலுக்கு இன்னும் விடை வரவில்லை. இரண்டாவது பிரச்சினை தொடர்பாகத் தொடர்புடைய உறுப்பினருக்கு எழுதப்பட்டு இருக்கிறது. அதனுடைய விடை வந்ததும் உங்களுக்கு அளிக்கப்படும். இப்போது நான் ஏற்கெனவே இன்று நிறைவு நாள் என்ற அளவில் அதிக வாய்ப்புகள் அளித்திருக்கிறேன். அருள்கூர்ந்து, எவரும் அமருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[1989 பிப்ரவரி 21

**(ஊ) வட ஆற்காடு மாவட்டம் பள்ளூர் கிராமத்தில் சத்துணவு உண்ட குழந்தைகள் பாதிப்பு.**

**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தாங்கள் இங்கே சொன்னதுபோல இன்றைக்கு கடைசி நாள். நான் ஏற்கெனவே இரண்டு தீர்மானங்கள் கொடுத்திருந்தேன். ஒன்று ஒத்திவைப்புத் தீர்மானம், மற்றொன்று கவன ஈர்ப்புத் தீர்மானம். அவைகள்பற்றி தங்கள் அறையில் வந்து கேட்டேன். தாங்களும் அனுமதித்திருக்கிறீர்கள். கடந்த 15 ஆம் தேதி வட ஆற்காடு மாவட்டம், பள்ளூர் கிராமத்தில் சத்துணைக் கூடத்தில் உணவு அருந்திய குழந்தைகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு போலைத் தலைவர்:** நான் என் அறையில் அனுமதித்தேன் என்று உறுப்பினர் சொல்ல முடியுமா? இது தவறான செய்தி. நான் உறுப்பினரை அவையில் எழுப்பச் சொல்லி அனுமதித்தேனா? கவன ஈர்ப்புத் தீர்மானம் தரப்பட்டிருக்கிறது. தொடர்புள்ள அமைச்சரிடம் அது தரப்பட்டிருக்கிறது. இதுபோன்ற தவறான தகவலைச் சொன்னால் மண்டிப் பாக அனைத்தையும் மறுக்க வேண்டியிருக்கும்.

**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆண்டு புதிதாக நாங்கள் வந்திருக்கிறோம். தாங்கள் தயவுசெய்து அடிக்கடி எங்களை மிரட்டி உட்கார வைக்க வேண்டாம்.

**மாண்புமிகு போலைத் தலைவர்:** புதிதாக வந்திருக்கிற உறுப்பினர்கள், நன்றாக அனுபவம் வாய்ந்தவர்கள் எப்படிச் செயல் படுகிறார்கள் என்பதை நன்கு கூர்ந்து கவனித்து அதற்குப் பிறகு இங்கே களத்தில் குதித்தால் நன்றாக இருக்கும். (சிரிப்பு)

**4. ஒழுங்குப் பிரச்சினை.**

**உறுப்பினர் ஒருவர் தெரிவித்த தகவலை நிருபிக்கும் பொறுப்பு.**

**திரு. ரா. சொக்கர்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, On a point of order இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் தவறான தகவலைக் கொடுத்து, அந்தத் தகவல் தவறு என்று மற்ற உறுப்பினரால் சுட்டிக் காட்டப்பட்டால் அது தவறு அல்ல என்று நிருபிக்கும் கட்டாயமும், கடமையும் உறுப்பினரைச்



1989 பிப்ரவரி 21] [திரு. ரா. சொக்கர்]

சார்ந்ததா, அல்லது போலைத் தலைவரைச் சார்ந்ததா என்று நான் அறிய விரும்புகிறேன். காரணம், ஏற்கெனவே பாரதப் பிரதமர் அவர்களைப் பற்றி இங்கே சொல்லியதற்கு அது சரியல்ல என்று நிருபிப்பதற்கான ஆதாரங்களைக் கேட்டிருப்பதாக இங்கே போலைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள்.

**மாண்புமிகு போலைத் தலைவர்:** யார் அந்தப் பிரச்சினையை எழுப்பினாரோ அவருக்கு நான் விடை சொல்லியிருக்கிறேன். அதுபற்றிப் போலைத் தலைவர் விடை சொல்லிய பிறகு மீண்டும் போலைத் தலைவர் விளக்க வேண்டுமா?

**3. தகவல் கோரல்—தொடர்ச்சி.**

**(ஊ) வட ஆற்காடு மாவட்டம் பள்ளூர் கிராமத்தில் சத்துணவு உண்ட குழந்தைகள் பாதிப்பு—தொடர்ச்சி.**

**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சத்துணவு சாப்பிட்ட சுமார் 300 குழந்தைகள் மயக்கமுற்ற நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். இது சமீபகாலமாக நடைபெறும் ஒன்றாக இருக்கிறது. சத்துணவுக் கூடங்களில் சுகாதார வசதிகள் சரியாக இல்லை. பாத்திரங்களில் ஈயம் பூசுகின்ற நிலைமை இல்லை. இப்படிப்பட்ட காரணத்தால் பல்வேறு பாதுகாப்பற்ற நிலை பல்வேறு கிராமங்களிலுள்ள சத்துணைக் கூடங்களில் இருப்பதால் அங்கெல்லாம் ஆபத்தான சூழ்நிலையில் சத்துணவுக் கூடங்கள் இயங்குகின்றன. இதுப்பற்றிப் பத்திரிகைகளில் கூட செய்தி வந்திருக்கிறது. புதிதாகப் பொறுப்பேற்றிருக்கின்ற அரசு சத்துணவுக் கூடங்களை உடனடியாகப் பாதுகாப்பாக வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். சத்துணைவைப் பாதுகாப்பான இடங்களில் இனிமேல் தயார் செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த வகையில் ஏழைப் பிள்ளைகளின் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பான் ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

*** மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், நெமிலி சரகம் பள்ளூர் கிராமத்தில், உள்ளாட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில்

[திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்] [1989 பிப்ரவரி 21

220 மாணவர்கள் சத்துணவு சாப்பிடலாம் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 15—2—1989 அன்று 220 குழந்தைகள் சாப்பிட உணவு தயார் செய்யப்பட்டது. பகல் 1-30 மணிக்கு மதிய உணவு பரிமாறியபோது சிறிய அரளை ஒன்று சாம்பாரில் விழுந்ததைக் கண்ட உடனே உணவு பரிமாறுவது நிறுத்தப்பட்டது. உடனடியாக அருகிலுள்ள காஞ்சிபுரம் மருத்துவமனைக்கு பாதிக்கப்பட்ட அந்த மாணவர்கள் எடுத்துச் செல்லப்பட்டனர். அங்கே அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப் பட்டது. அதில் 93 பேர்களுக்கு மதிய உணவு வழங்குவது உடனடியாக நிறுத்தப்பட்டது. சிகிச்சை பெற்ற 116 பேர் உடனடியாக, திரும்ப வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். 5 பேர் மட்டும் சிகிச்சைக்காகப் பதிக்கைகளில் அனுமதிக்கப்பட்டு 16—2—1989 அன்று அவர்களுக்கும் எந்த ஆபத்தும் இல்லை என்று மருத்துவர்கள் அவர்களையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டனர். எனவே, சத்துணவு சாப்பிட்ட அவர்களுக்கு எந்த வகையிலும், எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு சம்பந்தப் பட்ட அதிகாரிகள் அனைவருக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பப் பட்டிருக்கிறது. சத்துணவு சமைக்கப்படுகிற இடம், பரிமாறப் படுகிற இடம் தூய்மையாக வைத்துக்கொள்ளப்பட வேண்டுமென்றும், சத்துணவு சமைக்கப்பட்டு, பரிமாறுவதற்கு முன்பாக சத்துணவு வகைகள் எல்லாம் நல்லமுறையில் மூடி பாதுகாப்பாக வைத்துக்கொள்ளப்பட வேண்டுமென்றும், அங்கு பணியாற்றுகிறவர்கள் இந்த விஷயத்தில் சற்று எச்சரிக்கையாக இருந்து செயல் பட வேண்டுமென்றும் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, இனி மேல் இது போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாது என்று மாண்புமிகு உறுப்பினருக்கு மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்கள் மூல மாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மு.ப. 9-30)

**(ஈ) மூடப்பட்டுள்ள பஞ்சாலைகளைத் திறக்க நடவடிக்கை.**

திரு. இரா. மோகன்: மேலவைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டத் தொடருடைய கடைசி நாள் இன்று. மிக முக்கியமான பிரச்சினையை உங்கள் மூலமாக அரசின் கவனத்திற்கும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். மூடப்பட்ட பஞ்சாலைகளின்



1989 பிப்ரவரி 21] [திரு. இரா. மோகன்]

பிரச்சினை அது. 30க்கும் மேற்பட்ட பஞ்சாலைகள் மூடப் பட்டிருக்கின்றன. அவற்றைத் திறப்பதற்கு பேச்சுவார்த்தை இந்த மாத இறுதிக்குள் நடத்த இருப்பதாக மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்கள் அறிவித்திருக் கிறார்கள். என்றைக்குப் பேச்சு வார்த்தை நடந்துகொண்டு இருக் கிறது? யார் யாரை அழைத்துப் பேச இருக்கிறீர்கள், என்ன பேச்சு வார்த்தை நடைபெறப் போகிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். காரணம், ஆயிரக்கணக்கான தொழி லாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பல ஆலைகள் ஆண்டுக் கணக்கில் மூடப்பட்டிருக்கின்றன; பல பஞ்சாலைகள் மாதக் கணக்கில் மூடப்பட்டிருக்கின்றன . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறீர்கள், தெரிவித்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இன்று நிறைவுநாள் என்ற காரணத்தாலே மூடிய ஆலைகளைப் பற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கருது கிறார். மூடிய ஆலைகள் 30 அல்ல. சமீபத்திலே எடுக்கப் பட்ட கணக்கின்படி 25 ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அதிலே வேலையில்லாமல் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக் கெல்லாம் வேலை வாய்ப்பு வழங்க வேண்டுமென்ற முடிவு படையில் இந்த அரசு தொடர்ந்து முயற்சி எடுத்துக்கொண்டிருக் கிறது. வருகிற 25 ஆம் தேதி தொழிற்சங்கத் தலைவர்களையும், நிர்வாகத்தையும் அழைத்து, சென்னையிலே பேச்சு வார்த்தை நடைபெற இருக்கிறது. தொடர்ந்து இந்த அரசு மூடிய ஆலை களைத் திறப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(உ) கல்லணைக் கால்வாயிலிருந்து தண்ணீர் விடவேண்டியதன் அவசியம்.**

திரு. ஆர். சிங்காரம்: மேலவைத் தலைவரவர்களே, நான் மிக அவசரமான பிரச்சினை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். தாங்கள் அதை 5(ii)-வது விதியின்கீழ் மாற்றி இருக்கிறீர்கள். அது சபையில் வரவில்லை. அது மிக மிக அவசரமான விஷயம். அங்கே "காரீப்" பயிர்கள் கருகிக்

[திரு. ஆர். சிங்காரம்] [1989 பிப்ரவரி 21

கொண்டிருக்கின்றன. கல்லணைப் பகுதியில் பேராவூரணி, பட்டுக்கோட்டை, திருவோணம் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் பயிர்கள் கருகிக் கொண்டிருக்கின்றன. நெற் கதிர்கள் பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் மிக அவசரமாகத் தண்ணீர் வேண்டுமென்று அன்றே பேசினேன். அதற்கு பதில் இல்லை. 16-ஆம் தேதி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதற்கும் பதில் இல்லை. அதை 50-வது விதியின்கீழ் மாற்றினீர்கள். அதற்கும் பதில் இல்லை. அந்த கல்லணை கால்வாயில் தண்ணீர் விடப்படுமா? எவ்வளவு தண்ணீர் கொடுக்கப்போகிறார்கள்? கொடுக்க முடியுமா? முடியாதா? இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்தப் பகுதியில் விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தந்தி மேல் தந்தி அனுப்புகிறார்கள். தயவுசெய்து விரிவான அறிக்கை தர அன்புடன் வேண்டுகிறேன். அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் எல்லாம் போன் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொன்னால் விடை வரும். விளக்கமாகச் சொன்னால் அனுமதியே வாது. (குறுக்கீடு) உங்களுடைய கேள்வி அனைவருக்கும் புரிகிறது. விடை வருகிறது.

*** மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, அங்கத்தினர் இந்த அவையில் கல்லணைக் கால்வாயில் தண்ணீர் விடப்படுமோ என்று கேட்டபோது, அப்போதே ஒரு மணி நேரத்திற்குள் அதிகாரிகளோடு கலந்து பேசி, அந்தப் பகுதியில் தண்ணீர் விடப்படும் என்று தெரிந்ததும், நானும் அங்கத்தினர் அவர்களை அழைத்து, நாங்கள் பேசிய பிறகு நான் சேகரித்த விவரம், இது என்று உறுப்பினர் அவர்களிடம் தெரிவித்திருக்கிறேன். 3 டி.எம்.சி. தண்ணீரை நாங்கள் திறந்துவிட இருக்கிறோம். அது கடைமடைப் பகுதிக்கு வர காலதாமதம் ஏற்பட்டிருக்கலாம். எப்படியும் தண்ணீர் வரும்.

### (ஐ) மதுரை மாவட்டத்தில் தண்ணீர் இல்லாததால் பயிர்கள் பாதிப்பு.

**திரு. எஸ். டி. உகம்சந்த்:** தலைவரவர்களே, நேற்றையதினம் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. மதுரை மாவட்டத்தில் சுமார் 23,000 ஹெக்டேர் நிலத்தில், தண்ணீர் இல்லாத காரணத்தால், பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன: அங்கேயுள்ள



1989 பிப்ரவரி 21] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பத்திரிகைகளுக்கு சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் வழங்கவும், அந்தப் பயிர்கள் காப்பாற்றப்படவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அரசால் அங்கத்தினருடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

### (ஒ) உசிலம்பட்டி, திருமங்கலம் பகுதிகளை வறட்சிப் பகுதிகளாக அறிவித்து நிவாரணம் வழங்குதல்.

**திரு. பி. என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உசிலம்பட்டித் தொகுதியில் வாழ்கிற விவசாயிகளைப் பற்றிய அவசர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினையை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

உசிலம்பட்டித் தொகுதியில் கடந்த 2 போகங்களாக நெல் அறுவடை செய்யப்படாமல் பயிர்களெல்லாம் காய்ந்துவிட்ட காரணத்தால் பல்லாயிரக்கணக்கான விவசாயப் பெருமக்கள் அந்தத் தொகுதியிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். பருத்தி சாகுபடியும் சென்ற ஆண்டு முழுமையாகப் பாதிக்கப்பட்டு விட்டது. திருமங்கலம் பகுதியில் பத்தாயிரக் கணக்கான ஏக்கர் நெல் விளைச்சலும் முழுமையாகப் பாதிக்கப்பட்டு விட்டது. அதன் காரணமாகவே தொகுதியிலுள்ள ஏழை எளிய விவசாய மக்கள் தஞ்சை மாவட்டத்தையும் மற்ற பகுதிகளையும் நோக்கி மூட்டை முடிச்சுகளோடு நாள்தோறும் தூற்றுக்கணக்கில் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்தப் பகுதி மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் அந்தப் பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவித்து, நிவாரணப் பணிகள் அரசால் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை நானும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

### (ஓ) தஞ்சை மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை உடனடியாக எடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியம்.

**திரு. இரெ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக ஒரு முக்கியமான பிரச்சினையை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் இப்போது கொண்டு வருகிறேன்.

[திரு. இரா. இராசமாணிக்கம்] [1989 பிப்ரவரி 21

அவரிடத்திலிருந்து பதிலும் வரும் என்று எதிர்பார்க்கிறேன். என்னுடைய தொகுதியில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகக் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள்—பல்லாயிரக்கணக்கான மூட்டைகள்—லாரிகள் கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக ரோடுகளிலேயே அடுக்கி வைக்கப் பட்டிருக்கின்றன. ஒரு மழை பெய்தாலும் அவ்வளவு மூட்டை களும் முளைத்துப் பாழாகிவிடும். ஆகவே, அந்த மூட்டைகளை அங்கே இருந்து எடுத்துச் செல்வதற்கு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான லாரிகளையெல்லாம் தஞ்சை மாவட்டத்திற்கு அனுப்பி வைத்து, ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். அப்படியில்லையென்றால் மூட்டைகளை எடுக்க மாற்று ஏற்பாடாக வேறு லாரிகளை ஏற்பாடு செய்து கொடுக்கவும், அதைப்போலவே நுகர் பொருள் வாணிபக் கழகத் திற்குக் கொண்டு செல்லப்படுகிற நெல்லை உடனடியாக வாங்கு வதற்கான ஏற்பாட்டையும் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர் கள் செய்வாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

* **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல, தஞ்சை மாவட்டத்தில் கொள்முதல் பணிகள் மின்னல் வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் கூட, அங்கே நெல் மூட்டைகளை எடுத்துச் செல் கிற பிரச்சினையில் அங்கே இருக்கிற லாரி உரிமையாளர்கள் இது தான் சந்தர்ப்பம் என்று கருதி அதிகமான பணத்தைக் கேட்டு, முதலில் தகராறு செய்தார்கள். உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு, கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை எந்தக் காரணத்தைக் கொண்டும் சாலை யோரங்களிலே அடுக்கி வைக்கக்கூடாது என்றும், உடனுக்குடன் அவற்றை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார் கள். மேலும் மிட் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான லாரிகள், சிலில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டுக்குச் சொந்தமான லாரிகள் என்று எதுவாக இருந்தாலும் அவற்றை அனுப்பி வைக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்ளப்பட்ட நேரத்தில், 29 லாரிகள்—சிலில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான லாரிகள்—அங்கே உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டு அந்தப் பணியிலே ஈடு படுத்தப்பட்டிருக்கின்றன. அதுவும் போதாத காரணத்தால், அருகிலுள்ள மாவட்டங்களிலிருந்து லாரிகளைக் கொண்டு போய்



1989 பிப்ரவரி 21] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

நெல் மூட்டைகளை ஏற்றிச் செல்ல ஏற்பாடு செயயப்பட்டிருக் கிறது. இதற்குப் பின்னும் ஏதேனும் புகார்கள் இருக்குமானால் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசியாக திரு. செஞ்சி இராமச்சந்திரன் அவர்கள்.

## (ஒள) திண்டிவனம், செஞ்சி பகுதிகளில் குடிநீர்த்தட்டுப்பாடு.

திரு. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுக்கால மாக மழை பொய்த்துவிட்டதன் காரணமாக அங்கே இருக்கிற விவசாயிகள் வேலை இல்லாமல், பெங்களூருக்கும் சென்னைக்கும் சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த விவசாயிகள் எல்லாம் வேலையைப் பெறுகிற வகையிலும், அந்தப் பகுதியில் வாழ்கிற விவசாயிகளுக்கு நன்மை பயக்கிற வகையிலும் அந்தப் பகுதியில் நில வரியைத் தள்ளுபடி செய்தும், கடன் தள்ளுபடி செய்தும் சலுகைகளைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் திண்டிவனம், செஞ்சி ஆகிய பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை மிக அதிகமாக இருக்கிறது. எனவே அந்த நிலையைப் போக்க, தற்காலிகத் தேவையாக அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

(மூன்பகல் 9-40)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினை யைக் குறித்து இரண்டு நாட்களுக்கு முன்பாகத் தமிழகத்திலுள்ள நீர்த் துறையைச் சார்ந்த பொறியாளர்கள் அனைவரையும் அழைத்து, உடனடியாக 7 நாட்களுக்குள் அந்தந்தப் பகுதி களுடைய தேவையைப்பற்றி ஒரு அறிக்கையை அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதுமட்டு மல்லாமல், ஆங்காங்கே குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே, சுடிய விரைவில் அந்தந்தப் பகுதிகளுடைய குடிதண்ணீர்ப் பிரச்சினை யைத் தீர்க்கிற வகையில் செயல்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1989 பிப்ரவரி 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து அனைத்து உறுப்பினர்களும் அமருமாறு கேட்டுக் கொள்கிறேன். இவிமேல் யாருக்கும் எந்த அனுமதியும் இடையாது. (குறுக்கீடு) ஏற் கெனவே 40 மணித்துளிகள் ஒதுக்கித் தந்திருக்கிறேன். ஏற் கெனவே உங்களுக்கு வாய்ப்பு அளித்திருக்கிறேன். நீங்கள் அமர வேண்டும். பேரவைத் தலைவர் எழுந்து நிற்கும்போது நின்று கொண்டிருப்பது முறையல்ல.

## கவன ஈர்ப்பு.

### (அ) அரிசிவிலை உயர்வு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்த கவன ஈர்ப்பு. திருமதி பாப்பா உமாநாத் அவர்களுக்கு மாறாக திரு. கோ. வீரையன் அவர்கள் அக்கவன ஈர்ப்பை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருவார்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, "மாநிலம் முழுவதும் வெளி மார்க்கெட்டில் அரிசி விலை உயர்வு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர் களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

### அறிக்கை.

1. தமிழ்நாட்டில் வெளிச் சந்தையில் பல்வேறு ரக அரிசி வகைகளின் சராசரி சில்லறை விலை கீழே தரப்பட்டுள்ளது.

1 கிலோவின் விலை

| | 8-2-89 வார முடிவில் ரூ.பை. | 11-1-89 வார முடிவில் ரூ.பை. | 10-2-88 வார முடிவில் ரூ.பை. |
|---|---|---|---|
| புழுங்கல் அரிசி | | | |
| சன்ன ரகம் | 5.14 | 5.00 | 4.73 |
| சாதாரணம் | 4.61 | 4.50 | 4.30 |
| பச்சரிசி | | | |
| சன்ன ரகம் | 5.01 | 4.89 | 4.81 |
| சாதாரணம் | 4.48 | 4.47 | 4.11 |



1989 பிப்ரவரி 21] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

2. நடப்பு ஆண்டில் தமிழகத்தில் வடகிழக்குப் பருவ மழை முழுமையான அளவின்றி பொய்த்தமையால், மாவட்டங்களின் பயிர்கள் பாதிக்கப்பட்டு விளைச்சல் பெருமளவில் குறைந் துள்ளது. இதன் காரணமாக வட ஆற்காடு, மதுரை, காமராசர், திருநெல்வேலி மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் 5 சதவீதம் முதல் 14 சதவீதம் வரை விலை கூடியுள்ளது. இதர மாவட்டங் களில் அரிசி வகைகளின் விலைகள் சற்றுக் கூடியும், குறைந்தும் காணப்பட்டன. சென்ற ஆண்டு விலைகளுடன் ஒப்பிடும்போது எல்லா மாவட்டங்களிலும் அனைத்து ரக அரிசியின் விலைகள் கூடியுள்ள காரணத்தால் மாநில சராசரி விலைகள் ஓராண்டு காலத்தில் 4 சதவீதம் முதல் 9 சதவீதம் வரை கூடியுள்ளது.

3. மைய அரசின் தொகுப்பிலிருந்து தமிழ்நாட்டிற்கு இம் மாதம் வழங்கப்பட்ட அரிசியின் அளவு பாதியாக குறைக்கப் பட்டதாலும் பொதுவாக அரிசியின் விலைகள் கூடியுள்ளன. அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்தில் விளைச்சல் நன்றாக இருப்பதாகத் தெரியவருகிறது. அனுமதியின்பேரில் அரிசியை தமிழ்நாட்டிற்கனுப்ப தனியார் வணிகர்களுக்கு ஆந்திர அரசு ஒப்புதல் அளிக்குமானால் அரிசியின் விலை தமிழ்நாட்டில் குறையும் வாய்ப்புள்ளது என்று நம்பப்படுகிறது.

4. இவ்விலையேற்றம் மேலும் அதிகரிக்காமல் இருக்க பதுக்கல், கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளும் பொதுப் பங்கீட்டு முறையில் சீரிய கவனமும் செலுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொடர்புடைய உறுப்பினர் இரண்டு வினாக்களை எழுப்பலாம்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர் களிடமிருந்து நான் அறிந்து கொள்ள விரும்புவது, அவையில் வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் அரிசி விலை 8-2-1989 வார முடிவில் உயர்ந்திருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு இருந்த விலைக்கும், இந்த ஆண்டின் விலைக்கும் ஏறத் தாழ 14 சதவீதம் வரையில் கூடியுள்ளதாக குறிப்பிடப்பட்டிருக் கிறது. வட ஆற்காடு, மதுரை, காமராசர், திருநெல்வேலி மற்றும் சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் இந்த விலை உயர்வு ஏற்பட் டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விலை உயர்வை

[திரு. கோ. வீரையன்] [1989 பிப்ரவரி 21

கட்டுப்படுத்த ஆந்திர மாநில அரசு ஒப்புக் கொண்டால் அரிசி வரத்து தருவிக்கலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆந்திர மாநில அரசிடம் ஒப்புதலைப் பெற்று அரிசி கொண்டு வருவதற்கு இந்த விலை உயர்வை நிரந்தரமாகக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கையெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, பொதுவாக இந்த ஆண்டு வடகிழக்குப் பருவ மழை தவறியதன் காரணமாகவும், மத்தியத் தொகுப்பிலிருந்து நமக்கு வர வேண்டிய அரிசியில் 50 சதவீதம் குறைந்து விட்டதன் காரணமாகவும், மத்திய அரசாங்கம் திடீரென்று ஒரு குவிண்டாலுக்கு சுமார் 40 பைசா அளவிற்கு விலையை உயர்த்தியதன் காரணமாகவும் வியாபாரிகள் மத்தியிலே மத்திய அரசாங்கம் விலை உயர்த்தி இருக்கும்போது நாம் உயர்த்தினால் என்ன என்ற எண்ணம் வந்தது. உடனடியாக நம்முடைய டி.ஜி.பி. புட் செல் அவர்களை அனுப்பி மத்தியத் தொகுப்பிலிருந்து கொடுக்கக்கூடிய அரிசியினுடைய விலை உயர்விற்கும், மளிகைக் கடைகளில் விற்கக்கூடிய அரிசியினுடைய விலை உயர்விற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை, என்வே நீங்கள் விலையை உயர்த்தக்கூடாது, அப்படி உயர்த்தினால் அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும், ஒவ்வொரு வியாபாரியினிடத்தில் இருக்கக்கூடிய அரிசியினுடைய அளவை ஆராய வேண்டியிருக்கும் என்று சொன்னதன் பேரில் அந்த விலையேற்றம் தடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு, வட ஆற்காடு, காமராசர், மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 5 முதல் 14 சதவீதம் உயர்ந்திருக்கிறது. தமிழ்நாடு முழுவதற்கும் 4 முதல் 9 சதவீதம் வரையில்தான் அரிசியின் விலை பொதுச் சந்தையில் உயர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொன்னதைப் போல அதைக் கட்டுப் படுத்துவதற்காக நம்முடைய டி.ஜி.பி. புட் செல் மூலமாகவும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகவும் பதுக்கலைக் கண்டுபிடிப்பது, கடத்தலைத் தடுப்பது போன்ற நடவடிக்கைகள் மூலம் நிச்சயமாக விலை ஏறாமல் இந்த அரசாங்கம் பார்த்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1989 பிப்ரவரி 21]

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கக் கூடிய கஷ்டங்கள் எனக்குப் புரிகிறது. பருவ மழை தவறியதால் பாதிப்பு ஏற்பட்டது. மத்திய அரசு கொடுக்க வேண்டியதில் பாதியைக் குறைத்து விட்டதால் கஷ்டங்கள் ஏற்பட்டன. மத்திய அரசு விலையை உயர்த்தியிருப்பதால் இங்கே கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் காரணங்கள் எல்லாம் சேர்ந்து கஷ்டங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. 10 சதவீதம் விலை உயர்வு என்பதே வாங்கிச் சாப்பிடுகிற மக்களுக்குச் சிரமமான காரியமாக இருக்கும். எனவே வாங்கிச் சாப்பிடக்கூடிய மக்களுடைய நலனை அடிப்படையாகக் கொண்டு, இந்தக் கஷ்டங்களைச் சமாளிப்பதற்கு உரிய நடவடிக்கையை அரசு எடுக்க முன்வருமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளைப் பரிசீலிப்பதற்காக அண்டை மாநிலமான ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டுக்கு தனியார் வணிகர்களுக்கு அரசு ஒப்புதல் மூலமாக அரிசியைக் கொண்டு வருவதற்கு அந்த அரசாங்கத்தோடு இந்த அரசாங்கம் பேசுவதாக இருக்கிறது. ஏற்கெனவே ஆந்திர முதலமைச்சரோடு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் அரிசிப் பிரச்சினை குறித்து பேசியிருக்கிறார்கள். தமிழகத்திலே அப்படி அரிசிப் பஞ்சமோ, தேவையோ ஏற்படுமானால் உதவுவதாகவும் வாக்களித்திருக்கிறார்கள். அதை அடிப்படையாகவைத்துக்கொண்டு, விரைவில் ஆந்திர அரிசி தமிழகத்திற்கு வர ஆரம்பித்து விட்டால், நிச்சயமாக விலை குறையும். அதற்கான ஏற்பாடுகளை இந்த அரசாங்கம் செய்யும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து கவன ஈர்ப்பு முடிந்தபிறகு நீங்கள் பிரச்சினையை எழுப்பலாம்.

## (ஆ) திருவாரூரில் உள்ள வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகளில் ஏற்பட்டுள்ள பழுதுகள் குறித்து.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம் கொரடாச்சேரி ஒன்றியம் பவுத்திரமாணிக்கம் ஊராட்சியில் உள்ள அரசு குடியிருப்புகள், திருச்சி நிர்வாக செயற் பொறியாளர் அலுவலகத்தால் சீர் செய்யப்படாததால் குடி

[திரு. மா. மணிமாறன்] [1989 பிப்ரவரி 21

நீரும் கழிவுநீரும் கலந்து குடியிருப்பில் உள்ளோர் நோய்வாய்ப் படும் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, மேலவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை.**

மேற்படி குடியிருப்புகள், தஞ்சாவூர் மாவட்டம், கொரடாச்சேரி ஒன்றியம், திருவாரூரில் உள்ளன. இங்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள தாசில்தார், மாவட்ட முன்சீப், சப்-மாஜிஸ்டிரேட், தொழிற்சாலை ஆய்வாளர் ஆகியோருக்கான குடியிருப்புகளை பொதுப்பணித் துறைக்கு மாற்றம் செய்வதற்கு கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது. மாற்றம் செய்யப்படுவதற்குத் தேவைப்படும் விரிவான விவரங்களின் வரைபடங்களும் வீட்டு வசதி வாரியத்தினால் தஞ்சாவூர் பொதுப்பணித்துறை கோட்டப் பொறியாளருக்கு அனுப்பப்படாத காரணத்தால், இக்குடியிருப்புகள் பொதுப்பணித் துறை வசம் ஒப்படைக்கப்படவில்லை. மேலும், இக்குடியிருப்புகளை நேரில் ஆய்வு செய்து, முதல் பழுதுபார்த்தல் மதிப்பீடு தயார் செய்து, அவற்றிற்கு அரசாணை பெற்று, பழுதுபார்த்தல் வேலைகள் பொதுப்பணித்துறையால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இது சம்பந்தமாக வீட்டு வசதி வாரியப் பொறியாளர்களுடன் தொடர்பு கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்திலிருந்து பொதுப் பணித் துறைக்கு கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. பல ஆண்டுக்காலத்திற்கு முன்பு கட்டப்பட்ட அந்தக் கட்டிடம் சுகாதாரத்திற்குப் புறம்பாக இருக்கிறது. குடிநீரும், சாக்கடைக் குழாய்கள் உடைந்த காரணத்தினால், அந்த நீரும், ஒன்றாகக் கலந்து வருகிறது. எனவே, இந்தச் சீர்கேட்டைப் போக்குவதற்கு விரைந்து பொதுப்பணித்துறை இதிலே முன்வந்து, வீட்டு வசதி



1989 பிப்ரவரி 21]

வாரியத்திலிருந்து இதை எடுத்து, விரைவாக இந்தச் சீர் கேட்டைப் போக்க நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, இந்தக் குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டவை. இன்னும் அவர்கள் கையில்தான் இருக்கிறது. அதை பொதுப்பணித் துறைக்கு ஒப்படைக்கவேண்டும் என்று நாங்கள் கேட்டிருக்கிறோம். அவர்கள் ஒப்படைப்பது என்று சொன்னால், அந்தக் குடியிருப்புகளுக்கான செலவுகள், வரைபடம், தரைபடம், இது குறித்த எல்லாவற்றையும் எங்களுக்கு ஒப்படைத்த பிறகுதான் பொதுப்பணித்துறையினர் அங்கே சென்று பார்த்து, அதற்கு முதலிலே என்னென்ன ரிப்பேர்கள் செய்யவேண்டும் என்ற கணக்கை எல்லாம் பெற்று, அது குறித்து அரசுக்கு அறிக்கைகள் அனுப்பி, பிறகு அரசு ஆணை பெற்று, அது குறித்த ரிப்பேர்கள் செய்யப்படும். எனவே பொதுப் பணித்துறையினர் கேட்ட அந்த விவரங்கள் வீட்டு வசதி வாரியத்திடமிருந்து இன்னும் எங்களுக்கு வரவில்லை. திருநாவுக்கரசு அங்கத்தினர் அவர்கள் இதன் மீது கொண்டிருக்கிற அக்கறையை முன்னிட்டு, நானே, பொதுப்பணித் துறை அதிகாரிகளை அனுப்பி, வீட்டு வசதி வாரியத்திடமிருந்து அத்தகைய தகவல்களைப் பெற்றுக் கொள்ளும்படி அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன். எனவே அங்கத்தினருடைய கவலையைத் தீர்க்கிற அளவிற்கு பொதுப்பணித்துறை விரைந்து நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. இன்று இந்த அவையில் வைக்கப்பட்டிருப்பவை, 2 சட்டமுன்வடிவுகளும், ஒரு அரசினர் தனித் தீர்மானமும், எஞ்சியிருக்கின்ற நேரம் 3 மணியும், சில மணித் துளிகளும். எனவே இந்த விவாதத்தில் ஈடுபடுகிற உறுப்பினர்கள் குறைந்த நேரம் எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு சட்ட முன் வடிவையும் முடித்துக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். வாய்ப்புகளை மறுக்கிறோமா அல்லது கருகிறோமா என்பதைவிட, வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்துகிறோமா என்பதில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டு, அடுத்து திரு. அப்துல் லத்தீப் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

[1989 பிப்ரவரி 21

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, இன்று நிறைவு நாளாக இருக்கிற காரணத்தால், இந்தக் கேள்வியை நான் எழுப்ப விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது விரைவு நாளாகவும் இருக்க வேண்டும் என்பது முக்கியம் (சிரிப்பு).

(மு.ப. 9-50)

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (அ) சென்னையில் குடிநீர்த் தட்டுப்பாடு.

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் விவசாயத்திற்குத் தேவையான நீர்ப் பாசன நீர் கிடைக்க வேண்மென்பதற்ககக் குரல் எழுப்பி னார்கள். நான் சென்னை நகரத்தில் இருக்கக்கூடியவன். சென்னை நகரத்திற்குக் குடிநீர் வழங்கக்கூடிய மூலங்களாக இருக்கின்ற புழலேரியிலே கூட இப்போது தண்ணீர் மிகவும் கீழ் மட்டத்திலே இருப்பதாகவும், வெகு விரைவில் மிகப் பெரிய குடிநீர்ப் பஞ்சம் சென்னையிலே ஏற்படும் என்றும் பத்திரிகை களிலே கூட படம் போட்டுக் காட்டியிருக்கிறார்கள். எனவே இனி வரும் வாரங்களிலே குடிநீருக்குப் பெரும் பஞ்சம் ஏற்பட்டு விடுமோ என்ற ஒரு ஐயம் ஏற்படுகிறது. இது குறித்து இந்த அரசு அந்தக் குடிநீர் பஞ்சத்தைப் போக்குவதற்கு மாற்றுத் திட்டங்கள் ஏதாவது வைத்திருக்கிறதா? ஏதாவது தரித நடவடிக்கைகளில் அரசு ஈடுபடுகிறதா? அப்படியென்றால், அந்த விவரங்களை இந்த மன்றத்தில் அறிவிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, முஸ்லீம் லீக் சட்சியைச் சார்ந்த தலைவர் லத்தீப் அவர்கள் சென்னை நகரத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வர். அதே போன்று நானும். 13 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக் கின்றோம். மொத்தம் 4 அமைச்சர்களையும் சேர்த்து 13 உறுப் பினர்கள் சென்னை நகரத்தில் இருக்கின்றோம். அவருக்கு இருக் கின்ற அக்கறை சென்னை நகர மக்கள் மீது எங்களுக்கும் உண்டு. எனவே குடிதண்ணீர் பிரச்சினையை இந்த அரசு நல்ல முறையில் தீர்த்து வைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.



1989 பிப்ரவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே இந்த இரண்டு உறுப்பினர்கள் மட்டும் பேசப் போகிறார்களா? அல்லது 13 உறுப் பினர்களும் பேசப் போகிறார்களா?

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, எல்லோ ருடைய சார்பாகவும் பேச இருக்கிறோம். அமைச்சரவர்கள் ஏதாவது இது குறித்து விளக்கம் தருவார்கள் என்று எதிர்பார்க் கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதுகுறித்து முதலிலே பதில் சொல்லியிருக்கிறேன். "மெட்ரோ வாட்டர்" உட்பட அனைத்து அதிகாரிகளையும் அழைத்துப் பேசியிருக்கிறேன். கூடிய விரைவில் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ, அந்த அளவில் நடவடிக்கைகளை எடுக்கச் சொல்லி யிருக்கிறேன். மீண்டும் மீண்டும் இந்த மாதிரிக் கேள்விகளைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## 6. சட்ட முன்வடிவுகள்.

### (அ) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 4/1989). திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்) இதை முன்மொழிவார்.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1989) ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"

* திரு. ரா. சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நாட்களுக்கு முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்தெந்த வழிகளில் எல்லாம் அரசாங்கத்திற்கு வர

* 20—2—1989 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. ரா. சொக்கர்] [1989 பிப்ரவரி 21

வேண்டிய வரிப் பணம் ஒருசில சலுகைகள் காட்டப்பட்டு. அத்தப் பணம் எல்லாம் அரசாங்கத்திற்கு இழப்பாகி விட்டது என்றும், அதனை நீக்கக்கூடிய வகையில் அரசாங்கத்தினுடைய வருவாயைக் கூட்டக்கூடிய வகையில் விதிக்கப்பட்ட அந்த வரி விதிப்பை அறிவித்த நிலையில், அதை முழு மனதோடு வரவேற்கின்றோம், ஆதரிக்கின்றோம். இருந்தபோதிலும் 'செக்டிஃபைடு ஸ்பிரிட்' என்ற இனத்திற்கு 1983 ஆம் ஆண்டு தக்க காரணம் இல்லாமலும், ஏதோ தவறான உள்நோக்கம் இருக்கிறதோ என்று சந்தேகப்படுகின்ற அளவிலே அதற்கு விதிக்கப்பட்டிருக்கின்ற வரியானது வரி விலக்கு அளிக்கப்பட்டு, அதனால் சுமார் ரூ. 150 கோடிக்கு மேலாக இன்றுவரை நஷ்டமாக அரசாங்கத்திற்கு பெருமான இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்றும் அதனை நீக்கக் கூடிய வகையில் அந்த 'செக்டிஃபைடு ஸ்பிரிட்டிற்கு' மறுபடியும் வரி விதிக்கப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த வரியானது அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பை ஈடுகட்டுகின்ற வகைகளில் 1983 ஆம் ஆண்டிலிருந்தே அதாவது எந்தத் தேதியிலிருந்து இந்தச் சலுகை அளிக்கப்பட்டிருந்ததோ அந்தத் தேதியிலிருந்து இழப்பாக ஏற்படக் கூடிய ஒரு நிதியை மறுபடியும் அரசாங்கத்திற்கு வரக் கூடிய அளவிலே "பின் தேதியிலிருந்து" 'Retrospective effect' ஆக அந்த வரி விதிக்கப்படா விட்டால் நம் மீது, அதாவது நம் மீது என்றால் இந்தப் போவையின் மீது மக்கள் மறுபடியும் இந்த அரசு அந்த உற்பத்தியாளர்களுக்கு சலுகை காட்டுகின்றதோ என்று சந்தேகப்படக் கூடிய அளவிலே இது அமைந்து விடும். ஆகவே அ.தி.மு.க. அரசினுடைய கொள்கையைப் பயன்படுத்தி, பணத்தை சம்பாதித்தவர்களிடமிருந்து உரிய முறையில் சட்டத்தின் மூலமாக அந்தப் பணத்தை திரும்பப் பெறக் கூடிய முறையில் அந்தச் சட்டத்தில் இந்த வரியானது 1983 ஆம் ஆண்டிலிருந்து விதிக்கப்பட வேண்டுமென்ற ஒரு பணிவான கருத்தை உங்களுடைய மேலான பரிசீலனைக்குக் கொண்டுவர நான் ஆசைப்படுகிறேன்.

மேலும் ஐ.எம்.எஃப்.எஸ். உற்பத்தியை சிறுகச் சிறுக அரசு ஏற்றுக்கொள்ளும் என்றும் தற்போதுள்ள 5 கொழிற்சாலைகளுக்கு உற்பத்தி அளவை அதிகப்படுத்தாது என்றும் இனிமேல் புதியதாக தனியாருக்கு அதை உற்பத்தி செய்யக் கூடிய உரிமங்கள் வழங்கப்படாது என்றும் மாண்புமிகு முதலமைச்சர்



1989 பிப்ரவரி 21] [திரு. ரா. சொக்கர்]

அவர்கள் அறிவித்தார்கள். அரசு ஏற்று நடத்துவதில் எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. இரும்புப்போதிலும் அந்த ஐ.எம்.எஃப்.எல். உற்பத்தி செய்யக் கூடியதை ஒரு தொழிலாகக் கருதுமானால், அரசு அதை உற்பத்தி செய்ய வேண்டும். தனியார்களும் உற்பத்தி செய்யவேண்டும். தனியார்கள் உற்பத்தி செய்வதில் ஏதோ ஒரு சில அரசை எமாற்றிவிட்டார்கள் என்ற காரணத்திற்காக, எந்தத் தனியாரும் உற்பத்தி செய்யக் கூடாது என்று கூறுவது முறையாக இருக்குமா என்பதை என்னுடைய பணிவான கருத்தாக தெரிவிக்க விரும்புகிறேன். மேலும் இது போன்ற பொருள்களை உற்பத்தி செய்வதில் உள்ள விதி முறைகள், அதற்கான உரிமங்கள் வழங்கக் கூடிய நேரத்திலே உள்ள விதி முறைகள் மிகவும் கடுமையானதாக இருக்கக் கூடிய காரணத்தினால்தான், அதில் ஏதோ ஒரு கவர்ச்சி ஏற்பட்டு இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பிரி எக்காவதி இருக்க வேண்டும், ஓப்பன் காம்பிடிஷன் இருக்க வேண்டும். லிபரல் லைசன்சிங் பாலிசி இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் அந்த ஐ.எம்.எஃப்.எல். மது வகைகளை யார் வேண்டுமானாலும் ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்து மது தயாரிக்க ஆரம்பிக்கலாம் என்று நாம் விட்டோமானால், அதில் நல்ல காம்பிடிஷன் ஏற்பட்டு, தரமான பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, வெளி நாடுகளுக்கு அவை ஏற்றுமதி செய்யக் கூடிய ஒரு வாய்ப்பும் இருக்கும்.

தமிழ்நாட்டில் தயார் செய்யப்படக் கூடிய பீருக்கு இப்போது வெளிநாடுகளிலிருந்து பல கேள்விகள் வந்துள்ளன. அதில் தரத்தைக் கூட்டி, நாம் உற்பத்தியை பெருக்குவோமானால் தமிழகத்தில் தயாரிக்கக் கூடிய மது பான வகைகள் குறிப்பாக ரம், ஜின், பீர் போன்ற வகைகள் உலக அரங்கிலே சிறப்பாக காம் வாய்ந்ததாகக் கருதப்பட்டு இன்னும் ஏற்றுமதி அதிகரிக்கும். ஆகவே அதனை ஏற்றுமதி செய்யக் கூடிய அளவிலே அரசும், தனியார்களும் தனித்தனியாக தொழிற்சாலைகளாக வைத்து நல்ல ஆரோக்கியமான போட்டியை ஏற்படுத்தி அதை செய்யக் கூடிய வகையிலே மது பாலிசியை செய்ய வேண்டுமென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். எனக்குக் கொடுக்கப் பட்ட வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு சட்டப் போவையின் னுடைய தலைவர் அவர்களே, இந்த மேல்நாட்டு மது மீது 30 ரூபாய் என்று இருப்பதை 60 ரூபாயாக இருத்தக் கூடிய இந்தச்

[திரு. என். பழனிவேல்] [1989 பிப்ரவரி 21

சட்டத்தின் மீது நான் சில ஆலோசனைகளை நான் சார்ந்திருக்கக்கூடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கூறிக் கொள்கிறேன். இன்றையதினம் மது உற்பத்தி தொழிற்சாலைகளை தனியார்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம் இம்மாதிரியான தொழிற்சாலைகளை தனியார்கள் நடத்துவதால் அங்கே வேலைகள் நடைபெறுவதற்கும், அல்லது ஆட்சியில் உள்ளவர்களே அதற்கு இரையாகக் கூடிய சூழ்நிலை எல்லாம் இருப்பதையும் கடந்த காலங்களிலே நாம் பார்த்திருக்கிறோம். ஆகவே இந்த உற்பத்தியை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து கடைகளையெல்லாம் ஏலம் விடுவோம் என்று கூறியிருக்கிறார்கள். இந்த ஏலம் விடும்போது நான் கடந்தக் கால அனுபவங்களை மனத்திலே வைத்துக் கூறுகிறேன். பினாமி களாக கடைகளை நடத்துவார்கள். ஒரு கடையை எடுப்பார்கள். பல இடங்களிலே கடைகளை பல பெயர்களில் வைத்திருப்பார்கள். அம்மாதிரி இல்லாமல் நம்பர்களைக் கொடுத்து, குறிப்பிட்டு இன்ன இடங்களில் இன்ன கடைகள் செயல்பட வேண்டுமென்று சொல்லி கறாராக எதிர் காலத்தில் நடைமுறைப் படுத்த வேண்டும். இல்லையேல் ஒருவருக்கு ஒரு கடைகள் பினாமிகளாக முளைத்து விடும். அதனால் பல வேலைகள் ஏற்பட்டு வதற்கு வழி ஏற்படுத்தி விடும் என்பதால் அதனை நீங்கள் கறாராக அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல இன்றைக்கு 6 லட்சம் வழக்குகள் தேக்க நிலையில் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்த 6 லட்சம் வழக்குகளை . . . .

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது அடுத்த சட்ட முன் வடிவில் வருகிறது. அதிலே பேசிக் கொள்ளலாம்.

திரு. என். பழனிவேல்: ஆகவே 30 ரூபாயை 60 ரூபாயாக ஆக்கக்கூடிய அதே நேரத்தில் அதை காரணமாக வைத்து சாதாரண சில்லரை விற்பனையில் விலையைக் கூட்டுவதற்கு எந்த விதத்திலும் இடம் கொடுத்து விடாமல் இந்த அரசு பார்த்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.



1989 பிப்ரவரி 21]

(மு.ப. 10-00)

* திரு. எம். இராமச்சந்திரன்: பெரும்பிப்பிற்குரிய போவைத் தலைவர் அவர்களே, என்னை ஆளாக்கி இந்த சட்டமன்ற உறுப்பினராக்கிய எங்களுடைய தலைவர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், திருவோணம் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றி கூறி என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன்.

இன்றையதினம் இந்தச் சட்டத்திலே, எவ்வளவோ கடந்த காலத்திலே ஏற்பட்டிருந்தாலும் அவைகள் எல்லாம் சரி செய்யப் பட்டு அரசுக்குப் பெருவாரியான வருமானத்தைத் தேடித்தருகின்ற அளவிலே இந்தச் சட்டம் இயற்றப்பட்டு இருப்பதை நான் வரவேற்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த ஐ.எம.எப்.எஸ். என்று சொல்வார்களே அதைத் தலைவர் அவர்கள் ஏலத்திலே விடுவதாகக் கூறியிருக்கிறார்கள். எதிர்க் கட்சி உறுப்பினர் சொன்னதைப் போல, முன்பு இந்த சாராயக் கடைகளை ஏலம் எடுத்தவர்கள்—இது வரையிலே கணக்கற்றவர்கள் ஏலம் எடுத்துவிட்டு இன்னும் பாக்கித் தொகையைச் செலுத்தாமல் இருக்கிறார்கள். அது இன்னும் நிலுவையிலே இருக்கிறது. அவர்கள் எல்லாம் யார் யார் என்று கண்டுபிடித்து, அந்த ஏலம் எடுத்தவர்களைப் பொருத்த வரையில் சரியான நடவடிக்கை எடுப்பார்களானால் அரசுக்கு ஒரு பெருவாரியான வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதுமட்டும் அல்ல இப்போது டெண்டர் என்று சொல்லி அந்த முறையிலே ஏற்படுகின்ற போது அரசாங்கத்திற்கு வருமானம் வருவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது அதிலே இப்போது சொன்னார்களே, ஐ.எம்.எப்.எஸ். தனியார்களும் அதை உற்பத்திச் செய்ய வேண்டும் என்கின்ற முறையை வற்புறுத்த வேண்டும் என்று எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டார்கள். அந்த முறை சரியாக இருக்காது. அரசாங்கம் மட்டும் தான் நடத்த வேண்டும் எல்லாவற்றையும் அதிலே இருக்கின்ற முறையான தரமான உற்பத்திகளைச் செய்து அனுப்பினால் நன்றாக இருக்கும்.

1937-லே சட்டம் இயற்றப்பட்டபோது—கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு முன்னாலே ஏற்படுத்தப்பட்ட ஒன்றை—ரூ. 30 இருந்து ரூ. 60 ஆக ஆக்கியிருக்கிறார்கள். அது கூட போதுமானதாக இல்லை. இந்த ஐ.எம்.எப். சரக்கு பொருத்த வரையில் இந்த மாதிரி விவகாரங்களிலே அதிகமாக கூட வரியைப்

[திரு. எம். இராமச்சந்திரன்] [1989 பிப்ரவரி 21

போடலாம். காரணம் இதை உபயோகிப்பவர்கள் பெரும்பாலும் வசதி வாய்ப்பு உள்ளவர்கள் தான். ஏழை எளியவர்களுக்கு இதிலே சம்பந்தம் இல்லை. ஆகவே இந்தச் சூழ்நிலையில் அதிக மாக வரியைப் போட்டுக்கூட இன்னும் வருமானத்தை உற்பத்திச் செய்து கொள்ளலாம். ஆனால் ஏழை எளிய மக்கள் எல்லாம், இன்றைக்கு சட்டத்தின் பிடியிலிருந்துக் கொண்டு கஷ்டப்படு கிறார்கள். கிட்டத்தட்ட 6 லட்சம் பேர்களின் வழக்குகள் தேங்கி யிருக்கின்றன என்று கூட சொன்னார்கள் எல்லாம் பொருத்த வரையில் நான் வழக்கு மன்றத்தில் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், என்னிடம் அதிகமாக வழக்குகள் இருக்கின்றன. நான் சொன்னேன். இந்த அதிகமான **வழக்குகளை** 1937-ல் இருந்தபடியே சட்டத்தை இயற்றினால் சரியாக இருக்கும். இதனுடைய வருமானம் அரசாங்கத்திற்கு கிடைக்கும் அப்போது கோர்ட்டுகளில் வருமானம் பெருவாரியாக இருந்தது. ஆகவே அபராதத்தை மட்டும் கட்டிவிட்டு அந்த வழக்குகளை முடித்துக் கொள்வார்கள் அதுமட்டும் அல்ல. சுற்றாபம் சுருங்கவாக இருந்தது. அந்தச் சூழ்நிலையில் இந்த அரசு சரியாக இந்தச் சட்டத்தை இயற்றி இருக்கிறது. இந்தச் சட்டத்தைப் பொருத்த வரையிலே உண்மையாக அரசாங்கத்திற்கு வருமானம் வருவ தற்கு இன்னும் அதிகமான வரியைக் கூட்டிப் போடலாம். இந்த முறையிலே எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய்கள் இதற்கு முந்தியிருந்த அரசாங்கம்—நினைக்க 2 கோடி ரூபாய் சென்றதாகச் சொன்னார்கள். ஒரு நாளைக்கு 2 கோடி ரூபாய் யார் வீட்டிற்கோ போய்க்கொண்டிருந்ததாகச் சொல்லிக்கொண்டிருந் தார்கள்—அந்த அளவிற்கு அந்த வரியை அந்த உற்பத்தியாளர் களும், விற்பவர்களும் தானே ஒரு விலையை நிர்ணயித்துக் கொண்டு வியாபாரத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். அந்த மாதிரி ஒரு சூழ்நிலையில் அதிகமான விலைக்கு விற்று அந்தக் காசுகளை அடைந்து கொண்டிருந்தார்கள். அந்த மாதிரி அரசாங்கத்திற்குப் போக வேண்டிய பணங்களையெல்லாம் கனியார்களும், மற்றவர்களும், முந்தி இருந்தவர்களும் அடைந்து கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்டச் சூழ்நிலையை இப்போது மாற்றியமைத்திருக்கிறார்கள் முதலமைச்சர் அவர்கள். இப்படிப் பட்ட சூழ்நிலையில் எப்படியெல்லாம் இந்த அரசாங்கத்திற்கு வருமானத்தை தேடித்தர வேண்டும் என்பதையும் நான் எப்படியும் அரசுக்கு வருமானம் வருவதை கண்டுபிடித்து விடுவேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன் னார்கள். அரசாங்கத்தின் கஜானா காலி என்று இருப்பதை, எப்படியும் இந்த அரசாங்கத்திற்கு வருமானத்தைத் தேடி இந்த அரசாங்கத்தை நல்லபடியாக நடத்த முடியும் என்பதை முதலமைச்சர் அவர்களே சொல்லியிருந்தார்கள். அதற்காக வேண்டியோ என்னவோ அரசுக்கு எப்படியெல்லாம் வரி பாக்கி இருக்கிறது என்பதை கண்டுபிடித்து. இந்த அரசாங்கத்திற்கு வரியை உயர்த்தி, திருடிச் சென்றவர்களை, பணத்தை ஒளித்து வைத்திருந்தவர்களைக் கண்டுபிடித்து, இந்த அரசுக்கு நல்ல வருமானத்தைத்தேடித் தரத்தக்க அளவிலே . . .

**திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்)**: பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் சட்டத் திருத்தத்தைப் பற்றி மட்டும் பேசினால் சரியாக இருக்கும் என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. எம். இராமச்சந்திரன்**: தலைவர் அவர்களே, இதிலே அந்தச் சட்டமும் வருகிறதனால் சொன்னேன். அந்த வழக் குகள் எல்லாம் பாக்கி இருக்கின்றன என்பதற்காகச் சொன்னேன். 1983-லே வரி பாக்கி இருக்கிறது, வரியை ஏமாற்றியிருக்கிறார்கள். அந்த வரி பாக்கிகள் எல்லாம், முதலமைச்சர் அவர்கள் சொன்ன போது கூடச் சொன்னார்கள்

அந்த மாதிரி வரியைக் கட்டாமல் இருந்திருக்கிறார்கள். அவர்கள் பின்னாலே வரியைத் தண்டுபடி வாங்குகிற எண்ணம் நிலவே இருந்திருக்கிறார்கள். அந்த மாதிரிச் சூழ்நிலைகள் எல்லாமல் அந்த வரிகளை ஒரு 'செட் ரான்பெக்ட்' கொடுத்து — அதற்கு முன் பாராயாகக் கட்டாமல் இரந்த வற்றை—1983 ஆம் ஆண்டிலிருந்து உள்ளதை, வரியைக் கூட்டு வதற்கு வழிவகைகளைச் செய்து, அரசிற்கு வருமானத்தை எற்படுத்திட வேண்டுகிறேன். அதை இன்னும் 60 நாயாய் கூட உயர்த்தலாம். குடிப்பவர்கள்—மீபாரின் ஐ.எம்.எப்.எஸ் குடிப் பவர்கள் பெரிய வசதியுள்ளவர்கள். எழைகளுக்கு அது சம்பந்த மில்லை. ஆகவே, அந்தச் சூழ்நிலையில் அதிகமாகப் போட்டு வரியை உயர்த்தி, வருமானத்தை உயர்த்திக் கொள்ளலாம் என்று சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

[1989 பிப்ரவரி 21

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. ஓய். வெங்கடேஸ்வர நிட்சிதர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மதுவிலக்குத் திருத்தச் சட்டத்திலே நானும் என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஆதலிலே ஒரு அபிப்பிராயம் சொல்கிறேன். அரசின் சார்பிலே, ஐ.எம்.எப்.எஸ் என்ற பிராந்தி, வெளிநாட்டுச் சரக்கு இது வரைக்கும் இருக்கிற மாதிரி இல்லாமல், எலக்ட்ரிபை போகிறேன் என்று அறிக்கை விட்டார்கள். அது எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும் பப்ளிக்கிலே எப்படித் தூண்டி விடுகிறார்களோ, எப்படி வெளி வந்தது என்று தெரியவில்லை. சொட்டாகப் பப்ளிக்கிலே என்ன அபிப்பிராயப்படுகிறார்கள் என்றால், சாராயக் கடைகள் எல்லாம் இனிமேல் வந்துவிடப் போகிறது. சாராயக் கடைகளை எல்லாம் ஒழித்து விடப் போகிறார்கள் என்று பேசிக் கொள்கிற அளவிலே என் காதிலே விழுந்தது.

என் போன்றவர்கள் எல்லாம், அப்படியெல்லாம் இல்லை, சாராயக் கடையெல்லாம் கூடாது. இந்த அரசிலே, ஏற்கனவே இருந்த பிராந்திக் கடைகளைத் தான் ஏலம் விடப் போவதாக முதலமைச்சர் அறிக்கை விட்டிருக்கிறார் என்று திருத்தி நாம் சொல்ல வேண்டியிருக்கிறது. ஒருத்தர் சொல்லாமல் போகாது. இந்த சர்க்காரிலிருந்து விளக்கமாக—இந்த மதுக் கடைகள் என்பது வெளிநாட்டுச் சரக்கு இதுவரைக்கும் இருந்தவற்றை ஏலம் விட ஏற்பாடு பண்ணியிருக்கிறோம், சாராயக் கடைகளைத் திறக்கப்போவதில்லை, சாராயக் கடைகளைத் திறப்பதாக உத்தேசம் இல்லை என்று மறுபடியும் விளக்கமாகச் சொன்னால் தான் பப்ளிக்கிலே சரியாக இருக்கும். இல்லையெனில் வால் போஸ்ட்டரிலே போடுகிறான் . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது மாண்புமிகு நீட்சிதர் சொன்னதைப் பத்திரிகைக்காரர்கள் எல்லாம் அப்படியே போட்டுவிட்டால், இதுவே நல்ல விளக்கமாக இருக்கும்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர நீட்சிதர் : அந்த வால் போஸ்டரிலே என்ன போடுகிறான் என்றால், மொத்தமாகப் போட்டுவிடுகிறார்கள். அதைப் படிக்கிறவர்கள், வால்போஸ்டரைப் பார்த்துப் படிக்கிறவர்கள் சில பேர். சில பேர் பேப்பரைப் பார்த்து, மேலே தலைப்புச்செய்தி மட்டும் படிக்கிறார்கள். அடியிலே விளக்கத்தைப் படிப்பதில்லை. அது சில இடத்தில் தவறுதலாக ஏற்பட்டுப் போகிறது.



1989 பிப்ரவரி 21] [திரு. ஓய். வெங்கடேஸ்வர நீட்சிதர்]

அம்மையாரே, இன்னொரு உதாரணம். நாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலேயே—எலெக்ஷனுக்கு நிற்கும்போது, 140 சீட் என்று வந்துவிட்டது. ஆட்சியை ஒப்புக்கொண்டது 27 ஆம் தேதி, நடுவிலே ஒரு வாரம். அதற்குள்ளே, மத்திய அரசா என்று தெரியவில்லை, கவர்னரா என்று தெரியவில்லை, அட்வைசரா என்று தெரியவில்லை. யாரோ ஏற்றிவிட்டார்கள். அரிசி மேலே 40 பைசா ஏற்றக்கூடாது. ஆனால் நம் அரசு வந்துவிட்டது என்ற பொறாமையா என்று தெரியவில்லை. இந்த அரசிற்கு அவச் சொல் ஏற்படவேண்டும் என்று—முன்பு உணவு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார். சரியாகக் கவனித்திருக்கமாட்டார்கள்—திடீரென்று 40 பைசா ஏற்றிய துறைக் காரணம் என்னவென்று கேட்கும்போது அவர்கள் எழுதி யிருக்கிறார்கள்.

அதை ஜனங்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்றால், பாரய்யா, ஓட்டுப் போட்டு இன்னும் இரண்டு நாள் ஆகவில்லை, கிலோவுக்கு 40 பைசா ஏற்றிவிட்டார்கள், என்று. யார் என்று தெரியவில்லை. நாடடிலே 40 சதவிகிதம் கூட அல்ல. 32 சதவிகிதம் தான். எழுத்தறிவு இல்லாத ஜனங்கள் கிட்டே போய், '40 பைசா ஏற்றியிருக்கிறார்கள, ஓட்டுப் போடாதே என்று முதலிலே சொன்னோமே, இன்னும் நாலு நாள் போனால், எதையாவது நின்கச் சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. குச்சிக் கிழங்கைக் கூட நின்கச் சொன்னாலும் ஆச்சரியப்படு வதற்கில்லை' என்று பிரச்சாரம் நடந்தது. எங்களைப் போன்ற வர்கள் சும்மா இருக்கமுடியுமா ? நான் 100 பேருக்குப் பிரச் சாரம் பண்ணுவேன். 'அது அப்படியில்லை, மத்திய சர்க்காரிலே ஏதோ வேண்டுமென்றே, ஏதோ காற்புணர்ச்சியிலே நடந்திருக் கிறது' என்று சொல்ல வேண்டியதாகியிருக்கிறது.

மறுபடியும் முதலமைச்சருக்குச் சொல்கிறேன், அரசிற்கும் சொல்கிறேன். திருத்தம் சொல்லவேண்டும், இதற்கும், அதற்கும் சம்பந்தமில்லை. இது அரசு கொடுத்த திருத்தம். பில் இதிலே அந்தச் சாக்கின் நீது ரூபாய் 30 என்று இருந்ததை 60 ரூபாய் ஆக்கப்படுகிறது. நாங்கள் எல்லாம் தேசிய உணர்ச்சி யுள்ளவர்கள் காந்திய வழியில் உள்ளவர்கள். காந்திய வழியில் உள்ள ஸ்டேட்டிலே எல்லாம் மதுவிலக்குச் சட்டமிருக் கிறதா என்று கேட்டால், அதைப்பற்றி நான் சொன்னால்.

[திரு. ஓய். வெங்கடேஸ்வர நிட்சிதர்] [1989 பிப்ரவரி 21

நிறைய இடம் ஆகிவிடும். அவர்கள் எழுந்து ஏதாவது பேசுவார்கள் சட்டம்தான் இருக்கிறது. காந்திய வழியில்தான் நடக்கிறோம். காந்திய வழி என்று சொல்லிக் கொண்டால்தான் வேறு மறுப்பு இல்லாமல் இருக்கும். ஆக, இந்த மதுவிலக்கு—மது குடிக்கக் கூடாது என்பதை நாங்கள் நிச்சயமாக கடைப் பிடிக்கிறோம். காந்திய வழியிலே எல்லோரும் அதைக் கடைப் பிடிக்கவேண்டும் என்று சொல்கிறோம். இருந்தாலும் ரூபாய் 30 என்று இருப்பதை—நமக்கு நிறையப் பணம் வேண்டியிருக்கிறது. 600 கோடி ரூபாயோ, என்னவோ டெபிசிட் இருக்கிறது. இது சாமான்யமா? எந்த வரி போட்டாலும் கடைசியிலே ஏழைக்குத் தான போகப் போகிறது. பணக்காரன் தப்பித்துக் கொள்ளலாம். இவ்வளவு பற்றாக்குறையை நிறைவு செய்ய வேண்டும். இனிமேல் வரப்போகிற பட்ஜெட்டிலே என்ன பண்ணப் போகிறார்கள் என்று தெரியவில்லை. வரி போடாமல், 140 கோடி ரூபாயைக் கண்டுபிடித்தேன் என்று சொல்கிறார். அதுவும் மதுவிலேதான் கண்டுபிடித்தோம் என்று முதலமைச்சர் அறிக்கை விட்டிருக்கிறார். ரொம்ப சந்தோஷம்.

(மு.ப. 10-10)

அது மாதிரி இப்போது 30 ரூபாய் என்பதை 60 ரூபாய் வரை ஏற்றலாம். ஏன் என்றால் இன்னும் கொஞ்சம் ஏற்றினால் அதில் ஒன்றும் ஆகிவிடாது. இப்போது மேற்கு வங்கத்தில் 80 சொச்சம் ரூபாயாக இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். 80 ரூபாக்கு மேலாக, என் அங்கே வியாபாரம் ஆகவில்லையா? அங்கே குடித்தால் ஏதாவது மயக்கம் வரவில்லையா? இன்னும் கொஞ்சம் விலை ஏற்றினால் மயக்கம் அதிகமாக வராதோ (குறுக்கிடு) வரலாம் இல்லையா? என் எனறால் சரக்கில் வித்தியாசம் இருக்கிறதா, இல்லையா; ஆகவே (குறுக்கிடு) நான் இன்னும் பேப்பரைப் படிக்கவில்லை, காலையில் எழுந்து ஸ்நானம் பண்ணிவிட்டு, பூஜை பண்ணிவிட்டு இங்கே வருவதற்கு தான் நேரம் சரியாக இருக்கிறது நமக்கு. (சிரிப்பு) நான் நேற்றே இதையெல்லாம் தயார் செய்து வைத்து விட்டேன். எனக்கு குறிப்பு கிடையாது. குறிப்பு வைத்துக்கொள்ளுகிற சக்தியும் கிடையாது. நான் ஏதாவது குறிப்பு வைத்து இருக்கிறேனா பாருங்கள் எந்தப் பக்கத்தை எடுத்தாலும் குறிப்பே இருக்காது. குறிப்பு இல்லாமல் நான் பேசுவேன். நல்லதாக இருந்தால் ஏற்றுக் கொள்ளுங்கள், கெடுதலாக இருந்தால் விட்டு



விடுங்கள். (சிரிப்பு) 60 ரூபாய் என்பதை இன்னும் ஏற்றலாமா என்று என்னைக் கேட்டால் மேற்கு வங்கத்தில் 80 ரூபாய்க்கு மேல் இருக்கிறதே அதுபோல் 80 ரூபாய்க்கு மேல் ஏற்றினால் வேலாடாம் என்று சொல்ல மாட்டோம். அதை தடுப்பதற்கு யார் இருக்கிறார்கள். நம்மைத் தான் நிறைய பேர் இருக்கிறோமே. அதை தடுப்பதற்கு யாரும் முன் வர மாட்டார்கள். (நடிப்பதனை தடுக்கவேண்டும். அனைத்து எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். பணம் கம்மியாக இருந்தால் அதிகமாக குடிப்பார்கள், பணம் கொஞ்சம் அதிகமாக இருந்தால் வசதியுள்ளவர்கள் மட்டும் தான் குடிப்பார்கள் எந்த வகையில் நமக்கு வருமானமும் வரும். வருமானம் எந்த வகையில் வந்தால் என்ன? அது செல்லாதா? கள்ளுக் கடையில் இருந்து வந்து, சாராயக் கடையிலிருந்து வந்த நோட்டு செல்லாமல் இருக்கப் போகிறதா? இருட்டு நோட்டு செல்லாமல் இருக்கப் போகிறதா? கொள்ளையடித்த நோட்டு செல்லாதா? இருக்கப் போகிறதா? கொள்ளையடித்த நோட்டு செல்லாதா? அலைகள் தான் அதிகமாக செல்லுகிறது ஆகவே, இந்த 30 ரூபாய் என்பதை 60 ரூபாயாக என் இன்னும் கொஞ்சம் எகிறி செய்தால் தேவலாம் என்பது என்னுடைய கருத்து.

அடுத்த படியாக இந்த கண்டனை குறைத்து இருக்கிறார்களே அதை பாருங்கள், அதனால் என்ன ஆகும் என்றால் (சிரிப்பு) (குறுக்கிடு) நான் கவனிக்கவில்லை. சரி இருக்கட்டும். அதனால் ஒன்றும் பாதகம் இல்லை (சிரிப்பு) இந்த விலை ஏற்றத்தை இன்னும் 80 ரூபாய்க்கு மேலும் வைத்துக்கொள்ளலாம், இன்னும் அதிகமாக வருமானம் பெருகும் வாய்ப்பு இருந்தால் இதை எவ்வளவு இந்த அரசாங்கங்களைப் பார்த்தாலும் புரியவில்லை; நமக்கு வருமானம் எக்கூடிய அளவில் உயர்த்த வேண்டி நான் கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன்.

திரு. பி. என். வல்லாள: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத் தால் ஆட்சியில் முதல் உற்பத்தியாளர் களுக்கு என்று பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டு எறக்குறைய 400 கோடி ரூபாய் அரசின் கஜானாவுக்கு வரவேண்டிய பணம் தனி நபர்களுடைய கஜானாவை நிரப்பிக் கொண்டிருக்கின்றன இந்த ஜில்லாவையில் இந்த அரசு நிகு விரைவில் இப்படி ஆண்டுக்கு 200 கோடி ரூபாய் விழுங்கிக் கொண்டிருக்கிற அரசின் கஜானாவுக்கு வர்த்து விற் வேண்டிய பதாம் இன்றையதினம் அலையெல்லாம் பிற மது பான உற்பத்தியாளர்களால வேற்று நடுகள்டம் சென்று

அடைவதைக் கண்டுபிடித்து, ஒரு நல்ல வழிவகையை கண்டு பிடித்து இருக்கின்ற இந்த அரசை நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, இதை கண்டுபிடித்ததோடு நின்று விடாமல் ஏழைக்குறைய ஆண்டு தோறும் 200 கோடி ரூபாய் என்றால் ஏழைக் குறைய எத்தனை வருடங்கள் என்று பாக்க வேண்டும் 13 வருட ஆட்சிக் காலத்தில் ஆண்டுக்கு 200 கோடி ரூபாய் அரசுக்கு வசூலிக்கிய அரசின் கஜானாவுக்கு வந்து சேரவேண்டிய பணம் வெளியில் செல்லாது இருக்கின்ற இந்த நிலையைப் பார்த்த தமிழக மக்கள் அதிர்ச்சி அடைந்து இருக்கிறார்கள். ஆத்திரம் அடைந்து இருக்கிறார்கள். எனவே, இந்த அரசை நான் கேட்டுக்கொள் வது எல்லாம், இப்படி அரசுக்கு வரவேண்டிய வருவாய்கள் அனைத்தும் வெளியில் மது உற்பத்தியாளர்களுக்கு சலுகைகள் என்ற பெயரால் சென்று இருக்கின்ற பல கோடி ரூபாயை திரும்பப் பெறுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே இன்றையதினம் இந்த அரசினுடைய நடவடிக்கை களை பாராட்டுகின்ற மக்கள் இந்த அரசு உண்மையிலேயே அவ்வாறு ஒரு நடவடிக்கையை எடுத்தால் ஏறக்குறைய பல கோடி ரூபாயை திரும்பப் பெறுவதற்கான நிலைக்கு ஏற்பாடு செய்யுமானால் இந்த அரசை மீண்டும் தமிழக மக்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இன்றையதினம் இந்த அரசினுடைய மது வரியாக ஏறக்குறைய ஒரு புளூப் லிட்டருக்கு 25 ரூபாய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது இந்தியாவிலேயே மிகக் குறைவான ஆயத்தீர்வை என்று சொல்லப்படுகின்ற காரணத்தால் மக்களுடைய நிலையை அறிந்து புளூப் லிட்டருக்கு 25 ரூபாயாக எனைய மாநிலங்களை விட இந்த மாநிலத்தில் மட்டும் தமிழ்நாட்டில் மட்டும் புளூப் லிட்டருக்கு 25 ரூபாய் என்கின்ற நிலையை இந்த அரசு இங்கே ஏற்படுத்தியிருக்கிற்ற காரணத்தால் தமிழக மக்களுடைய நிலையை அறிந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதையும் நான் பாராட்டுகிறேன், என்று கூறி நான் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்வது, பல கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்பட்டு இருக்கின்ற நிலையில் அந்த பல கோடி ரூபாயை மீண்டும் பெறுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கூறி, நான் இந்த தீர்மானத்தை வரவேற்று பேசுகிறேன்.





திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின்மீது என்னுடைய கருத் துக்களை நான் அவை முன் எடுத்து வைப்பதற்கு முன்பு, மது விலக்கைப் பூரணமாக அமல்படுத்த வேண்டும் என்ற அரசுக்க முடியாத அறுதியான கொள்கையைக் கொண்டு இருக்கிற நான் மது விலையை அல்லது மதுவுக்குக் கொடுக்கின்ற தீர்வை அதிக மாகப் போடப்படுகிறதா அல்லது குறைத்துப் போடப்படுகிறதா? ஏற்கெனவே இருந்த தொகையை விட அதிகமாக்கப்படுகிறதா என்பதைப்பற்றியெல்லாம் அக்கறை கொள்ளாமல் இப்படி அரசாங்கத்திற்கு ஒரு வருமானம் வருகிறது என்றாலும் அதிகமான வருமானமே நமக்குத் தேவையில்லை என்று சொல்லக்கூடிய அடிப்படையிலேயும் முதலில்லக்கு பூரணமாக நாட்டிலே அமல்படுத்தப்பட வேண்டும் என்பதிலே நம்பிக்கை யுடையவனாகவும் நான் இருப்பதை இந்த அவை அறியும். எனவே நான் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வது பூரணமான மதுவிலக்கை நாம் ஏற்றுக்கொள்வதோடு நாட்டில் மதுவே இல்லாமல் செய்யப் படுவதற்கு என்ன வழிவகைகளை நாம் காண வேண்டுமோ அவை களையெல்லாம் அரசு சிந்தித்து செயல்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு சமுதாயத்தில் ஏழைக்கும் கேடுகள் நிலவி நிற்கின்ற ஒரு சூழ்நிலை அதற்கு மதுவும் ஒரு காரணம் என்று இருக்கும் தாலும் பொருளாதாரத்திலே மிகப் பெரிய பாதாரமான தீயவை களை ஏற்படுத்துவது இந்த மதுப் பழக்கம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஒரு கூலிக்காரன் கூலியாகப் பெறுகின்ற ஒரு சிறிய தொகையைக் கூட அவன் உணவுக்கும் உடைக்கும் பயன்படுத்தாமல், மதுவுக்காக பயன்படுத்துகின்ற காரணத் தால் எவ்வளவு பெரிய தொழில் பொருளாதார நிர் ணலையும் நாட்டிலே ஏற்படுகிறது என்பதை நாம் நித்திக்கப் பார்க்க வேண்டும். இன்றைக்கு நாட்டிலே விலையேற்றத்திற்குக் காரணம் மது பழக்கம்தான். அதுமட்டுமல்ல பணப் புழக்கத் திற்கும், பண வீக்கத்திற்கும் காரணம்கூட இந்த மது பழக்கம் தான் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. ஏழை, ஏழை யாகவே இருந்துகொண்டிருக்கிறான். பணம் ஒரிடத்திலேயே சேர்ந்து கொண்டிருக்கிறது. பணக்காரனுக்கும் ஏழைக்கும்

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1989 பிப்ரவரி 21

இருக்கின்ற அந்த இடைவெளி அதிகமாகிக் கொண்டே இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதற்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றவைகளில் இந்த மதுப் பழக்கமும் ஒன்று என்பதை நாம் மறந்து விடக்கூடாது. 12 ரூபாய் கூலியாகப் பெறுபவன், 6 ரூபாயை மது கடைக்குக் கொடுத்து விடுகிறான். அவனுடைய பொருளாதாரம் எவ்வளவு சீர்குலைகிறது; அதே நேரத்திலே, அந்த வெறுமையிலிருந்தே 6 ரூபாயைப் பெற்றுக்கொள்கின்ற அந்த மது விற்பனையாளன் மது உற்பத்தியாளன் எவ்வளவு பணக்காரனாக மாறுகிறான் என்பதையும் இந்த மதுவால் உருவாகின்ற பொருளாதார சீர்குலைவுகள், அதனுடைய விளைவுகள் இவைகளைப்பற்றியெல்லாம் ஆய்வு செய்யக் கூடியவர்கள் இதை மிக நன்றாக அறிவார்கள். எனவே மதுவினால் அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறது. அது இன்னொரு சூழ்நிலையிலே, நல்ல நிலையில் இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையிலே தேவை என்பது வற்புறுத்தப்பட்டாலும், அரசாங்கத்திற்கு இருக்கின்ற எனைய நிதி ஆதாரங்கள் போதவில்லை; மது ப்பழக்கத்தை திடீரென்று மாற்றிவிடுவது அரசாங்கத்திற்கு சாத்தியமில்லை. எவ்வே வருகின்ற வருமானத்தை நாம் விட்டு வைப்பதும் சாத்தியமில்லை என்று ஆக சொல்லாலும், அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறது, அந்த வருமானத்தை நாம் விட்டு விட்டால் சமுதாயத்தில் எவ்வளவு பெரிய விரக்தி சீர்தூக்கி நிற்கும், விரக்தி நிலைக்கும், அதே நேரத்தில் பொருளாதாரத்தில் எவ்வளவு பெரிய ஆரோக்கியமான விளைவுகள் ஏற்படும் என்பதையெல்லாம் நாம் முறையாகச் சிந்தித்துப் பார்த்தால் இந்த வருமானத்தை ஒரு தீர்மானமாக மாற்ற முடியாது. சமுதாயத்தினுடைய விரக்தியை ஒரு அரசாங்கத்தினுடைய கலையாக கடமை இந்தச் சமுதாயத்தில் நல்ல சிந்தனைகள் உருவாக வேண்டுமென்றால் இந்த மது என்பது நாட்டிலேயிருந்து அகற்றப்பட வேண்டும். ஒருத்தருக்கு தினம் 20 ரூபாயிலிருந்து 60 ரூபாயாக உயர்ந்துவதால் அரசுக்கு வருமானம் பெருகும். ஆகவே நேரத்தில் மதுப் பழக்கம் கட்டுப்படுத்தப்படுகிறது என்று சொல்லுவோம் என்றால் அது நீண்ட நாளைக்கு மன் தொடர்ந்து பழக்கப்பட்டவன் தினமும் 60 ரூபாயாக உயர்ந்தாலும் அது 160 ரூபாயாக உயர்த்தப்பட்டாலும், அவனிடத்திலே இருக்கிற தாடு வாட்டிச் சாமான்களையெல்லாம் விற்று விட்டாவது அதிகமான பிளை கொடுத்து மது வாங்குவானே தவிர அந்த மதுப் பழக்கத்தை விட்டுவிட மாட்டான்.



1989 பிப்ரவரி 21] [திரு. எம். அப்துல் லத்தீப்]

(முற்பகல் 10-20)

இதற்கு ஒரேயொரு வழி என்னவென்றால் மது உற்பத்தியே நாட்டிலே கூடாது; அது கள்ளச்சாராயமாக இருந்தாலும் அல்லது சட்டப்படி உற்பத்தி செய்துகொள்கிற சாராயமாக இருந்தாலும் அல்லது மதுவாக இருந்தாலும் அதை முழுமையாகக் கட்டுப் படுத்துவதற்கு அரசு இன்னும் மேற்கொண்டு தன்னுடைய கஜானாவிலிருந்து நிதியைச் செலவழித்து இதைக் கட்டுப்படுத்தினாலும் அது ஏற்புடையதாக இருக்கும் என்ற வகையில் இதை நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

எனவே, இதைக் குறைத்து விடுவது, அதிகமாக்கி விடுவது, இதனை நான் ஆதரிக்கிறேன், அதனை எதிர்க்கிறேன். இன்னும் அதிகமாக்கி விட வேண்டும் என்றெல்லாம் நான் சொல்ல விரும்பவில்லை. தயவுசெய்து ஆளுங் கட்சியின் நண்பர்களை உத்தேசித்து, சமுதாயத்தினுடைய ஒழுக்கத்தைக் கருத்திற்கொண்டு, சமுதாயத்திலே கீழ் மட்டத்திலே இருக்கிற ஏழைபாழைகள் வாழ வேண்டும் என்ற எண்ணத்திலே செயல்பட வேண்டும். "குடி குடியைக் கெடுக்கும்" என்று எழுதி வைத்துவிட்டால் மட்டும் போதாது. அது எழுதப்பட்டதல்ல, மக்களுடைய உள்ளங்களிலும், எண்ணங்களிலும் எழுதப்பட வேண்டும். கதவுகளிலும், சுவர்களிலும் எழுதப்படுவதை, எண்ணங்களில் எழுதப்பட வேண்டும். மக்களுடைய உள்ளங்களில் எழுதப்பட வேண்டும்.

ஆண்டாண்டுக் காலமாக நம்முடைய முன்னோர்களெல்லாம்— வள்ளுவர் போன்றவர்கள்,—எடுத்துச் சொன்ன போறிஞர் உன்னா அவர்கள் வற்புறுத்திச் சொன்ன அந்த மகத்தான சமுதாய ஒழுக்கம் நாட்டில் நிலைபெற வேண்டுமென்றால் அரசு கைதியான முடிவை எடுக்க வேண்டும். எந்தனையோ வகையில் நாட்டிலே இன்றைக்கு மகத்தான தீர் கேடுகள் நம்முடைய நிர்வாகத்திலே ஏற்பட்டது. அதுமட்டுமல் லாமல், ஆட்சியிலே இருப்பவர்கள் நாட்டுக்கு ஒழுக்கத்தைப் போதிக்க வேண்டும் என்பதை மறந்து, ஆட்சியிலே இருப்பதை நினைத்து, தங்களுடைய கண்டோலிலே, கண்காணிப்பிலே இருக்கக் கூடிய நகரசபைகளையே ரூபையாடுவார்கள். ஒரு நாளைக்கு இரண்டு கோடி ரூபாய் என்று அவர்களுக்கு வருமானம் வந்து கொண்டு இருந்தது. ஆட்சியாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய, ஆண்டு ஒன்றுக்கு கிடைக்கக்கூடிய 100 கோடி ரூபாய் வேறு வழியிலே திருப்பிவிடப்பட்டன. சமுதாயத்திலே மகத்தான தீர் கேடுகள் வருவதினை என்பதெல்லாம் இந்த அவையிலே சொல்லப் பட்டிருக்கிறது.

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1989 பிப்ரவரி 21

இதற்கு என்ன காரணம் என்று சிந்தித்துப் பாக்க வேண்டும். என் வருவாய்த் துறையிலே அவர்கள் கை வைக்கவில்லை; பொதுப்பணித் துறையிலே அவர்கள் எல்லா இடங்களிலும் கை வைத்தார்கள்—இது மட்டும் என் நிந்தக் கை மட்டும் காலியாக விடப்பட்டிருக்கிறது என்று சொன்னால், நிந்தத் துறைதான் எல்லாத் தீமைகளுக்கும் ஊற்றுக்கண். இந்தத் தீமைதான் மற்றத் தீமைகளுக்கெல்லாம் தாயகம். நிந்தத் தீமைதான் நல்ல வளையும் தீமை செய்ய வேண்டும் என்று தூண்டுகிற ஒரு துறை என்ற காரணத்தினாலேதான், 100 கோடி ரூபாய் வருவாய்க்கிருந்து, ஒரு நாள் ஒன்றுக்கு 2 கோடி ரூபாய், யார் கஜானாவிற்குப் பொறுப்பாளர்களாக இருந்தார்களோ அவர்களே பெற்றுக் கொண்டு இருந்தார்கள். அதற்கு வழிவகுத்துக் கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டு இந்த அவையிலே சொல்லப்படுமேயானால் இது எவ்வளவு பெரிய தீய ஒரு பழக்கம் என்பதை, இந்த மது என்பது எவ்வளவு மதியைக் கெடுத்து விடுகிறது என்பதை ஆகவே சிந்தித்துப் பார்த்து, இந்த மதுவே கூடாது, மதுவிலக்கு பூரணமாக வேண்டும். அதற்கு வரி விதிப்பதும் கூடாது; தண்டனை கொடுப்பதும், தேவைப்படும்பொழுது, யார் மது உண்ணுகிறார்களோ அவர்களுக்குத் தண்டனை கொடுப்பது மிக அதிகமான ஒரு தண்டனையாக அதை நிர்ணயித்த நாம் செயல் படுத்த வேண்டுமென்ற முறையில் இந்த மசோதாவை நான் ஆதரிப்பதா, எதிர்ப்பதா என்று தெரியாமல் இங்கே—எனென்றால், மசோதா சொம்ப குழப்பமாக இருக்கிறது. எனவே, இந்த மசோதாவை, மதுவிலக்கு தொடர்பாக இருக்கிற மசோதாவாக இருக்கிற காரணத்தினால் இந்த மசோதாவை நான் முழுமனதாக எதிர்க்கிறேன், முழுமையாக எதிர்க்கிறேன் என்று சொல்லி அமர்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு போலைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இருந்து வருகிற மதுவிலக்கு சட்டத்தில் 18 (1) பிரிவில் 30 ரூபாய்க்கு மேற்படாமல் என்று இருப்பதை இப்பொழுது 60 ரூபாய்க்கு மேற்படாமல் என்கிற திருத்தத்தை அரசு அந்தச் சட்டத்திலே கொண்டு வந்திருக்கிறது. அரசுக்குக் கூடுதலாக வருமானம் இதனால் வரும் என்பதால் இதை நீங்கள் 60 ரூபாய்க்கு மேற்படாமல் என்று வைத்தாலும் சரி, அல்லது மாண்புமிகு லோக்தள் உறுப்பினரவர்கள்—ஜனதாதள் உறுப்பினரவர்கள்—இங்கே சொன்னதைப்போல, இட்டுநர் அவர்கள் சொன்னதைப்போல, அவர்கள் சொன்னார்கள், வெளி



1989 பிப்ரவரி 21] [திரு. எஸ். திருநாவுக்கரசு

பெங்காலிலே 50 ரூபாய் வரை இருக்கிறது என்று சொன்னார்களே, அதுபோல 60 ரூபாய் என்று ஆக்கினாலும் சரி, இன்னும் முடிந்தால் அதற்கும் மேலே ஆக்கி, எவ்வளவு அதிகபட்சமாக்கி அதனால் அரசுக்கு வருமானத்தைப் பெற முடியுமோ அந்த அளவிற்கு நீங்கள் முயற்சிகளை மேற்கொள்வது அரசுக்குக் கூடுதல் வருமானம் என்பதால் வரவேற்கத்தக்கது.

இன்றைக்கு வந்திருக்கிற சட்ட முன்வடிவு இவ்வளவுதான் இதிலே கூட ஒரு சிறிய திருத்தம் மட்டும்தான். ஆனால் இதைப் பயன்படுத்திக்கொண்டு நமதுடைய ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும், ஆளுங்கட்சியின் தோழமைக் கட்சி உறுப்பினர்களும் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சொல்லப்பட்ட குற்றச்சாட்டை இன்னும் அவரவர்களுடைய கற்பனைச் சக்திக்கு ஏற்ப அதிகப்படுத்தி இங்கே பல்வேறு புகார்களை முற்றைய அரசின்மீது சொன்னார்கள்.

(மாண்புமிகு போலைத் தலைவர் தலைமை)

ஏறத்தாழ 100 கோடி ரூபாய் இழப்பு அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதுபற்றி ஆளுங்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமச்சந்திரன் அவர்கள் பேசும்போதும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வத்திப் அவர்கள் பேசும்போதும் இன்னும் அதிகமாகச் சென்று, ஒரு நாளைக்கு ரூ. 2 கோடி ரூபாய் யாருக்கோ போய்க் கொண்டிருந்தது என்று சொன்னார்கள். அப்படிக் கணக்கிட்டுப் பார்த்தால் ஓராண்டுக்கு 365 நாள். 365 நாளில் ஏறத்தாழ 750 கோடி ரூபாய்க்கு நவறு நடந்திருக்கிறது என்று ஆகிறது.

எனக்குத் தெரிந்தவரையில், உள்நாட்டில் தயாரிக்கப்படுகின்ற வெளிநாட்டு மது I.M.F.S. மற்ற பானங்கள்மீது அரசுக்கு Excise Duty, Sales Tax, TASMAC, நிறுவனத்தில் கிடைப்பது என்று சொல்லப்படுகின்ற இனங்களில் வருகின்ற இலாபம் எல்லாம் சேர்த்து 120 கோடியோ அல்லது சற்று அதிகமாக 200 கோடி ரூபாயோ அதற்குள்ளோ இருக்கலாம். இதுதான் அரசுக்கு வருகிற மொத்த வருமானம். மொத்தம் 200 கோடி அளவுக்கு இருப்பதை 700 கோடி என்று சொல்லி, அந்த அளவுக்கு ஊழல் நடந்திருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆளுநர் உரையிலே பேசும்போது 100 கோடி ரூபாய்க்கு ஊழல் நடந்திருக்கிறது

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 பிப்ரவரி 21

என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். சாராய சாம்ராஜ்யம் தகர்த்தெறியப்பட்டது; உடைத்தெறியப்பட்டது என்ற வாசகங்களை பத்திரிகைகளிலே வருகிறபோது பாமர மக்களை ஏமாற்ற வேண்டுமானால் அதைப் பயன்படுத்தலாமே தவிர, ஏதோ மிகப்பெரும் ஊழல் நடைபெற்றிருக்கிறது என்ற உணர்வை ஏற்படுத்துவதற்கு வேண்டுமானால் பயன்படுத்தலாமே தவிர அதிலே உண்மை எதுவும் இல்லை என்பதை நிச்சயமாக இந்த நாட்டு மக்கள் அறிவார்கள். இந்தக குற்றச்சாட்டுகள் எல்லாம் இன்றைய முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது இந்த சட்டமன்றத்திலே எடுத்து வைத்தவைதான். அன்றைக்கு எனக்கு ஞாபகம்—அவர்கள் ஆண்டுக்கு 15 கோடியோ அல்லது 30 கோடியோ வருமான இழப்பு என்று எதிர்த்தரப்பிலே இருந்து பேசியிருக்கிறார்கள்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவராக எடுத்து வைத்த குற்றச்சாட்டுகள் இவை அல்ல. அப்போது சாராய விற்பனைக்காக பாட்டில்கள் பயன்படுத்தப்பட்டன அந்தப் பாட்டில்களிலே நடைபெற்ற ஊழலைப்பற்றித்தான் இந்த அவையில் நான் எடுத்துப் பேசினேன். அதைக்கூட அப்போது முதலமைச்சராக இருந்த அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் 'சட்டசபையிலே பேசினீர்கள். அதனால் உங்களிடம் வழக்குப் போட முடியவில்லை; வெளியிலே பொதுக் கூட்டத்திலே பேசுங்கள், வழக்குப் போடுகிறேன்' என்று சொன்னார்கள். நான் அடுத்த வாரமே பொதுக் கூட்டத்தில், நியாகரா நகரில் அதே குற்றச்சாட்டுகளைப் பேசினேன். என்மீது வழக்குப் போட்டார். ஆனால் போட்ட வழக்கை மூன்று மாதங்களில் அவரே மீண்டும் வாபஸ் பெற்றுக் கொண்டார் (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். திருநாவுக்கரசு: வழக்குகளை வாபஸ் பெற்றுக் கொண்டதாகச் சொன்னார்கள். வழக்குகளை வாபஸ் பெற்றுக் கொண்ட வரலாறு மறைந்த முதல்வர் புரட்சித் தலைவர் காலத்தில் மட்டுமல்ல; இப்போது இருக்கிற முதலமைச்சரும், அவரைப்போல பலரும் செய்திருக்கிறார்கள். கட்கள் மீது வந்திருக்கிற வழக்குகளை, பல நேரங்களிலே வந்திருக்கிற வழக்குகளை எல்லாம் இந்த மன்றத்திலே சொல்வதாக இருந்தால் நீண்டு கொண்டே போகும். பல வழக்குகள் நீதிமன்றத்திலே நடந்து இருக்கின்றன; பல வழக்குகள் டெல்லி அரசாலே தந்தி கொடுப்பட்டிருக்கின்றன.



1989 பிப்ரவரி 21]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேசும்போது எந்தப் பொருள் குறித்துப் பேசுகிறோமோ அதைப்பற்றிப் பேச வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசும்போது இதே குற்றச்சாட்டை அப்போது சொல்லவேன் என்று சொன்னார்கள். நான் சொன்னது அதற்கு மாறான ஒரு விளக்கம். என்னவென்றால் அப்போது சொல்லப்பட்டது பாட்டில் சம்பந்தமான குற்றச்சாட்டு. ஒரு பாட்டிலுக்கு 50 பைசா பிரதம் ஊழல் நடைபெறுகிறது என்பது போன்ற குற்றச்சாட்டையைச் சொன்னேன். இந்தக் குற்றச்சாட்டு அல்ல. அப்போது சொன்ன குற்றச்சாட்டில் ஆயத்தீர்வை ரத்து போன்ற குற்றச்சாட்டும் இடம் பெறவில்லை.

திரு. எஸ். திருநாவுக்கரசு: ஆக நீங்கள் சொல்லுகிறபோது புது குற்றச்சாட்டிலே ஏறத்தாழ 100 கோடி ரூபாய்க்கு தவறுகள் நடந்திருக்கின்றன; ஊழல்கள் நடந்திருக்கின்றன என்றெல்லாம் சொன்னவற்றிலே உண்மைகள் இல்லை என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மு.ப. 10-30)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மைகள் இல்லை என்று எப்படி ஓரே வரியில் சொல்கிறார்கள்? எப்படிச் சொல்ல முடியும்? கண்ணுக்கு மெய்யாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஆயத் தீர்வை 1983 ஆம் ஆண்டில் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. ஆயத் தீர்வை என்றால் 'எக்சைஸ் ட்யூட்டி.' அது உற்பத்தி செய்பவர்கள் கட்ட வேண்டிய டியூட்டி. அது கட்டப்படவில்லை. கட்ட வேண்டாம் என்று ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல. 1982 ஆம் ஆண்டிலிருந்து ஏன் கட்டவில்லை என்று ஆடிட் ரிப்போர்ட்டில் கேட்டிருக்கிறார்கள். அப்படிக் கேட்டதற்குப் பிறகு 'ரெட்ரான்ஸ்பெக்டிவ் எஃபக்ட்' கொடுத்து அந்த 'எக்சைஸ் ட்யூட்டி' ரத்து செய்யப்பட்டதாக மறுபடியும் ஓணை பிறப்பித்துக் கப்பட்டிருக்கிறது. இவைகள் எல்லாம் தவறல்ல என்று தாங்கள் கூறுகிறீர்களா?

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்துத்தான் நான் சொல்ல வந்தேன். பொதுவாக ஒரு தீர்மானம் கொண்டு வருகிறபோது அல்லது எக்சைஸ்

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 பிப்ரவரி 21

ட்யூட்டியோ அல்லது சேல்ஸ் டாக்சோ அதிகப்படுத்தப்படுகிற போது அதனால் புதிதாக வர இருக்கின்ற வருமானம் எல்லாம் ஏற்கெனவே இருந்த அரசுக்குப் போய்க்கொண்டிருந்தது என்று கணக்கிட்டு, சுமார் 100 கோடி ரூபாய் அளவுக்கு மாபெரும் சாமர்த்திய சாம்ராஜ்யம் அதாவது ஊழல் நடந்தது, அதைத் தகர்த்து எறிந்தேன் எனது ஒரே வரியில் சொன்னது எப்படி உண்மை இல்லையோ அதுபோல்தான் நானும் இப்போது கூறுவது. நான் சொல்வது என்னவென்றால் இது அரசியல் ரீதியாகச் சுமத்தப்படுகிற ஒரு குற்றச்சாட்டே தவிர அதனால் விளம்பரத்திற்கோ அல்லது முன்னால் இருந்த தலைவரை, ஆட்சியை அவமானப்படுத்துவதற்கோ வேண்டுமானால் பயன் படுமே தவிர அதிலே உண்மைகள் இல்லை என்பதை நான் மீண்டும் இங்கே கூறிக்கொண்டு . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, உண்மைகள் இல்லை என்று சொல்லிவிட்டால் அதுவே ஒரு செய்தியாக நாட்டுக்குக் கிடைத்துவிட முடியாது. நாங்கள் கேட்பது எக்சைஸ் டியூட்டியை ஏன் ரத்து செய்தார்கள் என்பது தான். தொழிற்சாலைக்குப் போகிற ஸ்பிரிட்டுக்கு எக்சைஸ் டியூட்டி போடப்படுகிறது. அதே நேரத்தில் ஐ.எம்.எஃப்.எஸ்.-க்கு போகிற சரக்குக்கு—ஸ்பிரிட்டுக்கு—எக்சைஸ் டியூட்டி இல்லை. ஆனால் தொழிற்சாலைக்குப் போகிற சரக்குகளுக்கு—ஸ்பிரிட்டுக்கு 35 பைசா என்ற அளவுக்கு எக்சைஸ் டியூட்டி போடப்பட்டது. இப்படி தொழிற்சாலைக்குப் போகிற ஸ்பிரிட்டுக்கு எக்சைஸ் டியூட்டி போடும்போது மது தயாரிப்பதற்காகப் போன அந்த ஸ்பிரிட்டுக்கு இருந்த எக்சைஸ் டியூட்டியை ரத்து செய்வதற்குக் காரணம் என்ன என்றுதான் நான் கேட்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சொல்ல வருகிறேன். நம்மு டைய பக்கத்து மாநிலமான பாண்டிச்சேரி மாநிலத்தில், தமிழ் நாட்டில் இருக்கின்ற விலையைவிடக் குறைவாக இருந்த காரணத் தினால், பாண்டிச்சேரி மாநிலத்தினுடைய மொத்த மக்கள் தொகையையும் பாண்டிச்சேரியில் வியாபாரமாகின்ற மது வகை களின் அளவையும் கணக்கில் பார்த்தால் இரண்டுக்கும் சம்பந்தமே இல்லாத அளவுக்கு பாண்டிச்சேரியில் விலை குறை வாக இருந்ததால் அங்கேயிருந்து இங்கே கடத்தப்படுகிறது, கொண்டு வரப்படுகிற சூழ்நிலை இருந்தது. எனவே விலையிலே சேல்ஸ் டாக்ஸ் எக்சைஸ் டியூட்டி போன்றவற்றை. . . .



1989 பிப்ரவரி 21]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர் களே, ஒரு நவீனமான தகவலை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தருகிறார்கள். பாண்டிச்சேரிக்கும், தமிழ்நாட்டுக்கும் இருந்த விலை வித்தியாசத்திற்குக் காரணம் அங்கே சேல்ஸ் டாக்ஸ் குறைவு. இங்கே சேல்ஸ் டாக்ஸ் அதிகம் (குறுக்கீடு). நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னது எக்சைஸ் டியூட்டி பற்றி. Excise duty is different from Sales Tax.

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, என்ன பெரிய தத்துவத்தைச் சொன்னார்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரியுமா? Excise Duty is different from Sales Tax (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தெரியாமல்தான் பேசினார். பாண்டிச்சேரியிலே என்ன இருந்தது? பாண்டிச்சேரியில் விலை குறைவு. இங்கே அதிகம் என்றால் என்ன அர்த்தம்? அங்கே சேல்ஸ் டாக்ஸ் குறை வாக இருந்தது. இங்கே சேல்ஸ் டாக்ஸ் அதிகமாக இருந்தது. (குறுக்கீடு) இங்கே சொல்லப்பட்ட குற்றச்சாட்டு என்னவென்றால் எக்சைஸ் டியூட்டி ஒரு ப்ரூஃப் லிட்டருக்கு 8 ரூபாய் என்றி ருந்தது. அதை ஏன் கேன்சல் செய்தார்கள் என்பதுதான். (குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் நான் சொல்ல வந்ததை முடிக்கும் முன்னாலேயே அவசரப்பட்டுவிட்டார்கள். சேல்ஸ் டாக்ஸ் வேறு; எக்சைஸ் டியூட்டி வேறு என்று சொன் னார்கள். அது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். அது சாதாரண விஷயம்தான் என்று நான் சொன்னேன். விலை என்பது சேல்ஸ் டாக்சாக இருந்தாலும் சரி, எக்சைஸ் டியூட்டி யாக இருந்தாலும் சரி மொத்த விற்பனை விலைக்கு போகிற போது, கன்ஸ்யூமருக்குப் போகிறபோது—இதிலே எது கூட இருந்தாலும், ஒட்டு மொத்த விலை என்ற அந்த உணவிலேதான் (குறுக்கீடு) நான் சொன்னது இதுதான். சேல்ஸ் டாக்சை கம்பேர் பண்ணவில்லை. எக்சைஸ் டியூட்டியையும் கம்பேர் பண்ண வில்லை. நான் முடிப்பதற்கு முன்பு அவசரப்பட்டுவிட்டார்கள். அதனால் நான் நான் சொல்ல வந்தேன். மொத்த விலையில் வித்தி யாசம் இருந்தது என்பது ஒன்று. இரண்டாவதாக நான் இங்கே

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 பிப்ரவரி 21

சொல்வது என்னவென்றால் இப்போது எக்சைஸ் டியூட்டி 30 ரூபாய் வரையில் போடலாம் என்றிருக்கிறது. இப்போது நீங்கள் ரூ. 60 வரை வைக்கலாம் என்று சொல்கின்றீர்கள். ரூ. 50 மாக்சிமம். அதிலே எவ்வளவு வேண்டுமானாலும் நீங்கள் போடலாம். இந்த எட்டு ரூபாய் எக்சைஸ் டியூட்டி எற்கப்படுகிறது என்றால் அதற்கேற்ப விலையும் ஏற்றப்பட்டிருக்கும். அந்த எக்சைஸ் டியூட்டி போட்டால் அந்தப் பணம் அரசுக்கு வராமல் இல்லை. போடுவதை நிறுத்திவிட்டார்கள். அப்படி போட்டிருந்தால் ப்ரொடெக்ஷன் காஸ்ட் கூடி கன்சூமர்களுக்குப் போகிறபோது, சேல்ஸ்-ல் அந்த விலை ஏறித்தான் வந்திருக்கும் இது எப்படி பூன்னாள் முதலமைச்சருக்குப் போனது? எப்படி அரசுக்குப் போனது? நீங்கள் ஏற்றியிருக்கின்றீர்கள். மாறுதல் செய்ய ஏற்றி யிருக்கின்றார்கள். மார்ஜின்தில் லிமிட் ரூ 30 என்று இருக் கிறது. அதை 60 ரூபாய் என்று ஆக்குகின்றார்கள். நான் உதாரணத்திற்குக் கேட்கிறேன். நாளைக்கு இன்னொரு அர சாங்கம் வருகிறது. அது வந்து ரூ 100 என்று ஆக்குகிறது. அன் றைக்கு ரூ. 60 என்று இருப்பதை ரூ 100 என்று ஆக்குகிறது என்று இருக்கலாம்.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பாரளை செயலர்): மாண்புமிகு போரவைத் தலைவர் அவர்களே, இந்த எக்சைஸ் டியூட்டி போடப்பட்டிருக்குமானால், இன்னும் விலை அதிகமாகி யிருக்கும் என்ற விளக்கத்தை இங்கே தருகிறார். அது இல்லாத போது நாம் அதற்கு வரிவிலக்கு அளித்திருந்தபோதே, இவர்கள் போட்ட விலை மற்ற மாநிலங்களின் விலையைவிட அதிகம். அது எப்படி என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். 'டான்மாக்' நிறுவனம் விற்கிறபோது வரி முதலிலே— **Excise duty is exempted, complete relaxation, complete concession has been given** அதற்குப் பிறகு இவர்கள் உற்பத்தி செய்து விற்கிறார்கள்.

உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஒல்ட் மாங்க் ரம்மில் ஒரு கேஸ் 750 மில்லி அளவுக்குள்ள 12 பாட்டில்கள் கொண்டது மொத்த விற்பனை விலை டெல்லியில் ரூ. 187.68 பைசா மகாராஷ்டிராவில் ரூ. 240. கேரளாவில் ரூ. 220. ஆந்திராவில் ரூ. 248 கர்நாடகத்தில் ரூ. 214, ஆனால் தமிழ்நாட்டில் **When the concession is there, while the duty was exempted** விலை ரூ 329.31 பைசா. ஆகவே இவர்கள் இந்த வரி விலக்கு அளித்த பிறகும் விலை கூடுகிறது என்பதுதான் உண்மை.



1989 பிப்ரவரி 21]

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** இல்லை, இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பாராளுமன்ற செயலாளர் அவர் களுக்கு அரசுத் துறை அதிகாரிகள் புள்ளிவிவரங்களைச் சேக ரித்துக் கொடுத்திருக்கின்றார்கள். பாண்டிச்சேரியிலே என்ன விலை? அதை நீங்கள் சொல்லவில்லை. மற்ற மாநிலங்களை நான் குறிப்பிடவே இல்லையே. பக்கத்து மாநிலம் பாண்டிச் சேரியை மட்டும்தானே நான் குறிப்பிட்டேன். Compare பண்ணினேன். பக்கத்து மாநிலம் மகாராஷ்டிரம் என்று சொல் கின்றீர்கள். எனவே இது இரண்டிற்குப் சம்பந்தம் இல்லாதது. நான் சொல்வது பக்கத்து மாநிலமாக இருக்கின்ற பாண்டிச்சேரி யைப்பற்றியது. அதைத்தான் குறிப்பிட்டேன். ஆனால் மகா ராஷ்டிரத்தைப் பற்றிச் சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு போர வைத் தலைவர் அவர்களே, பக்கத்து மாநிலமான பாண்டிச் சேரியை விட நிச்சயமாக தமிழ்நாட்டிலே விலை அதிகம்தான்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, அது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புள்ளிவிவரங்களைத் தரலாம். ஆக நான் சொல்ல வந்தது இப்போது நீங்கள் ரூ. 60 என்று போடுகின்றீர்கள் மேக்சிமம். உதாரணத்திற்கு நான் சொல்கிறேன். எக்சைஸ் டியூட்டி ரூ. 50 போடுவதாக வைத்துக்கொள்வோம். ரூ 50 என்ற அளவில் போடு கிறார்கள்.

**திரு. கோ. விசையன்:** மாண்புமிகு போரவைத் தலைவர் அவர் களே, பாண்டிச்சேரியை எல்லாவற்றிற்கும் உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ள முடியுமா என்பதைப்பற்றி அறிய விரும்பு கிறேன். பாண்டிச்சேரி மத்திய அரசின் நேரடி பொறுப்பில் இருந்து வருகிறது. மாநில அரசு வரியை விதிக்காமல், பூராவாக மத்திய அரசு சலுகைகள் கொடுத்து அங்கே காரியங்கள் நடக் கின்றன. அப்படி தமிழ்நாட்டை நாம் எடுத்துக்கொள்ள முடியுமா? மற்ற அண்டை மாநிலங்களான கேரளாவையோ, ஆந்திராவையோ உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வதா? எல்லா வற்றிற்கும் பாண்டிச்சேரியை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளலாமா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

[1989 பிப்ரவரி 21

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு போலவைத் தலைவர் அவர்களே, பாண்டிச்சேரியைப் பற்றி நான் சொல்வது, பாண்டிச் சேரி எந்த வகையில் வேண்டுமானாலும் அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கிக்கொள்வது அவர்களுக்குள்ள உரிமை. அதனால் தமிழ்நாட்டினுடைய வருமானம் பாதிக்கக்கூடாது என்பதை, அமைச்சு அடிப்படையைத்தான் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். என்னுடைய கருத்து என்ன என்பதை புரியாமல் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிக்கொண்டிருக்கிறார் கள் அவர்கள் இடையிடையே பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே எனக்கு ஆட்சேபணையில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு போலவைத் தலைவர் அவர்களே, பாண்டிச்சேரியில் சாராய உற்பத்தியை அரசாங்கமே செய்கிறது. இங்கு தனிப்பட்டவர்களுக்கு விடப் பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு பெரிய வேறுபாடு இருப் பதை நாம் மறந்துவிடக்கூடாது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு போலவைத் தலைவர் அவர்களே, இருக்கலாம். இங்கேகூட நீங்கள் கொஞ்சம் கொஞ்ச மாக தேசியமயமாக்குவோம் என்று சொல்லி இருக்கின்றீர்கள். இன்னமேல், நான் சொல்வது, அரசு செய்தாலும் தனியார் செய் தாலும் விற்பனைக்கு வருகிறது. அதனுடைய விலையைப் பார்க்கும்போது, தமிழ்நாட்டினுடைய வருமானம் பாதிக்கக் கூடிய நிலை இருக்கிறது. மெயின் சப்ஜெக்ட் இதுதான். அப்படி பார்க்கிறபோது, நான் சொல்வது, நீங்கள் மேக்சிமம் ரூ. 60 என்று போட்டிருக்கின்றீர்கள். உதாரணத்திற்கு எக்சைஸ் டியூட்டி ரூ. 50 என்று போடுவதாக வைத்துக்கொள்வோம். அப்படி வைத்துக்கொண்டால், நாளைக்கு ஒரு அரசாங்கம் வந்து, அந்த மேக்சிமம் லிமிட்டை ரூ. 100 ஆக மாற்றி இதிலே எற்கெனவே ரூ. 40 அளவுக்கு உழல் நடந்திருக்கிறது. இதனால் முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கு இதிலே ரூ. 200 கோடி போய் இருக்கிறது என்று பின்னாலே வருகின்றவர்கள்கூட உங்களுடைய நடைமுறையைப்பற்றிச் சொல்லமுடியும். அதைத் தான் நான் சொல்ல வந்தேன். சிந்தித்துக்கொண்டு வருகின்றீர்கள்

(மு.ப. 10-40)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மறுபடியும், மறுபடியும் ஒரு குழப்பமான நிலையி லேயே பிரச்சினையை அணுகுவது நல்லதல்ல. 30-ஐ 60 ஆக



1989 பிப்ரவரி 21] [டாக்டர் மு. கருணாநிதி]

உயர்த்துவது என்பது வேறு. இது தனி விவகாரம். இருந்த 8 ரூபாய் எக்ஸைஸ் டியூட்டியை அதலே ரத்து செய்தது என்பது வேறு. எக்ஸைஸ் டியூட்டியை ரத்து செய்த காரணத்தினால் ஏற் பட்ட நஷ்டத்தைக் கணக்கிடுவது என்பது வேறு. 30-ஐ 60 ஆக ஆக்கியதால் ஏற்படுகின்ற அரசாங்கத்தினுடைய வருமான உயர்வைக் கணக்கிடுவது என்பது வேறு. இரண்டையும் போட்டுக் குழப்பிக்கொள்வது நல்லதல்ல.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் குழப்பிக்கொள்ளவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் சொல்கிறபோது, பல்வேறு விதமான திருத்தங்களால் வர இருக் கிற வருமானத்தை எல்லாம் சேர்த்து, அதுதான் அந்த 100 கோடி ரூபாய் அளவிற்கு, இப்பொழுது 200 கோடி ரூபாய் அளவிற்கு வருமானம் வருகிறது என்று சொன்னால், அடுத்த ஆண்டு இதக திருத்தத்திற்கு பின்னால் 300 கோடி ரூபாய், ஏற்கெனவே நீங்கள் புதிதாக போடுகிற வரி, ஏற்றுதல் அல்லது நீங்கள் புதிதாக அறிவிக்கிற அறிவிப்புகள் எல்லாம் சேர்த்து, ஏற்கெனவே இருந்த அரசுக்கு போய்க் கொண்டிருக்கிறது என்று ஒட்டுமொத்தமாக, விளம்பரத்திற்காக, குற்றம்சாட்டுவதற்காக, முன்னாள் முதலமைச்சரைக் களங்கப்படுத்துவதற்காக இந்த வாதங்களை நீங்கள இங்கே சொன்னீர்கள் என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் பேசிய பேச்சு அவைக் குறிப்பிலே இருக்கிறது. அதைப் படித்துப் பார்த்தாலேயே கூட தெரியும். யாரையும் நான் தனிப்பட்ட முறையிலே குற்றஞ்சாட்டிப் பேசவில்லை. நான் நடை முறைகளைத் தான் சொன்னேன். தரப்பட்ட சலுகைகள் எல்லாம் ரத்து செய்யப்பட்டால் அரசுக்கு மேலும் 100 கோடி ரூபாய் வருமானம் வரும் என்று குறிப்பிட்டேன். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் இப்பொழுது இந்த ஐ.எம்.எப்.எல் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு வருகிற வருமானம் ரூபாய் 120 கோடி. தான். ஐ.எம்.எப்.எல். தனிப்பட்ட உற்பத்தியாளர்களுக்குக் கொடுத்திருந்த சலுகைகளை எல்லாம் நிறுத்தியிருந்திருந்தால், சலுகைகள் கொடுக்கப்படாமல் இருந் திருந்தால் 200 கோடி ரூபாயாக அது இருந்திருக்கும். இப்போது அந்தச் சலுகைகளை நிறுத்திவிட்டோம், வரி உயர்வு, அல்லது எக்சைஸ் டியூட்டி உயர்வு என்பதல்ல. எக்சைஸ் டியூட்டியே

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 பிப்ரவரி 21

இல்லாமல் அவர்களுக்கு செய்து, அவர்களுக்கு பெரிய ஆதாயத்தை, அவர்கள் வீட்டுப் பக்கம் ஒரு பெரிய வாய்க்காலை வெட்டி, அதிலே பணத்தையே தண்ணீராக போகச் செய்கின்ற ஒரு சூழ்நிலை இருந்ததை அதைத்தான் தடுத்து நிறுத்தியிருக்கிறோம். அதைத்தான் நான் அளறைக்குக் குறிப்பிட்டேன் இவர்களாக இழுத்துப் போட்டுக்கொண்டு, நான் முன்னாள் முதலமைச்சரை சொன்னேன் என்றும், அவர்களாகவே இதைப் பற்றிப் பேசுவதும், எனக்கு ஏன் என்று புரியவில்லை. ஆனால் உண்மை நிலைமைகளைத் தான் இந்த அவையில் நான் எடுத்து வைத்திருக்கின்றேன். முன்னாலே இருந்த முதலமைச்சர் காலத்தில் நடைபெற்ற இந்தச் சலுகை அவரால் வழங்கப் பட்டது. அவருடைய ஆட்சிக் கலாத்தில் வழங்கப்பட்டது, அந்தச் சலுகைகளை இப்பொழுது நாம் ரத்து செய்கிறோம். இதுதான் நான் இந்த அவைக்குத் தெரிவிக்கின்ற உண்மையாகும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, அவைக் குறிப்பிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும் போது அவருக்கே உரிய வகையிலே சொன்னார்கள். ஆண்டவன் என்றார்கள். ஆண்டவன் என்றால் முன்னால் ஆண்டவன் என்றார்கள்.

மாண்புமிகு போலவைத் தலைவர்: அருள்கூர்ந்து இந்த சட்டத் திருத்தத்தைப் பற்றி மட்டும் கொஞ்சம் அழுத்தமாக ஆதரித்து அல்லது எதிர்த்துக் குறிப்பிட்டால் நன்றாக இருக்கும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, மற்ற உறுப்பினர்கள் இதைப்பற்றிப் பேசியதால்தான் இனம் இரண்டு கோடி ரூபாய் அளவிற்குப் போகிறது என்று சொன்னதால் தான் நானும் பேசுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆளும் கட்சி உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் பேசும்போது "பில்" பற்றி மட்டும் பேசுங்கள் என்று ஆளும் கட்சி சார்பிலே சொல்லப்பட்டு உடனடியாக அவர்களும் அதை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி விவாதம் வேண்டுமென்றால் தனியாக ஒரு நாளைக்கு வைத்துக்கொள்ளலாம்.



1989 பிப்ரவரி 21]

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுகுறித்து எங்களுக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் இப் பொழுது சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு நான் பதில் சொல் கிறேன். நானும் பில் பற்றியே பேசுகிறேன். நானும் திரிலே நீண்ட நேரம் பேச வேண்டுமென்று முயற்சிக்கவில்லை. ஆனால் இங்கே வந்திருக்கின்ற குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்ல வேண்டியது என்னுடைய கடமையாகும். அதற்கு வாய்ப் பளிக்க வேண்டியது மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்க ருடைய பொறுப்பாகும். எனவே மாண்புமிகு தலைவர் அவர் களுக்கு நான் சொல்வது, இப்பொழுது புதிதாக, 8 ரூபாய் எக்ஸைஸ் டியூட்டி இல்லாமல் இருந்ததை, இப்பொழுது அதிகரித் ததன் மூலம், உதாரணத்திற்கு 20 கோடி ரூபாய் அதிகமாக வரும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார் கள். அதுபோல் சேல்ஸ்டாக்ஸ் பற்றி வருகிறபோது, டாஸ்மாக் என்கிற நிறுவனம், முதலிலே உற்பத்தியாளர்களிடத்திலிருந்து வாங்கி, அவர்கள்தான் பர்ஸ்ட் பையர் ( (First buyer) என்ற அடிப்படையில் எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, எந்த இண்டஸ்ட்ரியாக இருந்தாலும் சரி, அங்கே உற்பத்தியாள ரிடத்திலே சேல்ஸ்டாக்ஸ் போடுவதில்லை. விற்பனை ஸ்தானத்தி லேயே தான் சேல்ஸ்டாக்ஸ் போட முடியும். எனவே இவர்கள், பர்ஸ்ட் பையர் ஆக இருந்த டாஸ்மாக், வாங்கினார்கள். எனவே, சேல்ஸ்டாக்ஸை அவர்கள் கட்டினார்கள். செக்கன்ட் பையர்ஸ் (Second buyers) அதற்கு பின்னாலே வருகிறவர்கள். எனவே அவர்களிடத்திலிருந்து கலெக்ட் பனைக் கட்டினார்கள்.

இதிலே ஏதோ பெரிய ஊழல், அவர்கள் கட்டாமல் டாஸ்மாக் கட்டி எடுத்தது என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இங்கே குற்றம் சாட்டினார்கள். அதைப்போல டாஸ்மாக் விலை நிர்ணயம் செய்தது. சாராய அதிபர்கள் விலை நிர்ணயம் செய்தார்கள் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள். அப்போது டாஸ்மாக் என்ற நிறுவனத் திற்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிதான் இருந்தார். இப்போது யாருக்கு பொறுப்பு இருக்கிறது? இப்போது ப்ரொஹிபிஷன் எக்ஸைஸ் கமிஷனருக்கு அந்தப் பொறுப்பு கொடுத்திருக்கிறார்கள் அவர் யார்? அவரும் ஐ.ஏ.எஸ். அதிகாரி. எற்கெனவே இருக்கிறவர்கள், வேண்டியவர்களாக இருக்கலாம் அல்லது இப்போது வேண்டியவர் ஒருவரை அங்கே நியமித்துக்கொள்ளலாம். அரசு

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 பிப்ரவரி 21

செய்வதைத்தான் அந்த அதிகாரி கேட்பார். அப்படிச் செய்யும்போது, நான் ஓர் ஆலோசனை சொல்ல விரும்புகிறேன். அந்த அதிகாரி மட்டுமல்ல, தலைமைச் செயலாளரைக் கொண்ட ஒரு குழு போட வேண்டும். தலைமைச் செயலாளர், நிதிச் செயலாளர், எக்ஸைஸ் கமிஷனர், ப்ரொஹிபிஷன் செக்ரட்டரி—இரண்டுக்கும் ஒருவர் இப்போது—இப்படி 5 பேரைக் கொண்ட குழுவைப் போட்டு விலையை நிர்ணயம் செய்தால், மேலும் தவறு நடக்காமல் இருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தவறுகளோ, ஊழல்களோ நடக்காமல் இருப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன ஆலோசனைகளைச் சொன்னாலும், அவைகளை இந்த அரசு பரிசீலிக்கும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவரவர்களே, டாஸ்மாக் நிறுவனம் அரசு நிறுவனம்தான். அதன்மூலம் வந்த லாபம் அரசுக்குத்தான் வந்திருக்கிறது. அரசினுடைய ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைதான் அதிலேயிருந்து விலை நிர்ணயம் செய்கிறார்கள். சாராய அதிபர்களுக்கு விலை நிர்ணயம் செய்யும் உரிமை கொடுக்கவில்லை. ஒவ்வொரு பாயிண்டாகச் சொல்லலாம். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னதுபோல, தனி விவாதமல்ல இப்போது. நான் சொல்ல வந்தது, 100 கோடி ரூபாய்க்கு சாராய சாம்ராஜ்யத்தைத் தகர்த்திருக்கிறோம் என்று முதலமைச்சரவர்கள் சொன்னதும், அரசுக்கு வர வேண்டிய பணம், எக்சைஸ் டியூட்டி, சேல்ஸ் டாக்ஸ் அல்லது அதிலே ஏற்படுகிற வியாபார மாறுதல்களாலே வருகிற வருமானம் முன்னால் இருந்த அரசுக்குப் போய்க்கொண்டிருந்தது என்பது தவறான வாதமாகும், உண்மையில்லாத வாதமாகும். . .

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவரவர்களே, ஏதையும் தவறாகச் சொல்லக்கூடாது. நான் விளக்கம் சொல்கிறேன். தலைவரவர்களே, இந்த வரியை உயர்த்தியிருக்கிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு எந்த அளவுக்கு வாய்ப்புக் கொடுக்கிறோமோ அப்படி அமைச்சரவர்கள் பேசும்போதும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.



1989 பிப்ரவரி 21]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவரவர்களே, மிகத் தெளிவாக ஓர் உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது வரியை உயர்த்துகிறோம். இந்த வரி உயர்வுக்குப் பிறகும், இப்போது கடைகளில் என்ன விலைக்கு மது விற்கப்படுகிறதோ, அதே விலைக்குத்தான் விற்க வேண்டுமென்று ஆணையர் அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். எனென்றால் இந்த இடைவெளி இருக்கிறதே, அது யாருக்கோ போய்க்கொண்டிருந்தது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு தலைவரவர்களே, இதை அரசினுடைய உத்தரவாதமாக நான் எடுத்துக்கொள்கிறேன். இதற்குப் பின்னாலே என்ன மாறுதல்கள் கொண்டு வந்தாலும், வெளியிலே விற்கப்படும் விலை நிச்சயமாக இப்போது என்ன விலை இருக்கிறதோ அதே விலைதான் தொடர்ந்து இருக்கும் போதும் இருக்குமென்று உத்தரவிட்டதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது அப்படியே இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது அப்படியே இருக்குமென்று எதிர் பார்க்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, எதிர்க் கட்சித் துணைத் தலைவர் ஒரு கருத்தைச் சொன்னார்கள். டாஸ்மாக் நிறுவனத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்தான் ஏற்கெனவே விலை நிர்ணயம் செய்தார்கள். அதில் தவறு நடக்கவில்லையா? இப்போது ஆயத் தீர்வை கமிஷனர் தவறு செய்ய மாட்டாரா என்று வினா எழுப்பினார்கள். அவருக்கு நான் சொல்கிற தகவல், டாஸ்மாக் ஏற்கெனவே விலை நிர்ணயம் செய்யவில்லை என்பதுதான். அதுதான் ஒரு வேடிக்கையான செய்தி. டாஸ்மாக் விலை நிர்ணயம் செய்யவேயில்லை. உற்பத்தியாளர்கள் என்ன விலை நிர்ணயம் செய்தார்களோ அந்த விலைக்கு அதை வாங்கிக்கொண்டிருந்தோமே தவிர, அவர்கள் விலை நிர்ணயம் செய்யவில்லை. அதை இப்போது மாற்றி, மது மற்றும் ஆயத் தீர்வை கமிஷனருக்கு அரசு அந்த அதிகாரத்தை வழங்குகிறது. இதுதான் இப்போது ஏற்பட்டுள்ள மாறுதல்.

அவர்கள் திரும்பத் திரும்ப 100 கோடி ரூபாய் ஊழல், 100 கோடி ரூபாய் ஊழல் என்று சொன்ன காரணத்தால், அன்றைக்கு நான் இங்கே எடுத்து வைத்த அவ்வளவு ஆதாரங்களையும் மறுத்துவிட்டதாக அர்த்தமல்ல. சாராய சாம்ராஜ்யம் தரை

13892
N21, 3, 89
N89.4.2

[டாக்டர் மு. கருணாநிதி] [1989-பிப்ரவரி 21

மட்டமாகி விட்டதென்று சொன்னதை, அவர் ஏன் இவ்வளவு கடுமையாக விமர்சிக்கிறார் என்று தெரியவில்லை. இப்போதும் சொல்கிறேன், சாராய சாம்ராஜ்யம் தரை மட்டம் ஆக்கப்பட்டது உண்மைதான். (மேசையைத் தட்டும் ஒலி) அது மீண்டும் தலை எடுத்தால், மீண்டும் தரை மட்டமாக்குவோம் என்ற உத்தரவாதத்தை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. ரா. சொக்கர்: On a point of order, மாண்புமிகு போலைவத் தலைவரவர்களே, ஆயத் தீர்வை I.M.F.S. உற்பத்தி செய்யப்படும் இடத்திலிருந்து உற்பத்தியாளர்களால்தான் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஆனால் அது டாஸ்மாக் நிறுவனத்திற்கு மாற்றிக் கொடுக்கப்பட்டதால் அந்த ஆயத் தீர்வைக்குச் சேர்த்து கட்டப்பட வேண்டிய விற்பனை வரி அரசாங்கத்திற்கு இழப்பாக ஏற்பட்டுவிட்டது. விற்பனை வரித் துறையிலிருந்து பல முறை சொல்லப்பட்டது. அதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் அதற்கான நடவடிக்கை கவர்னர் ஆட்சியில் எடுக்கப்பட்டு, அவர்கள் 50 கோடிக்கும் மேலான விற்பனை வரி செலுத்த வேண்டுமென்று உத்தரவு இடப் பட்டு, அவர்கள் அதற்கு உயர்நீதி மன்றத்திலே ஸ்டே உத்தரவு பெற்றதாக முதலமைச்சரவர்கள் தெரிவித்தார்கள்.

(தடங்கல் 10-50)

அந்தச் சாராய சாம்ராஜ்யத்தைத் தகர்ப்பதற்காக அடிக்கல் நாட்டிய கவர்னருடைய வழியிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய அனைத்து முயற்சிகளையும் நாங்கள் வரவேற்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சாராய சாம்ராஜ்ய கட்டிடத்தினுடைய ஒரு கல்லை கவர்னர் பெயர்த்தார்கள். அதற்குப் பிறகு? இப்போது எல்லாக் கற்களும் பெயர்க்கப் பட்டிருக்கின்றன.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு போலைவத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில் அமைச்சர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொல்லுகிற விவரங்களைப்போல, அவர்கள் என்ன குற்றச்சாட்டுகளைச் சொல்கிறார்களோ அவற் றிற்கு மறுப்புச் சொல்ல எங்களுக்கு உரிமை இருக்கிறது. இங்கே தான் மீண்டும் மீண்டும் கூற விரும்புவது என்னவென்றால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் டாஸ்மாக் விலையை நிர்ணயம் செய்யவில்லை; உற்பத்தியாளர்கள்தான் செய்தார்கள்" என்று சொன்னது சரியல்ல. உற்பத்தியாளர்களிடமிருந்து டாஸ்மாக் என்கிற அரசுத்துறை நிறுவனத்தின் அதிகாரி ஐ.ஏ.எஸ். அதிகாரி—கேட்பார். என்ன விலைக்கு நீங்கள் விற்கிறீர்கள்? உங்களுடைய உற்பத்திச் செலவு என்ன என்று கேட்டு, உற்பத்தி யாளர்கள் அவர்களுக்கு கொட்டேஷன் கொடுத்ததற்குப் பின்னால் இந்த அரசு அதிகாரி அவர்கள் சொல்லுகிற விலையை ஒன்று ஏற்றுக்கொள்ளலாம் அல்லது அதைக் கூட்டலாம் அல்லது குறைக்கலாம் இப்படி விலையை நிர்ணயம் செய்வது டாஸ்மாக் அதிகாரிதானே தவிர உற்பத்தியாளர் அல்ல. பல நேரங்களில் உற்பத்தியாளர்கள் கொடுக்கிற விலையை 'ஏற்றுக் கொள்ள முடியாது, இதை நீங்கள் குறைத்துக் கொடுங்கள்—இந்த விலைக்கு எடுத்துக்கொள்ள முடியாது' என்று சொல்லி, அதற்குப் பின்னாலே அடுத்தவரிடம் கொட்டேஷன் வாங்கி விலையை நிர்ணயம் செய்வது அதிகாரியே தவிர உற்பத்தியாளர் அல்ல. உற்பத்தியாளர் விலையை நிர்ணயம் செய்ய முடியாது—விலையை நிர்ணயம் செய்யவுமில்லை. அதைத்தான் நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். டாஸ்மாக் நிறுவனத்தில் உள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரி விலை நிர்ணயம் செய்யும் அதிகாரம் பெற் றிருந்தாரே தவிர, உற்பத்தியாளர் அல்ல. உற்பத்தியாளர்கள் ..



[1989 பிப்ரவரி 21] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: டாஸ்மாக்கிலிருந்த அதிகாரி உற்பத்தியாளர் சொன்ன விலையைக் கொடுத்து வாங்கினார். அப்படி அந்த அதிகாரி, வாங்கும்படி செய்யப் பட்டார். இன்னும் அழுத்தமாகச் சொல்ல வேண்டுமானால் அன்றைக்கிருந்த அதிகாரி அரசின் சொற்படி ஆடினார். அந்த அதிகாரி என்ன செய்தார் என்பதை இந்த அரசு ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கும். அதற்கு இங்கே எதிர்க்கட்சித் தலைவருடைய பேச்சு உதவும் என்று கருதுகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: அன்றைக்கிருந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி அரசின் சொற்படி ஆடினார் என்றால், இன்றைக் கிருக்கிற தொழில் செக்காட்டரி அல்லது எக்ஸைஸ் செக்காட்டரி இந்த அரசின் சொற்படி ஆடமாட்டார் என்பது என்ன நிச்சயம்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த அரசு அப்படிப் பட்ட அக்கிரமமான உத்தரவுகளை நிச்சயமாக அவருக்குப் போடாது.

[1989 பிப்ரவரி 21

திரு. எஸ். திருநாவுக்கரசு: இது அரசு உத்தரவல்ல. நீங்கள் போடுவதாக நான் சொல்லவில்லை. அந்த அதிகாரி—டாலுமாக்கில் இருந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி—அரசினுடைய இசைடம் போல் செய்தார் என்றால் இப்போது இருக்கிற ஐ.ஏ.எஸ். அதிகாரியும், அதைப்போல் செய்ய முடியும் ஆக, யார் விலையை நிர்ணயம் செய்தார்கள் என்று சொன்னால், முன்னாலிருந்த டாஸ்மாக்கின் ஐ.ஏ.எஸ். அதிகாரிதான் விலையை நிர்ணயம் செய்தார். இப்போது அந்தப் பொறுப்பை எக்சைஸ் கமிஷனரிடம் கொடுத்திருக்கிறீர்கள். இந்த அரசு என்ன கேட்கப் போகிறது? நீங்கள் எவ்வளவு வைத்தாலும் சரி அல்லது உற்பத்தியாளர்களிடம் எழுதி வாங்கினாலும் சரி, அவர்களிடம் எழுதிக் கேட்டு, என்ன விலை நிர்ணயிக்கலாம் என்று அரசு அதிகாரிதான் செய்யப் போகிறார் . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் முகத்தின் அடிப்படையில் பேசுகிறார் வந்திருக்கிற ஆயத்துறை கமிஷனர் ஏன் தவறு செய்ய மாட்டார் என்று நாமாக முடிக்கக் கூடாது. தவறு செய்தால், சரியான தண்டனையை அவர் அனுபவிப்பார்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே இப்போது இருக்கிற அதிகாரி மீது குற்றம் சுமத்துவதற்காக நான் இதைச் சொல்லவில்லை. ஆனால் அதை ஒரு யூகமாகச் சொல்லி, ஏற்கெனவே இருந்த அரசின்மீது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமானத்தில் பேரில் எதையும் பேசக் கூடாது என்பது அவையின் விதி.

திரு. எஸ். திருநாவுக்கரசு: ஏற்கெனவே பல காரியங்களை—அதிகாரி பற்றிச் சொன்னதின் பேரிலேயே சொல்லி, அனுமானத்தின்பேரிலேயே விவாதமும் நடப்பதால்தான் நானும் அனுமானத்தின் பேரில் சொல்லுகிறேன். (குறுக்கீடு) விலையை நிர்ணயம் செய்தது உற்பத்தியாளர் அல்ல அரசு அதிகாரிதான்—டாஸ்மாக்தான். இன்றைக்கும் எக்சைஸ் கமிஷனர் தான் விலையை நிர்ணயம் செய்யப் போகிறார். நீங்கள் எந்த அதிகாரியைப் போட்டாலும் சரி, எந்த முறையை வைத்தாலும் சரி, ஏலம் என்று வைத்தாலும் சரி எழுதி வாங்கினாலும் சரி—நீங்கள் என்ன செய்யப் போகிறீர்களோ, அது உங்கள் பிடம் வந்தால்தான் தெரியும்— விலையை நிர்ணயிக்கப் போவது அரசு அதிகாரிதான். டாஸ்மாக் என்கிற அரசு நிறுவனத்தின்



இருக்கிற அதிகாரி தவறு செய்தார் என்றால், அதில் ஊழல் நடந்திருக்கிறது என்றால். . . (குறுக்கீடு) ஒரே விஷயத்தில்தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன். நான் பேசும்போது பல குறுக்கீடுகள் இருந்த காரணத்தால்—நான் பேசியது அநேகமாக 5 அல்லது 10 நிமிஷம்தான் இருக்கும் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து அதை இப்போதே கணக்கெடுத்துவிடலாமே.

திரு. எஸ். திருநாவுக்கரசு: குறுக்கீடுகள் நிறைய இருந்தன என்பதற்காகச் சொன்னேன் . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து முடித்துக் கொள்ள வேண்டும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, மொத்தத்தில் முன்னால் இருந்த அரசை பழி சுமத்துவதற்காக, மறைந்த தலைவரைக் களங்கப்படுத்துவதற்காக, ஆட்சியைக் களங்கப்படுத்துவதற்காக வேண்டுமானால் நீங்கள் சொல்கிற வாசகங்கள், சாராய சாம்ராஜ்யம் தகர்க்கப்பட்டது என்பது போன்ற வாசகங்கள், 100 கோடி என்று முதலமைச்சர் அவர்களும், மற்ற ஆளும் கட்சி உறுப்பினர்கள் 200 கோடி, 300 கோடி., 700 கோடி என்று சொல்வதும்,—மாண்புமிகு முதலமைச்சர் சொன்னதைப் போல மொத்த வருமானமே 120 கோடி ரூபாய். அதிலே பூரசாங்கத்தினுடைய ஊழல் 100 கோடி என்று முதலமைச்சர் சொல்லி, மற்ற ஆளும் கட்சி உறுப்பினர்கள் இல்லை, இல்லை ஒரு நாளைக்கு 2 கோடி, ஆண்டிற்கு 700 கோடி என்று சொல்லி விடுவது, இதெல்லாம் முன்னால் இருந்த அரசை, முதலமைச்சரை, அவர் இருக்கிறபோது முயன்று தோற்றவர்கள், அவர் மறைந்ததற்குப் பிறகு களங்கப்படுத்துகிற முயற்சி தான் என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். உங்களுடைய வாதங்களும் மக்களுக்குப் போகின்றன. இந்த விவாதங்களும் போகும். மக்கள பார்த்துக் கொள்வார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லி, (கூச்சல், குழப்பம்) பல காரியங்கள் நீங்கள் சொன்னதில் எதுவும் அடிப்படை உண்மைகள் இல்லை. சிந்திருத்தங்களாக வருவதையெல்லாம் அரசுக்குப் போனது என்று சொன்னது தவறு என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லி, இந்த விளையேற்றத்தை நீங்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சாம்ராஜ்யத்தை தகர்த்தேன் என்று சொன்னார்கள்

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 பிப்ரவரி 21

தகர்த்து எறியுங்கள். நாங்களும் ஒத்துழைப்புத் தருகிறோம். மொத்தமாகவே எடுத்துவிடுங்கள்; டோட்டல் ப்ரிவிஷன் கொண்டு வாருங்கள். பூரண மதுவிலக்கைக் கொண்டு வாருங்கள். (கூச்சல்) உடனடியாக அமல்படுத்துங்கள். எப்படி சாராயம் ஒழிக்கப்பட்டதோ, புரட்சித் தலைவர் காலத்தில்—தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்டது, புரட்சித் தலைவர் இல்லாமல் ஆக்கினார். இந்தக் குடிப் பழக்கத்தை இல்லாமல் ஆக்கினார். முன்னால் கொண்டு வந்தது தி.மு.க. அரசு தான். (குறுக்கீடுகள்) ஏன் சத்தம் போடுகிறீர்கள்? உண்மை சுடட்டால் நான் என்ன செய்ய முடியும்? ஆகவே, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் முதன்முதலாக சாராயம் தமிழ்நாட்டில் கொண்டு வரப்பட்டது. அதை கடைசியாக நிறுத்தியவர் புரட்சித் தலைவர். நீங்கள் புதியதாக ஒன்றும் இப்போது செய்யவில்லை. (குறுக்கீடுகள்) எனவே, நான் சொல்ல விரும் புவது ஐ.எம்.எப்.எஸ் என்று சொல்லப்படுகிற உள்நாட்டிலே தயாரிக்கப்படுகிற வெளிநாட்டு மது பானங்களை ரத்து செய்து, பூரண மதுவிலக்கைக் கொண்டு வந்து, சாராய சாம்ராஜ்யத்தைத் தகர்த்து எறியுங்கள். அதற்கு எங்கள் சார்பில் நாங்கள் ஒத்துழைப்புத் தருவோம். அந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுங்கள். ஆக்கப்பூர்வமான காரியங்களைச் செய்வதற்கு உங்களை ஆட்சியில் மக்கள் அமர்த்தி இருக்கிறார்கள். அதை விட்டுவிட்டு முன்னால் இருந்த அரசைக் களங்கப்படுத்தவும், தாக்கப்படுத்தவும், இந்தக் காரியத்தையே செய்துகொண்டிருப்பதற்கு உங்களை மக்கள் ஆட்சிக்கு அனுப்பவில்லை. எனவே அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஏதோ தி.மு.க. ஆட்சியில் மதுவிலக்கு எடுக்கப்பட்டு விட்டது என்று சொன்னார்கள். தி.மு.க. ஆட்சியில், அப்படியொரு நிலை எடுப்பதற்கு முன்பு, தி.மு.க.-வினுடைய பொதுக் குழு கோவையில் கூடி விவாதித்தது. அதிலே, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், கழகத்தின் பொருளாளர், அவர் தான் மதுவிலக்குச் சட்டத்தை எடுக்க வேண்டும் என்பதற்கு பல்வேறு ஆதாரங்களைக் காட்டி, ஒரு மணி நேரத்திற்கு மேலாக கோவை, பொதுக் குழுவில் பேசி, எதிர்த்த பொதுக் குழு உறுப்பினர்களை யெல்லாம் கூட சமாதானப்படுத்தி, இந்த நேரத்தில் இதைத் தவிர வேறு வழியில்லையென்று சொன்னார்கள். அதையும் அவர் ஆனந்த விகடன் பத்திரிகையில் எழுதிய அவருடைய



1989 பிப்ரவரி 21] [டாக்டர் மு. கருணாநிதி]

சுயசரிதையில் அவரே குறிப்பிட்டு இருக்கிறார். அடபடி சொன்ன காரணத்தால் அவருக்கோ, எனக்கோ மதுவிலக்குச் சட்டத்தை அகற்ற வேண்டுமென்ற எண்ணம் இருந்தது எப்போது பொருள் அல்ல. அப்போதுள்ள சூழ்நிலைக்கு அது ஏற்றவொரு கருத்தாக இருந்தது. எனவே, அந்த மதுவிலக்குச் சட்டம் ஒத்திவைக்கப்பட்டது. நான் இந்த அவையில் முதலமைச்சராக இருந்து அறிவித்த போதும் கூட, ஒத்திவைக்கப்படுகிறது என்று தான் அறிவித்தேன். அதன் பின்னர், பல்வேறு தலைவர்கள், பெருந்தலைவர் காமராஜர், மூதறிஞர் ராஜாஜி, கண்ணியத்திற் குரிய காயிதே மில்லத், இவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் மீண்டும் மதுவிலக்குச் சட்டம் கொண்டு வரப்பட்டது. மீண்டும் மதுவிலக்குச் சட்டம் கொண்டு வரப்பட்டு 1977-ம் ஆண்டு ஆட்சி மாறி, அருமை நண்பர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பை ஏற்ற பிறகு சொன்னார்கள் "சாராயக் கடைகளையும், கள்ளுக் கடைகளையும், மதுக்கடைகளையும் நிறக்க மாட்டேன். தாய் மார்களின் கண்ணீரை மீண்டும் வரவழைக்க மாட்டேன்" என்று சொன்னார்கள் அதற்கு பிறகு அவரே மதுவிலக்குச் சட்டத்தை வாபஸ் பெற்று, தாய்மார்களுடைய கண்ணீரைத் துடைப்பதற் காக மதுவிலக்குச் சட்டத்தை வாபஸ் பெற்றேன் என்று அவர் களே அதை அறிவித்தார்கள். அதன் பின்னர், சாராயக் கடை களையும், கள்ளுக் கடைகளையும் மாத்திரம் மூடிவிட்டு, இந்த ஐ.எம்.எப்.எஸ். கடைகளை அனுமதித்ததும், அதன் தொடர் பாக நடவடிக்கைகளை மேற்கொண்டதும் கடந்த கால அரசு தான். மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில் இந்தியா முழுவதும் இந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ளப்பட்டு நடை முறைக்கு வந்தால்தான் தமிழ்நாட்டில் அது வெற்றிகரமாக நடைபெற முடியும் என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இட மில்லை. இப்போது கூட ஐ.எம்.எப்.எஸ் என்ற அனைத்து சாராயக் கடைகள் எல்லாம் மூடப்பட்டாலும் கள்ளுக் கடைகள் எல்லாம் மூடப்பட்டாலும் கூட கள்ளச்சாராயம் காய்ச்சுகிற தொழில் கடந்த காலத்திலும் சரி, இப்போதும் சரி நடந்து கொண்டிருக்கிறது. அதை முழுவே அடக்கி ஒடுக்கவும், கள்ளச் சாராய வியாபாரத்தை முழுவே ஒழிக்கவும் இந்த அரசு முயற்சி களை மேற்கொள்ள இருக்கிறது. வந்து இருபது நாட்கள் தான் ஆகின்றன.

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 பிப்ரவரி 21

(முற்பகல் 11-00)

எனவே அந்த முயற்சிகளிலும் இந்த அரசு ஈடுபட இருக்கிறது. ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட அந்த ஐ.எம்.எப்.எல். கடைகளில், அந்த வியாபாரத்தில் ஏற்பட்ட குறைபாடுகளைக் களையதற்கு எடுக்கப்பட்ட முயற்சியே தவிர, யாரையும் பழி சொல்லவேண்டும், யாரையும் களங்கப்படுத்த வேண்டும் என்கிற எண்ணத்தோடு செய்யப்பட்ட காரியங்கள் அல்ல, சொல்லப்பட்ட கருத்துக்கள் அல்ல என்பதை மீண்டும் தெரிவித்து, அரசுக்கு இன்றைக்கு ஏற்பட்டுள்ள நிதி ஆதாயப் பற்றாக்குறையின் காரணமாக மத்திய அரசிலே போய பணம் கேட்டுக்கொண்டிருக்கிற இந்தக் காலங் கட்டத்தில், நம்முடைய கிட்டங்களை ஓளவுதான் குறைக்க முடியுமே தவிர, பாதி அளவுக்குக் குறைக்கக்கூடிய சூழ்நிலை வந்துவிட்டக் கூடாது என்பதற்காகவும் நிதி ஆதாரங்களை எப்படிப் பெருக்கலாம் என்று முயன்று பார்த்ததில் கிடைத்த தகவல்கள் இவை. அந்தத் தகவல்களை இந்த அவைக்கு வைத்து, அதற்கு நிவாரணம் தேடப்படுகிற முயற்சிதான் இந்த அரசால் மேற்கொள்ளப்படடி இருக்கிறது என்பதை மீண்டும் ஒரு முறை இந்த அவையின் முன் வைக்கிறேன்

திரு. எல். கணேசன் : (முதலமைச்சரின் பொறுப்பை ஏற்றார்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மிகச் சுருக்கமாகவே என்னுடைய விளக்கத்தைத் தர விரும்புகிறேன். இந்தச் சட்டத் திருத்தத்தின் நோக்கம் மிகத் தெளிவானது. அரசின் வருமானத்தைப் பெருக்குவது அதைப்போலவே மற்ற மாநிலங்களில் நிறைவேற்றப்படுகிற மூலதன்ஸ்வையையொட்டி ஏறத்தாழ சம அளவிற்கு நம்முடைய ஆயத் தீர்வையை அதிகப்படுத்துவது; இன்னொன்று, தமிழ் மாநிலத்திலிருந்து அயல் மாநிலங்களுக்கு மதுவகைகள் ஏற்று மதி செய்யப்படாமல் அல்லது கடத்தப்படாமல் நடுப்படுவது என்பதுதான் இந்தச் சட்டத் திருத்தத்தின் அடிப்படையான நோக்கம்.

இதை 30 ரூபாய் வரையில் விதிக்கலாம் என்று முன்னரே விதி இருக்க, இருந்தாலும் 25 ரூபாய் தான் அவர்கள் விதித்திருந்தார்கள். இப்போது நாம் கொண்டு வருகிற திருத்தம் 60 ரூபாய் வரையில் அந்த வரியை விதிக்கலாம் என்ற எல்லைக் கோடும், 60 ரூபாய் என்ற அளவில் உச்சகட்டம் என்று இருந்தாலும், 55 ரூபாய் அளவில் வரியை விதிக்கவும் இந்தத் திருத்தத்தின் மூலம்



1989 பிப்ரவரி 21] [திரு. எல். கணேசன்]

நாம் எதிர்பார்க்கிறோம். இந்தத் திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் உடனடியாக அதற்குரிய அரசு நோட்டிபிகேஷன் அனுப்பப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இங்கே ஏறத்தாழ எல்லோருமே, மாறுப்பட்ட கருத்துக்களை இடையிடையே சொல்லியிருந்தாலும், அதிகரித்து ஒட்டுமொத்தமாகப் பேசியிருக்கிறார்கள். குறிப்பாக இந்த வாதத்தைத் தொடங்கி வைத்தவர் அருமையாக ஒன்றைச் சொன்னார்கள். வரி விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது, அதை ரத்து செய்து இருக்கிறீர்கள், அதற்கும் நீங்கள் ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்துச் செயலாமா என்று கேட்டிருக்கிறார்கள். முதல்வர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள் அதைக் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுப்பார்கள்.

இந்த ஆயத் தீர்வையை உயர்த்துகிறபோது, அதற்கு ரெட்ரால் எபக்ட் கொடுப்பது என்பது இயலாது. அது முன்மாதிரி இல்லாதது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். இந்த அவையில் ஆளுநர் உரைக்கு நன்றி அறிவிப்புத் தீர்மானத்தின் மீது விளக்கம் தந்த போது, முதல்வர் அவர்கள் தெளிவாக விளக்கினார்கள். அதிலே கூர்ந்து கவனித்தால் எங்கேயும் அவர்கள் பெருந்தன்மையோடு யாரையும் குறிப்பிட்டுச் சொல்லாமல் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். அவரை நாம்மை எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் எல்லாவற்றிலும் he is allergic. Of course he is a good Advocate. But he has taken a very bad case. Perhaps, if he is defeated it is not because of his inefficiency but because of the nature of the case that he has taken. அவர் இவ்வளவு வாதாட இருக்க வேண்டியதில்லை. ஒட்டுமொத்தமாக நான் சொல்லிக்கொள்ள விரும்புவது மிகத் பொறுப்புணர்மையோடு நம்முடைய முதல்வர் அவர்கள் உரையாற்றியிருக்கிறார்கள். அதுதான் மூலம்; அதுதான் உரை, அதுதான் பகுதை, அதுதான் பொழிப்புரை, உதுதான் விளக்கவுரை, அதுதான் கருத்துரை. அதற்குமேல் என் உரை தேவையில்லை, எவ்வளையும் தேவையில்லை என்று கூறி இந்தச் சட்டத் திருத்தத்தை ஏற்று, நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமர்கிறேன்

[1989 பிப்ரவரி 21

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 4/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, தொடுத்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பிற்சேர்க்கை தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 4/1989) நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பிற்சேர்க்கை தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 5/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதன் முதலில் என்னுடைய பேச்சைத் தொடங் குவதற்கு முன் பேசுவதற்காக வாய்ப்பு அளித்த என்னுடைய தொகுதி மக்களுக்கும், மற்ற அத்தனை பேர்களுக்கும் என் னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, நான் இந்த

* 2—2—1989-ம் தானிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளி யிடப்பட்டுள்ளது.



1989 பிப்ரவரி 21] [திரு. யூ. கே. வெள்ளிங்கிரி

மதுவிலக்கு சட்டத் திருத்தத்தின் மேரில் என்னுடைய கட்சியின் சார்பாக என்னுடைய நிலையை நான் விளக்குகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தமிழகத்தில் மதுவிலக்குச் சட்டத்தின் மூலமாக 6 இலட்சத்திற்கும் மேற்பட்டு இருக்கக் கூடிய வழக்குகள் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருக் கின்றது. கவர்னர் பேருரையின் பேரில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தில் மதுவிலக்குச் சட்டம் அமலில் இருந்தபோதிலும், ஒருபுறத்திலே அமலபடுத்துவதாகச் சொன்னவர்கள். ஏற்கனவே இருந்த ஆட்சி யாளர்கள் தாங்கள் மதுவிலக்கை முழுமையாக அமல்படுத்த இருக் கிறோம் என்று பேசியவர்கள் கடந்த காலங்களிலே, 6 இலட்சத் திற்கும் மேற்பட்டு இருக்கக் கூடிய வழக்குகளைப் பைசல் செய் யாமல், இன்றையதினமும் அது கிடப்பிலே இருக்கின்ற ஒரு நிலைமையை நாம் பார்க்கின்றோம். அந்த முறையைப் பார்த் தோம் என்று சொன்னால், 3 ஆண்டு காலத்திற்குள்ளாக, ஏற்கனவே இருக்கக் கூடிய சட்டம் 3 ஆண்டுகளுக்குக் கடும் தண்டனையும், ரூ. 3,000 அபராதமும் விதித்து, அந்த வழக்குகளைப் பைசல் செய்ய லாம் என்று ஒரு சட்டம் இயற்றியிருக்கிறார்கள் ஆனால் என் அந்தச் சட்டத்தை இதுவரைக்கும் நடைமுறைப்படுத்தவில்லை? எதற்காக இந்த 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட வழக்குகளைக் கிடப்பிலே போட்டார்கள் என்பதைப் பற்றி மாண்புமிகு முதல மைச்சர் அவர்கள் சொல்லியிருந்தால், அது இன்னும் தெளிவாக இருந்திருக்கும்.

ஆனால் ஏற்கனவே ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் ஒரு புறத்திலே அமல்படுத்துவதாகச் சொல்லிவிட்டு, மறுபுறத்திலே 6 இலட்சம் வழக்குகளை எல்லாம் கிடப்பிலே போடுவது என்பது அந்தப் பாவங்களை எல்லாம், இன்னும் 20 நாட்கள் கூட ஆக வில்லை, இங்கே இந்த அரசின் மீது சுமத்தியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. ஆகவே நான் இந்தச் சட்டங்கள் இருந்தாலும்கூட சட்டத்தை முறைப்படுத்த முடியாமல், அந்தச் சட்டத்தின் மூலமாக, ஏற்கனவே கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் மிக அதிகமாக இருக்கிறார்கள் என்று முதலமைச்சர்கள் சொன்னார்கள்.

[திரு. பு. கே. வெள்ளிங்கிரி] [1980 பிப்ரவரி 21

நம்முடைய தமிழ்நாட்டில் மதுவிலக்கு இருந்தபோதி லும்கூட, மிட்டத்தட்ட தமிழகம் முழுவதிலும் சாராயக் கடை களும், கள்ளுக்கடைகளும் லீகலீயாக ஏற்கனவே இருந்த அரசுக்கு வேண்டியவர்களுக்கு ஒதுக்கப்பட்டு இன்றைக்கு நாடு முழுவதும் நாற்றம் எடுக்கக் கூடிய நிலைமையை நாம் பார்க்கின் றோம். அதுவே தான் இன்றைக்கு 6 இலட்சம் வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. ஒருபுறத்திலே சட்டம் போகிறது, இன்னொரு புறத்திலே சட்டத்தின் பெயரில் கோட்டாக்களைக் கொடுக்கிறார்கள். கோட்டாக்களை போலீஸ் வைத்திருக்கிறார்கள் என்பதாகச் சொல்வார்கள். எப்படியாவது ஒரு வழியில் கோட்டா என்ற அடிப்படையில் கேஸ்களை புக் செய்வார்கள். நடை முறைப்படுத்த மாட்டார்கள். அதுவே தான் இந்த 6 இலட்சம் கேஸ்கள் தேங்கியிருக்கின்றன. எனவேதான் இந்த 6 இலட்சம் கேஸ்களை ஒரு முடிவிற்குக் கொண்டுவருவதற்காக இன்றைக்கு பொறுப்பு ஏற்ற பிறகு, இங்கே ஒரு நியாயமான மூடிவிற்கு இந்த அரசு வந்திருக்கிறது என்பதை சொன்னால், அதை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். 3 வருஷங்கள் என்பதை 3 மாதங்களாகக் குறைத்திருக்கிறார்கள். ரூ. 3,000 என்பதை ரூ. 1,000 அதற்குக் குறைத்திருக்கிறார்கள். இது உண்மையிலேயே பாவம் சாதாரண மக்களை பாதித்திருக்கு. கொள்ளை அடிக்கக் கூட்டங்கள், கோடிக் கணக்கிலே வெளியிலே உலவிக் கொண்டிருக் கிறார்கள். இந்தக் கேஸ்களில் இருப்பவர்கள் எல்லாம் சாதாரண மக்கள். ஒன்றாட வாழ்க்கையை நடத்தக்கூடிய, ஒரு வேளை உணவு கூட நிம்மதியாக மக்களைத்தான் பிடித்து போலீசிலே இந்தக் கேஸ்களை போட்டு இருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். அந்த மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்கு இந்த அரசு எடுத்த நடவடிக்கைகள் நிச்சயம் நியாயமானது. அந்த முறை யிலே இந்தச் சட்டத்தை இருக்கவேண்டும் என்பது, எங்களைவே

(மூற்பகல் 11-10)

இருக்கிற தண்டனையைக் குறைப்பது என்பது நியாயமானது. அந்த முறையிலே இந்த அரசை நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். இது நிறைவேற்றப்படும் என்று சொன்னால் தமிழகத்திலே இருக்கக்கூடிய பல்லாயிரக்கணக்கானவர்கள் அதாவது அந்த 6 இலட்சம் பேர்கள் கேஸிலே இருக்கக்கூடியவர்கள் எல்லாம் ஒரு மன நிம்மதியோடு இந்த அரசைப் பாராட்டுவார்கள்



1980 பிப்ரவரி 21] [திரு. பு. கே. வெளிங்கிரி]

என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால், ஏற்கனவே பேசியவர்கள் அனை இந்த ஆட்சியில் இருந்தவர்கள் இதற்கெல்லாம் விளக்கத்தைச் சொல்லவில்லை. வேண்டுமென்றே சொல்வதாகச் சொன்னார்கள் அவ்வளவுதான்.

100 கோடி ரூபாய்க்கு மேல் அரசுக்குக் கிடைக்க வேண்டிய வருமானம் போயிருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்களை தவிர, அதற்கு ஒரு காரணத்தை விளக்கத்தை இந்த மன்றத்திலே தந்ததாகத் தெரிய வில்லை. அந்த முறையிலே இந்தச் சட்டத்தை எளிமையாகவே நம்முடைய நாட்டு மக்களுக்கு நன்மையைச் செய்யும்போது, இப்போது மட்டும் இந்தப் பிரச்சினைகள் ஒரு முடிவிற்கு வராது என்பதுதான் எனதுடைய கருத்து. நாம தொடர்ந்து நாடு மக்கள் மத்தியிலே இப்படிப்பட்ட தவறான காரியங்களைச் செய்யக் கூடாது என்று பேச வேண்டும். இந்த ஆட்சி மன்றத் திலே பொறுப்பு ஏற்கக் கூடிய அரசும், சட்டமன்ற உறுப்பினர் களும் மக்கள் மத்தியிலே சென்று எடுத்துச் சொன்னால்தான், இதற்கு ஒரு முடிவு ஏற்படும் என்பதைச் சொல்லி, மக்கள் மத்தி யிலே அந்தப் பிரசாரத்தைக் கொண்டு செல்ல வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வழக்குகள் நிரந்தரமாகத் தீர்ந்துவிடும். ஆனால் மேலும் வராமல் இருக்க வேண்டும். அப்படி மேலும் வராமல் இருக்க வேண்டுமென்று சொன்னால், இங்கே தொடர்ந்து பேசிக்கொண்டி ருக்கிறோம், நாட்டிலே கள்ளச் சாராயம் ஒழிக்கப்பட வேண்டுமென்று. அப்படி ஒழிக்கப்பட வேண்டுமென்று சொன் னால் அரசும் போலீசும் இணைந்து செயல்பட்டால்தான் அது சாத்தியமே தவிர, இல்லையென்று சொன்னால் அது சாத்திய மாகாது. மேலும் மேலும் அந்தக் குற்றம்கள் அதிகரிக்கும் என்பதை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொண்டு, இன்மே லாவது விற்கிறோரும் உலவக்கூடிய மதுக் கடைகளையும், கள்ளுக் கடைகளையும் கடுமையான முறையில் பாரபட்சம் இல்லாமல்—நான் அதைத்தான் எதிர்பார்க்கிறேன், கடந்த காலத்தில் அப்படி இல்லை. பாரபட்சம் காட்டப்பட்டது. வேண்டியவர்களுக்குச் சலுகை, வேண்டாதவர்களுக்கு கேஸிலே பிடித்துக் கைது என்றெல்லாம் நடந்திருக்கிறது—ஆகவேதான் பாரபட்சம் காட்டாமல் நியாயமான முறையில் நடப்போம் என்ற ஒரு நிலையை உருவாக்குவதற்கு நாம் பாடுபட வேண்டும்.

[திரு. யூ. கே. வெள்ளிங்கிரி] [1989 பிப்ரவரி 21

அதே நேரத்தில் இந்தத் தண்டனைக் குறைப்பின் மூலமாக இன்றைக்கு பல சமூக விரோத சக்திகள் இதன் மூலம் பயன் பெற அனுமதிக்கக் கூடாது. இன்றைக்கு நாட்டிலே சமூக விரோத சக்திகள் ஏராளமாக வளர்ந்திருக்கின்றன. அதையும் தடுத்து நிறுத்துவதற்கு சம்பந்தப்பட்ட துறை மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி என்றால் இந்தச் சட்டத்தின் பின்னால் ஒளிந்துக்கொண்டு அவர்களும் பலன் அடைய்க் கூடிய நிலையில் வாய்ப்பு ஏற்படுத்தாமல், சாதாரண மக்கள் இதன் மூலம் பாதுகாக்கப்பட்டு சமூக விரோதிகள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த முறையிலே வரக்கூடிய எதிர்காலத்தில் பாரபட்சம் இல்லாமல் சரியான முறையிலே நடவடிக்கை எடுத்தால் அது நல்லது.

நாங்கள் எல்லாம் வாக்குகள் கேட்கப் போகிறபோது ஏராளமான மக்கள், கீழ்தட்டில் இருக்கக்கூடிய அரிசன மக்கள், அடித்தள மக்கள், சேரிப்பகுதி தாய்மார்கள் கதறி கதறி எங்களிடத்திலே அழுதார்கள். சாயங்காலம் ஆனால் ஒரே தொல்லை. வீட்டிலே அடி.தடி சண்டை, குடித்துவிட்டு எங்களைத் தொந்தரவு படுத்துகிறார்கள். தயவுசெய்து வரக்கூடிய சட்டமன்றமும், வரக்கூடிய சர்க்காரும் எங்களை எல்லாம் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையிலே இதை நாம் கடுமையாக நிறைவேற்றினால் லட்சக்கணக்கான தாய்மார்கள் முத்தியிலே இந்த அரசுக்கு ஒரு நல்ல பெயர் ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்ல கடமைப்பட்டு இருக்கிறேன். அந்த முறையில் இந்தத் திருத்தத்தை வரவேற்று அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. எஸ். டேனியல் ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின்மீது காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மதுவிலக்கைப் பொறுத்தமட்டில் எங்களுடைய காங்கிரஸ் கட்சி பூரண மதுவிலக்கை தமிழகத்தில் அமல்படுத்த வேண்டும் என்ற கொள்கையில் தீவிரமான, அசையாத நம்பிக்கை கொண்டிருக்கிறது என்பதை முதன் முதலில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1989 பிப்ரவரி 21] [திரு. எஸ். டேனியல் ராஜ்]

முந்தைய அரசினுடைய நடைமுறைகளை நீங்கள் மாற்றி வருகின்றீர்கள். மேலவையை மீண்டும் தமிழகத்திலே கொண்டு வருவதற்கு தீர்மானத்தைப் போட்டு நிறைவேற்றியிருக்கிறீர்கள். அதே போன்று நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களுக்கான அதிக அதிகாரங்களை வழங்கியிருக்கிறீர்கள். ஆனால், மதுவிலக்கு கொள்கையைப் பொறுத்த மட்டில் கடந்த அரசு எந்தக் கொள்கையைப் பின்பற்றியதோ அதே கொள்கையைத் தான் இந்த அரசும் மீண்டும் பின்பற்றுகிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மதுவிலக்கிலே மட்டும் காங்கிரஸ் கட்சியுடைய கொள்கையை இந்த அரசு பின்பற்ற வேண்டும் என்று உங்களிடத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

காங்கிரஸ் கட்சி தமிழகத்திலே ஆளுகின்ற நேரத்தில் தமிழகத்திலே, இளைஞர்கள், மாணவர்கள் மது என்றாலே தெரிந்துக் கொள்ளாத ஒரு நிலையில் இருந்தார்கள். ஆனால் இன்றைய சூழ்நிலையில் தமிழகத்திலே மாணவர்கள், இளைஞர்கள் மதுவுக்கு அடிமையாகி, கல்வித்தரத்தைப் பொறுத்தமட்டிலும், உடல் வலிமையைப் பொறுத்தமட்டில் குறைந்து வருவதை உங்கள் மத்தியிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கிராமப்புறத்திலே வாழ்கின்ற ஏழை எளிய மக்கள், ஏழைத் தொழிலாளிகள், ஏழை விவசாயிகள் தாங்கள் வாங்குகின்ற கூலியை மதுவுக்கு பயன்படுத்துகின்ற காரணத்தினால் அங்கு வாழ்கின்ற ஏழைத் தாய்மார்கள் ஒருநாள் சோற்றுக்குக்கூட— ஒரு வேளைச் சோற்றுக்குக்கூட—அவர்கள் கஷ்டப்படுவதை, கண்ணீரும் கம்பலையுமாக அந்தத் தாய்மார்கள் வாழ்ந்து வருவதை நீங்கள் மனதிலே கொண்டு இந்த மதுவிலக்கு கொள்கையிலே ஒரு மாற்றத்தை தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்திலே, தமிழகத்தைப் பொறுத்தமட்டில் கள்ளச் சாராயத்தை காவல் துறையினுடைய துணையோடு காய்ச்சுகிறார்கள். விற்று வருகிறார்கள். காவல் துறையினருக்கு அதிக அதிகாரம் வழங்குவதாக நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். ஆகவே தமிழகத்தைப் பொறுத்தமட்டில் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கும் கள்ளச் சாராயத்தின் மீது தீவிர நடவடிக்கை எடுப்பதற்கும் நீங்கள் தீவிரமான சட்டத்தை, அமலாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. எஸ். டென்பல் ராஜ்] [1989 பிப்ரவரி 21

அதே நேரத்திலே அயல்நாட்டு மதுபானக் கடைகளை ஏலம் விடுவதாக அறிவித்திருக்கிறீர்கள். கடந்த அரசினுடைய நடை முறைகளை சாராயக் கடைகளை அவர்கள் ஏலம் விட்டார்கள். விட்ட நேரத்திலே முதல் தவணை கட்டுவார்கள். ஆனால் மற்றத் தவணைகளைக் கட்டாமல் அடுத்த ஆண்டு பினாமிகள் பெயராலே அவர்கள் அந்த ஏலத்தை எடுப்பார்கள். அதே நேரத்திலே சாராய சாம்ராஜ்யத்தை ஒழிப்பதாக—ஒரு சில சாராய சாம்ராஜ்ய மன்னர்களை நீங்கள் ஒழித்துவிட்டீர்கள். ஆனால் தமிழகத்திலே குடி நகரங்களிலே பல சாராயசாம் ராஜ்ய குடி குடி மன்னர்களை உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். எனென்றால் வெளி மாநிலங்களிலே இருப்பவர்கள் கூட இங்கு வந்து இந்த மதுக் கடைகளுடைய ஏலத்தை எடுப்பார்கள். அதோடு மாத்திரம் அல்லாமல் தமிழகத்திலே ஒவ்வொரு நகரத்திலேயும் ஒரு தனி நபர் எல்லா கடைகளையும் எடுக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். ஆகவே தான் மீண்டும் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். திடீரென்று பெருக்குவதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. ஆகவே தமிழகத்திலே மீண்டும் நீங்கள் பூரண மது விலக்கை கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்தினைக் கூறி முடிக்க விரும்புகிறேன். நன்றி வணக்கம்.

(மாண்புமிகு போலைத் துணைத் தலைவர் தலைமை)

* திரு. ஆர். அண்ணாதம்பி : மாண்புமிகு போலைத துணைத் தலைவர அவர்களே, இந்த மதுவிலக்கு சமபந்தமான தண்டனை குறித்த மசோதா மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

(மூற்பகல் 11-30)

இந்த மாமன்றத்திலே சற்று நேரமாக இரண்டு பிரச்சினைகள் குறித்து விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஒரு புறத்தில் வரி உயர்வு. இன்னொரு புறத்தில் சலுகைகள் என்ற அடிப்படையிலே இன்றைக்கு அந்த விவாதத்திலே ஒரு விவாதத்தை முடித்து, அடுத்த விவாதத்திலே நாம் கலந்து கொண்டிருக்கிறோம். ஆனால், இன்றைக்கு அந்தச் சலுகைகள் அளிப்பதன்



1989 பிப்ரவரி 21] [திரு. ஆர். அண்ணாதம்பி]

மூலமாக கள்ளச்சாராயம் பெருகுமேயொழிய, கள்ளத்தனமான வியாபாரங்கள் பெருகுமேயொழிய, இந்தச் சட்டத்தின் மூலம் இவைகளையெல்லாம் களைந்தெறிந்து விட முடியாது என்பதை இந்த மாமன்றத்திற்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். முன்பிருந்த அரசு—எங்களுடைய தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அந்தத் தண்டனைகள் மூலமாக, இந்தக் குற்றங்களைக் குறைப்பதற்காகவும், குடிப்பழக்கம் மக்களிடம் குறையவேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தோடும், அதன்மூலம் மக்கள் நலம் பெற வேண்டும், நலம் பேணவேண்டும் என்ற அடிப்படை நோக்கத் தோடுதான் ஒரு குற்றத்திற்கு மூன்று ஆண்டு சிறைத் தண்டனை என்றும், அதிகப்பட்சமாக 3,000 ரூபாய் அபராதம் என்றும் குறிப்பிட்டார்கள்.

அதே நேரத்திலே வருவாயைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்திலே இது குறிப்பிடப்படவில்லை. அது குறிப்பிடப்பட்டது, மக்களுடைய சமுதாய நல்லெண்ணை மூலமாகக் காணவேண்டும் என்ற அடிப்படை நோக்கத்திலேதான் இவை கொண்டு வரப்பட்டன.

ஆனால் இன்றைக்கு அது மூன்றாண்டிலிருந்து மூன்று மாதமாகக் குறைத்து, குறைந்தபட்சமாக 1,000 ரூபாயை என்று குறைத்து இருப்பது, அதன் மூலமாக இன்றைக்குக் கள்ளச் சாராயம் நாட்டிலே பெருகுமேயொழிய, குற்றங்கள் அதிகரிக் குமேயொழிய, அது குறையாது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு முதல்வர்கள் சற்று முன்பு இங்கே பேசுகின்ற போது, கோவை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுக் குழுவில் எங்களுடைய தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், மதுவிலக்கைத் தளர்த்துவதை ஏற்றுக்கொண்டதன். அதன் பிறகு அவருடைய ஆட்சியிலேயும் செயல்படுத்தினார் என்று சொன்னார்கள். கோவையில் நடந்த பொதுக்குழுவில் அவர் வருவதற்கே தாமதம் வந்ததற்குப் பின்னாலே கட்சியின் கட்டுப் பாட்டை மீறக்கூடாது என்ற அடிப்படை நோக்கத்தோடு, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய ஒப்புதலோடு, இதை நீங்கள் தற்காலிகமாகக் கொண்டு வருகிறீர்கள், ஆனால் அதே நேரத்திலே என்னால் அதை ஏற்றுக்கொள்ளாமலும் இருக்க

[திரு. ஆர். அண்ணாநம்பி] [1989 பிப்ரவரி 21

முடியவில்லை கட்சியின் கட்டுப்பாட்டை நான் ஏற்றுக்கொண்டாக வேண்டும். ஆனால் காலப்போக்கில் மக்களிடமிருந்து இந்தப் பழக்கம் போகவேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தோடு.....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பொதுக் குழுவைப் பற்றி ஏதோ ஒரு கோடிட்டுக் காட்டுவதற்காக, துணைத் தலைவர் அவர்களே இங்கே பேசும்போது சொன்னேன். இதை விளக்கமாகப் பேரி நடக்காதவைகளையெல்லாம் சொல்லக் கூடாது. அப்போது அண்ணா நம்பி அவர்கள் பொதுக்குழு உறுப்பினரோ, என்னவோ எனக்குத் தெரியாது. இருந்தீர்களா? (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) பொதுக் குழுவில் கட்சியின் கட்டுப்பாடு என்றால், எல்லோரும் ஏற்றுக்கொண்ட. பிறகு ஏற்றுக்கொள்வது என்பது. பல பேர் எதிர்த்தார்கள் அப்போதே. பொதுக் குழுவில் மதுவிலக்குச் சட்டத்தைத் தளர்க்கிவைப்பதையோ, ஒந்திவைப்பதையோ பல பேர் எதிர்த்துப் பேசினார்கள். அப்போது பொருளாளராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள்தான் அவர்களுக்கெல்லாம் பதில் சொல்லி, இப்போது இது அவசியப்படுகிறது, எனவே, ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று அவர்தான் அனைவரையும் அன்றைக்குத் தன் வயப் படுத்தி, பொதுக் குழுவிலே தீர்மானத்திற்கு இணங்க வைக்கப் பெருமுயற்சி எடுத்துக்கொண்டார் என்று சொன்னேன். அதற்கு மாறாகக் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டாம்.

திரு. ஆர். அண்ணாநம்பி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அவர்கள் சொன்ன கருத்திற்கு மாறாகச் சொல்லவில்லை.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது சரிதான். அந்த நேரத்திலே பொதுக்குழு உறுப்பினர்கள் மத்தியிலேயும், மக்கள் மத்தியிலேயும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றைக்கே செல்வாக்குப் பெற்றிருந்த காரணத்தினால் அவர் சொன்னால், மக்களும், பொதுக்குழு உறுப்பினர்களும் ஏற்பார்கள் என்ற அடிப்படையில் அன்றைக்கும் கழகத்தினுடைய தலைவராகவும், முதலமைச்சராகவும் இருந்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளின்படி அல்லது கட்டளையின்படி, அல்லது அவர்களுடைய எதிர்பார்ப்பின்படி அன்றைக்கு அவர்கள் பேசியிருப்பார்கள்.



1989 பிப்ரவரி 21]

திரு. ஆர். அண்ணாநம்பி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதல்வர் அவர்களுடைய கருத்திற்கு மாறாகச் சொல்லவில்லை. ஆனால், அதே நேரத்திலே அந்தப் பொதுக் குழுவில் அன்றைய எங்களுடைய தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு வேண்டுகோளை விடுத்தார்கள்.

இந்த மதுப் பழக்கத்தை மக்கள் மத்தியில் இருந்து அந்த அடிப்படைத்தனத்திலிருந்து ஒழிப்பதற்கு நீங்கள் ஒரு குழுவை அமைக்கவேண்டும். இந்த மதுவினுடைய தீமைகளைப் பற்றி நாடு முழுவதும் எடுத்துச் சொல்ல வேண்டும்; அதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று சொன்னபோது அதை ஏற்றுக் கொண்டார்கள். அதற்குப் பின்னால்தான் கட்சியின் கட்டுப்பாட்டை, தலைமையின் அந்த கட்டளையை ஏற்றுக்கொண்டார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

எனினும் அறிஞர் அண்ணாவினுடைய கொள்கைகளை, அறிஞர் அண்ணாவினுடைய லட்சியங்களை நாம் மறந்து விட்டோம் என்பதை இந்த மாமன்றத்தில் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபோது, 1967-லிருந்து ஆட்சிப் பொறுப்பை அறிஞர் அண்ணா அவர்கள் ஏற்று முதலமைச்சராக வந்தபோது இங்கே பத்திரிகையாளர்கள் நீங்கள் மதுவிலக்கைத் தளர்த்து விர்களா என்று கேட்டபோது அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், இந்த மதுவிலக்கு என்பது என்னுடைய உயிர்க் கொள்கை, இந்த அண்ணாதுரை இருக்கிறவரை இந்தக் கொள்கையில் மாற்றம் இல்லை, நான் உறுதியோடு இதைச் செயல் படுத்துவேன் என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஆனால் அறிஞர் அண்ணாவுக்குப் பின்னால்தான் அறிஞர் அண்ணா அவர்கள் உயிர் போனதற்குப் பின்னால்தான் இந்த மதுவிலக்கைத் தற்காலிகமாகத் தளர்த்தியதோடு இன்று நீண்டு கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்றையதினம் மாண்புமிகு இன்றைய முதலமைச்சர் அவர்கள்தான் அதைத் தற்காலிகமாகத் தளர்த்தினார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மதுவிலக்குப் பிரச்சாரக் குழுவில் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள்

[திரு. எஸ். கணேசன்] [1989 பிப்ரவரி 21

தான் தலைவர்; அதிலே நான் உறுப்பினராக நியமிக்கப்பட்டேன். ஆனால் அந்தக் குழுவின் கூட்டம் ஒரு முறை கூட கூட்டப்படவே யில்லை: ஒரு இடத்திற்குக் கூட மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் சென்றது இல்லை. பிரச்சாரத்திற்கு என்பதை நான் தெளிவுபடுத்துகிறேன்.

திரு. ஆர். அண்ணாதுரை: மாண்புமிகு போலைத் தலைவர் அவர்களே, அது கூடாததற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய செயலாளர் அவர்களும் ஒரு காரணமாக இருக்கக்கூடும். எனவே, அதற்கு அவர்கள் தான் காரணம், நாங்கள் அல்ல என்பதை இப்போலையிலே நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு போலைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குப் பிரச்சாரக் குழுவுக்குத் தலைவராக அவரைத்தான் அப்போது நியமிக்கப் பட்டது. அவர்களுடைய தலைமையில்தான் நம்முடைய திரு. எஸ். கணேசன், மதுரை முத்து போன்றவர்கள் எல்லாம் உறுப்பினர்களாக இருந்தார்கள். ஆனால் அந்தக் குழு கூட்டப் படவேயில்லை. தலைவர் கூட்டியிருக்க வேண்டும்.

திரு. ஆர். அண்ணாதுரை: மாண்புமிகு போலைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்தைக் கேட்டோம். ஆனால் அதே நேரத்தில் . . .

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு போலைத் தலைவர் அவர்களே, பொதுக் குழுவில் அன்றைய பொருளா ளராக இருந்த மறைந்த புரட்சித் தலைவர் அவர்களைப் பே லைவைத்ததும், அந்தக் குழுவுக்குத் தலைவராக ஆக்கியதும் ஆ இரண்டுமே இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், அந்த அரசுக்குச் சங்கடங்கள் ஏற்படக்கூடாது என்ற வகையில் அந்தக் குழு கூட்டப்படாமல் இருந்து இருக்கலாம். ஆனால் எங்கேயாவது அவர் குடியுங்கள் என்று பிரச்சாரம் செய்திருக் கிறாரா, இல்லை. குடிக்கக்கூடாது என்பதைத்தான் அவர்கள் தன்னுடைய வாழ் நாள் கொள்கையாக கொண்டிருந்தார்கள். அந்த வகையில்தான் அவர்கள் செயல்பாட்டுக் கொண்டிருந்தார்கள். பின்னால் ஆனந்த விகடனில் எழுதிய கட்டுரைகள், மேலும் கூட்டங்களில் பேசுகிற பேச்சுக்கள் எல்லாம் அந்த வகையில்தான் அமைந்திருந்தன.



1989 பிப்ரவரி 21]

திரு. ஆர். அண்ணாதுரை: மாண்புமிகு போலைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு கோவையில் பொதுக்குழு நடந்தபோது குறுக்கீடு, கட்சியினுடைய கொள்கையாக, மது விலக்கை தளர்த்தக்கூடாது என்ற அறிஞர் அண்ணா அவர் களுடைய கொள்கை செயல்பட்ட காரணத்தால் மாண்புமிகு நம்மூடைய எம்.ஜி.ஆர். அவர்கள் அந்த பிரச்சாரத்திற்கு செல்ல வில்லை என்பதை இந்த மாமன்றத்தில் நான் தெரிவிக்க விரும்பு கிறேன்.

இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டம் நிறைவேறுகிற போது தமிழகத்திலே கள்ளச் சாராயம் பெருக்கெடுத்து ஓடும் என்பதை இந்த மன்றத்திற்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டி ருக்கிறேன். இப்போது பல இடங்களில் கள்ளச் சாராயம் விற்கின்றவர்கள் இன்றைக்கு தொழில் அதிபர்களாக திகழ்கி றார்கள். ஒரு பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். அதில் ஒரு கள்ளச் சாராய வியாபாரிக்கு அந்தத் தொழில் அதிபர் பரிசு வழங்குகிறார் என்று போட்டிருக்கிறார்கள்; பெயரைப் போடவில்லை. இப்படி தொழில் அதிபர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். வருங்காலத்தில் மிகப்பெரிய ஒரு சாராய சாம்ராஜ்யம் இந்த தமிழகத்தில் உருவாகி விடக்கூடாது என்பதை இந்த மன்றத்திலே நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, மாண்புமிகு மூலமைச்சர் அவர்கள் இதன் மூலம் நடவடிக்கை எடுத்து கள்ளச் சாராயத் தைக் கட்டுப்படுத்த கடுமையான சட்டத் திருத்தங்களைக் கொண்டு வரவேண்டும் என்று இந்த நேரத்திலே வலியுறுத்தி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு போலைத் தலைவர் அவர்களே, இந்த சட்டத் திருத்தத்தின் மீது அரசுக்கு ஒன்றிரண்டு ஆலோசனைகளைச் சொல்ல நான் விரும்புகிறேன். அதாவது எற்கனவே, ஒன்று, 3 ஆண்டுகள் 'முண்டு' 3,000 ரூபாய் என்று இருந்தது.

(முற்பகல் 11-30)

திரு. செ. நாகூர்மீரான்: மாண்புமிகு போலைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டத் திருத்தத்தின் மீது ஒரு கட்சிக்கு ஒருவர் பேசவேண்டுமென்று அறிவித்து விட்டு ஒரு கட்சியிலே இருவர் ஆலோசனை கூறுவதற்கு அனுமதி கொடுப்பது

என்பது, அதே உரிமை எல்லாக் கட்சிகளுக்கும் கொடுக்க முடியும் என்றால் அப்படிப்பட்ட ஒரு நடைமுறையைப் பயன்படுத்துவது நலமாக இருக்கும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு போலைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கே நீங்கள் அதற்கு தீர்ப்பு வழங்கி இருக்கிறீர்கள். சட்ட முன்வடிவு வருகிறபோது, முன் வரிசையிலே இருக்கிற தலைவர்கள் எதாவது அபிப்பிராயம் சொல்லவேண்டுமென்றால் சொல்லலாம் என்று ஏற்கனவே தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் புதியவர், கேரித்து கொள்ளட்டும். 3 ஆண்டு 'அண்டு' 3 ஆயிரம் ரூபாய் என்றும்—'ரிகரஸ் இம்பிரிசன்மென்ட்' கடும் தண்டனை என்றும் இருந்ததை அந்த 'ரிகரஸ்' என்ற வார்த்தையை எடுத்து விடுகிறீர்கள். 'கடும் தண்டனை' 'தண்டனை' ஆகிறது.

Three years and Rs. 3,000 ;

Five years and Rs. 7,000

என்று இருந்தது. இப்பொழுது எப்படி வருகிறது என்று சொன்னால் எல்லாமே 5 வருஷம், 3 வருஷம் அனைத்துமே 3 மாதம் ஆகிறது. அதிலே அந்த 'அண்டு' நீக்கப்படுகிறது. அதாவது மூன்று மாதமோ அல்லது ஆயிரம் ரூபாய் அபராதமோ என்று வருகிறது. இதிலே என்னவாகும் என்று சொன்னால் பொதுவாக, பெரும்பாலும் குற்றவாளிகள் அபராதம் மட்டும கட்டிவிட்டு சிறைத் தண்டனையிலேயிருந்து தப்பிக்கிற அந்த வாய்ப்பு முழுமையாக இருக்கிறது. தண்டனையை எவ்வளவு வேண்டுமானாலும் குறையுங்கள். அதிலே எனக்கு ஆட்சேபனை இல்லை. ஒரு மாதம் என்று வைத்தால்கூட 1 மாதம் 'அண்டு' அபராதம் என்று இருந்தால் குற்றம் செய்பவர் ஜெயிலுக்கு போகிற போது பயப்படுவார்கள். பணம் கட்டுவது என்றால் கள்ளச் சாராயம் காய்ச்சுவது என்பது ஒரு தொழிலாகவே நடக்கும். அதிலேயிருந்து வருகிற வருமானத்திலேயிருந்து ஆயிரம் ரூபாயைக் கட்டிவிட்டுப்போவது என்பது அவர்களுக்கு ஒரு கஷ்டமாக இருக்காது. ஆயிரம் ரூபாயைக் கட்டிவிட்டுப் போய்விடுவார்கள். திருப்பி வருவார்கள். காய்ச்சுவார்கள், மறுபடியும் ஆயிரம் ரூபாய் கட்டுவார்கள். போவார்கள். எனவே ஒரு குடிசைத் தொழிலாக கள்ளச் சாராயம் காய்ச்சுவது நடந்து கொண்டே இருக்கும். அதற்கு அரசாங்கமே உதவி செய்தது





போல ஆகிவிடும். எனவே அந்த 'அண்டு' என்பது எல்லாவற்றிலும் அப்படித்தான் இருக்கிறது. இப்பொழுது எல்லாவற்றிலுமே அந்த 'அண்டு-ஐ' எடுத்துவிட்டு ஒன்று அபராதம், இல்லையென்றால் சிறைத் தண்டனை என்று இருக்கிறது. இது குற்றவாளிகளை உற்சாகப்படுத்தி மேலும் மேலும் குற்றம் செய்யத் தூண்டுகிற விதத்திலே அமையும். எனவே இந்தத் திருத்தத்தை அன்போடு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். எல்லாத் திருத்தத்திலேயும் அதுபோல் மாறுதல வந்து விட்டது. எல்லாவற்றிலுமே அந்த 'அண்டு' எடுக்கப்பட்டு ஒன்று ஜெயில் அல்லது அபராதம் என்று வந்திருக்கிறது; இது ஒன்று. இரண்டாவது, 'ரிகரஸ் இம்பிரிசன்மென்ட்' என்று இருப்பதை எடுத்து விட்டிருக்கிறார்கள். ஆகவே, அதைச் செய்வதிலே அவ்வளவு வித்தியாசமானால், இரண்டு மாதமோ மூன்று மாதமோ 'ரிகரஸ் இம்பிரிசன்மென்ட்' என்று போடுங்கள், அதை குறைத்துப் போடுகிறபோது, சாதாரணக் குற்றவாளியாக, முதல் தடவை குற்றவாளியாக இருந்தால் அதை வித்தியாசப்படுத்துங்கள் 4, 5 தடவைகள் தொடர்ந்து குற்றவாளிகளாக இருப்பார்களேயானால் அவர்களுக்கு 'ரிகரஸ் இம்பிரிசன்மென்ட்' வழங்குகின்ற விதத்திலே அந்த மாறுதல்களைச் செய்யுங்கள் என்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால், குற்றம் தடுக்கப்படவேண்டும், கள்ளச் சாராயம் காய்ச்சுவது நிறுத்தப்படவேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கம் என்று நான் நம்புகிறேன். யாரையும் தூண்டிவிடவோ கள்ளச் சாராயம் காய்ச்சவோ நாம் சட்டத்தைக் கொண்டு வரவில்லை. ஏற்கெனவே இவ்வளவு கடும் சட்டம் இருக்கிறபோதே சுமார் 6 இலட்சம் வழக்குகள் இருகின்றன என்று சொல்லுகின்றபோது, 5 வருடம் தண்டனை 7 ஆயிரம் ரூபாய் அபராதம், 3 வருடம் தண்டனை 3 ஆயிரம் ரூபாய் அபராதம் என்று கடுமையாகச் சட்டம் இருக்கிறபோதே. ஜெயிலும் அபராதமும் சேர்ந்து இருக்கிறபோதே 6 இலட்சம் வழக்குகள் பெருகி இருக்கின்றன என்று சொன்னால், இவற்றையெல்லாம் எளிமையாக்குகின்றபோது, 6 இலட்சம் வழக்குகள் 60 இலட்சம் ஆனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்த அளவிற்குக் குற்றவாளிகள் பெருகுவார்கள். கள்ளச் சாராயம் பெருகும்; கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் பெருகுவார்கள்.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 பிப்ரவரி 21

இன்னொன்று, இவைகளை யார் விசாரிக்க வேண்டுமென்று வருகிறபோது, மதுவிலக்குத் துறையிலே இருக்கிற அதிகாரி, இல்லையென்றால், போலிஸ் ஆபீசர் இவர்கள் விசாரிக்கலாம். அங்கே காம்பரமைஸ் செய்து கொள்வதைப்போல ஒரு புதிய விதியை நீங்கள் சேர்த்து இருக்கிறீர்கள். இல்லாத ஒரு புதிய விதி கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதாவது 24 (d), 24 (e) தான் மூலையிலே இருந்தது. 24 (d) என்று புதிதாக நீங்கள் கொண்டு வருகிறீர்கள். 24 (d)-யிலே என்னவென்றால், ஆயத் தீர்வைத் துறையைச் சேர்ந்த அதிகாரியோ அல்லது காவல் துறை அதிகாரியோ என்ன செய்யலாம் என்றால் ஒரு குற்றவாளி வருகிறபோது 500 ரூபாய்க்கு மேலாக இரண்டாயிரம் ரூபாய் அதிகபட்சமாக அவரிடம் சொல்லி, ஐநூறோ, எண்ணூறோ, ஆயிரமோ அவரிடம் சொல்லி, அதோடு அவரை வீட்டுக்கு அனுப்பிவிடலாம். அந்தக் குற்றவாளி மேன்மேலும் வழக்குத் தொடர முடியாது. இது அதிகாரிகள் மட்டத்திலேயே மேலும் தவறுகள் ஏற்பட இடமளிக்கும். எப்படியென்றால், 500 ரூபாயிலிருந்து இரண்டாயிரம் ரூபாய் வரை அவருடைய 'டிஸ்க்ரிசன்'-இல் நீங்கள் விடுகிறபோது ஒரு சாராயம் காய்ச்சுகிற குற்றவாளி அகப்படுகிறார் என்று வைத்துக் கொண்டால் அவர் என்ன செய்யக்கூடும் என்றால் அவருக்கு உடந்தையாக இருக்கிற சில அதிகாரிகள் மட்டத்திலே, அது காவல் துறை அதிகாரியோ அல்லது மதுவிலக்கு அதிகாரியோ அவர்கள் என்ன செய்வார்கள் என்றால், ஆயிரம் ரூபாய் அவர்கள் வாங்கிக்கொண்டு, 1,500 ரூபாயை குற்றவாளியிடத்திலேயிருந்து பெற்று, 500 ரூபாய் என்று எழுதினால் போதும். 500 ரூபாயை எழுதிக்கொண்டு, ஆயிரம் ரூபாயை அந்த அதிகாரிகள் வைத்துக் கொள்வார்கள். எனவே, அதிகாரிகள் அதற்கு உடந்தையாக இருந்து தவறு செய்கிற அந்தச் சூழ்நிலை அதனாலே ஏற்படும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

ஆனவே நீங்கள் அது வழக்கு மன்றத்திற்குப் போகக் கூடாது, அதிகாரிகள் அளவிலேயே அவர்களை விட வேண்டுமென்ற அடிப்படையிலே இந்தச் சட்டத் திருத்தம் வருகிறது. ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால், இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலமாகக் குற்றவாளிகள் கோர்ட்டுக்குப் போகாமல், கோர்ட்டுக்கு வெளியேயோ போலீஸ் ஸ்டேஷனிலேயோ அல்லது எக்சைஸ் ஆபீசிலேயோ அந்த அதிகாரி அவர்களை அழைத்து



1989 பிப்ரவரி 21] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

வந்து எனக்கு 2,000 ரூபாய் கொடு என்று சொல்லி, 1,500 ரூபாயை வாங்கிக்கொண்டு, 500 ரூபாய்க்கு அபராதம் கட்டியதைப்போல போட்டுக்கொண்டு, 1,500 ரூபாய்க்கு அந்தக் காவல் துறை அதிகாரிகளோ அவர்கள் இவற்றைப் பெற்றுக்கொண்டு அவர்களே குற்றவாளிகளுக்கு உடந்தையாக இருந்து மேலும் குற்றம் பெருகுவதற்கு இந்தச் சட்டத் திருத்தம் துணையாக இருக்கும். எனவே, நீங்கள் வழக்கு இருக்கிறபொழுது வழக்குகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். அதற்கு நீதிபதிகளை அதிகமாக்குங்கள் அல்லது பரவலாக்குங்கள். இன்னும் சொல்லப் போனால், சட்டத் திருத்தத்திலேயே Tahsildar அளவிலேயோ அல்லது Deputy Tahsildar அளவிலேயோ—அவர்கள் Judicial Magistrate's powers உள்ளவர்கள்தான். எப்படியாவது இதிலே வேறு மாறுதல்களைக் கொண்டு வந்து, வழக்குகளைத் திருப்படுத்தி, நடவடிக்கை எடுக்கிற முயற்சியிலே ஈடுபட வேண்டுமே தவிர, அதற்காக வழக்கு அதிகமாக இருக்கிறது. 6 இலட்சம் வழக்குகள் இருக்கின்றன என்பதனாலேயே அதை யெல்லாம் இந்தச் சட்டப்படி—இன்னுமொன்று என்னவென்று சொன்னால், இந்தக் குற்றவாளிகளெல்லாம் இப்பொழுது இந்தச் சட்டம் என்னைக்கு அமலுக்கு வருகிறதோ அப்பொழுது இருக்கிற குற்றத்திற்கு இது பொருந்தும். அந்தக் குற்றவாளிகளுக்கு அது பொருந்தும் என்று வருகிறது. எனவே, அவர்களெல்லாம் வந்து 500 ரூபாய் பைன் கட்டிவிட்டு அமைதியாகப் போய் விடலாம் 6 இலட்சம் பேரும். இதிலே இருக்கிற குற்றவாளிகள்—இந்த செக்ஷனிலே சம்பந்தப்பட்டவர்கள், அங்கே இப்படி கள்ளச்சாராயம் என்று நீங்கள் சொல்கிறீர்களே, "சாராய சாம்ராஜ்யத்தைத் தகர்ப்பதற்குப் பதிலாக ஒரு புது கள்ளச் சாராய சாம்ராஜ்யத்தை உருவாக்கவும், அதனாலே அங்காங்கு ஊருக்கு ஊர், குடிசைத் தொழிலைப்போல, கள்ளச் சாராயம் பெருகுவதற்கும், குற்றங்கள் பெருகுவதற்கும் இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது. எனவே, இந்தச் சட்டத்தை இப்பொழுது [illegible] நீங்கள் நாவை நெரிக்க நினைக்கிறீர்கள். இதிலே பல திருத்தங்களைக் கொண்டு வருகின்றீர்கள். குற்றவாளிகளைக் குறைக்கிற விதத்திலேயும், தடுக்கிற விதத்திலேயும், கள்ளச் சாராயம் தடுக்கப்படுகின்ற விதத்திலேயும்—இன்னொன்று அதனால் அரசுக்கு வருமானம்—கள்ளச் சாராயம் தடுக்கப்படுகிறபொழுது I.M.F.S. மூலமாக உங்களுக்கு நிறைய அதிகரிக்கிறபொழுது Sales-tax

அரசாங்கத்திற்கு வருமானமாக வரும். எனவே, இதிலே அரசு வருமானமும் பாதிக்கும். சூடிசைத் தொழில் போல கள்ளச் சாராயம் பெருகும். கள்ளச் சாராய சாம்ராஜ்யம் என்று ஒரு சாம்ராஜ்யம் உருவாகும். அதற்கு இந்தச் சட்டத் திருத்தம் வழி வகை செய்கிறது. இதில் அவசரம் காட்ட வேண்டியதில்லை.

இந்தக் கடைசி செக்ஷனே வேண்டியதில்லை. 24(c) வேண்டியதில்லை. எனென்றால், எதற்காக அதைப் போடுகிறீர்கள்? வழக்கு மன்றத்திற்குப் போய்விட்டு வரட்டுமே? குற்றம் செய்பவர், காய்ச்சுபவர், விற்பவர் வழக்கு மன்றத்திற்குப் போய் விட்டு வரட்டுமே? எதற்காக போலீஸ் ஸ்டேஷனிலே அவனைச் சமாதானப்படுத்தி அங்கேயிருந்து 500 ரூபாயை அபராதமாக வாங்கி எதற்காக அனுப்ப வேண்டும்? எனவே தண்டனையை வேண்டுமானால் குறையுங்கள், அபராதத் தொகையை வேண்டுமானால் குறையுங்கள். அதையே ரிபீட்டட்டாக—திரும்பித் திரும்பி வருகிறபொழுது அவர்களுக்கு என்று அதிலே திருத்தங்கள் கொண்டுவந்து அதை அதிகரியுங்கள் முதல் குற்றவாளி என்றால் 500 ரூபாய், இரண்டாவது குற்றவாளி என்றால் 1,500 ரூபாய் அல்லது 1,600 ரூபாய், மூன்றாவது தடவை குற்றம் செய்தால் மூன்று மாதம், 6 மாதம் என்று இப்படி ஜெயில் தண்டனையையும் அதிகரித்து, அபராதத் தொகையையும் அதிகரித்து, இப்படிப்பட்ட குற்றம் செய்பவர்களுக்கு இதை அதிகப்படுத்துங்கள். எல்லோருக்கும் பொதுவாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, ஒரு புது சாராய சாம்ராஜ்யத்தை உருவாக்குவதற்கு இந்தச் சட்ட முன்வடிவு வழிவகை செய்கிறது எனவே, இதை தயவுசெய்து திரும்பப் பெற்றுக்கொண்டு, மீண்டும் இந்தத் திருத்தங்களோடு—கடைசியாக நான் சொன்னதைப் போல, 24(d) இங்கே கொண்டு வந்திருக்கிறீர்களே அது தேவை இல்லை இதனால் மேலும் தவறுகள் வரும். அதைப்போல and சேருங்கள். தயவுசெய்து ஒன்று nil மற்றும் என்று போட்டு பிணையும் அதோடு சேருங்கள். எதாவது ஒரு அபராதம் போடுங்கள். அப்பொழுது தான் discretion வரும். ஜட்ஜ் விசாரிக்கிறபொழுது நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, அபராதம் மட்டும் கட்டி விட்டு, ஜெயிலே இல்லாமல் போய்க் கொண்டிருக்கிற அந்தச் சூழ்நிலை கூட ஏற்பட்டு விடும். மேலும் குற்றங்கள் பெருகாமல்





தடுக்கப்பட வேண்டுமென்று சொன்னால் இந்த மாறுதலோடு நீங்கள் இப்பொழுதே அந்த மாறுதலைக்கூட அறிவித்து ஏற்றுக் கொண்டு, திருத்தத்தைக் கொண்டு வாலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எதிர்க்கட்சித் துணைத் தலைவர், எப்படியாவது சாராய சாம்ராஜ்யத்தைப் பலமுறை இங்கே உச்சரித்து விட வேண்டுமென்கின்ற நோக்கத்தோடு பேசிக்கொண்டே இருக்கிறார்கள். கள்ளச் சாராய சாம்ராஜ்யம் ஏற்படுவதையும் இந்த அரசு நிச்சயமாக அனுமதிப்பதற்கில்லை. ஆறு இலட்சம் வழக்குகள் இருப்பதாக இங்கே தகவல் தந்திருக்கின்றார். சட்டம் கடுமையாக இருந்தபொழுதே ஆறு இலட்சம் வழக்குகள் இருந்தன என்றால் இப்பொழுது சட்டம் கொஞ்சம் கடுமை குறைக்கப்படுகிற காரணத்தால் அதிகம் ஆகாதா என்ற பீதியை எழுப்புகிறது. இந்த வழக்குகளை நீடித்துக் கொண்டே போவதற்குக் காரணமே 3,000 ரூபாய், மூன்றாயிரம் ரூபாய் தண்ட னை என்பதால்தான் அவரவர்களும், குற்றம் செய்தவர்களெல்லாம் கூட 3,000 ரூபாய் கட்டுவதிலே யிருந்து விடுபடுவதற்காகவும், மூன்றாண்டுக் கால தண்டனையி லிருந்து தப்பிப்பதற்காகவும் வழக்குகளை நடத்திக்கொண்டே இருக்கிறார்கள் வழக்குகள் நடந்துகொண்டிருக்கின்ற காரணத்தால் அரசாங்கத்திற்குத்தான் பெரும் இழப்பு ஏற்படுகிறது. 6 இலட்சம் வழக்குகள் இன்னும் முடிவடையாமல் இருக்கின்றன.

இதையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் இந்தச் சட்டத்தை, கொஞ்சம் கடுமையைக் குறைக்க வேண்டுமென்ற எண்ணத் தோடு இது கொண்டு வரப்படுகிறது. இதனால் கள்ளச் சாராய சாம்ராஜ்யம் உருவாகிவிடாதா, அது விவரமாக்கப்பட்டு விடாதா என்ற அய்யப்பாட்டுக்கு நான் தருகின்ற விளக்கமே அப்படிப்பட்ட சாம்ராஜ்யங்களைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்றவர் கள் ஒரு கால கட்டத்திலே சட்ட ப்படி அடக்கப்படுவதற்கு வேறு சட்டம் இருப்பதை எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் நிக நன்றாக அறிவார்கள். அந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அந்தச் சட்டம் இப்பொழுது தேவையா இல்லையா என்பது விவாதப் பொருளாக இருந்தாலும், இந்தச் சட்டத்தி னுடைய கடுமையைக் குறைக்கிற காரணத்தால், அந்தச் சட் டத்தைப் பயன்படுத்தி கள்ளச் சாராயம் காய்ச்சுகின்ற குற்றவாளி களைச் சிறையிலே அடைப்பதற்கு வழிவகை இருக்கின்ற காரணத்

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 பிப்ரவரி 21

தால், அதைச் சட்டம் இருக்கும்பொழுது இந்தச் சட்டம் கடுமையாக இருக்கத் தேவையில்லை என்ற கருத்தை இங்கே நான் விளக்கமாகத் தர விரும்புகிறேன்.

(முற்பகல் 11-40)

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, நான் அரசுக்கு ஆலோசனையாகத்தான் இதைச் சொன்னேன். இந்தக் கள்ளச் சாராயம் காய்ச்சுவது என்பது குடிசைத் தொழிலாக இருக்கிறது. அது இன்று நேற்று ஏற்பட்டதல்ல இதற்கு முன்னே யிருந்து, ஆரம்பக் காலத்திலிருந்து. கொன்றுதொட்டே இருந்து வருகிற ஒரு தொழில்தான் கள்ளச் சாராயம் காய்ச்சும் தொழில். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் முந்தைய ஆட்சியிலும் இருந்தார்கள் என்று சொன்னார்கள். முந்தைய ஆட்சியில் மட்டுமல்ல; இந்த ஆட்சியிலும் இருக்கிறார்கள்; முந்தைய ஆட்சியிலும் இருந்தார்கள். காங்கிரஸ் ஆட்சியிலும் இருந்தார்கள். ஆக எந்த அரசாங்கம் வந்தாலும் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களை ஒட்டுமொத்தமாகத் தடுத்துவிட முடியாது. என்ன முயற்சி செய்தாலும் எவ்வளவு திறமையான அதிகாரிகளைப் போட்டாலும் அங்காங்கே தவறு நடக்கத்தான் செய்யும். அதற்காகத்தான் சட்டத்தைப் போடுகிறோம். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், அந்தக் குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது. ஏற்கெனவே எராளமான வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. குற்றவாளிகள் குறையவில்லை; வழக்குகள் குறையவில்லை. ஆகவே, ஏற்கெனவே தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விரைவாகப் பைசல் செய்வதிலே கவனம் செலுத்த வேண்டும். அதோ நேரத்தில் புதிதாக நாடெபெறும் குற்றங்கள் குறைய வேண்டும். தடுக்கப்பட வேண்டும். அந்த வகையிலே சட்டம் அமைய வேண்டும்.

குற்றவாளிகளைப் பிடிக்க வேறு சட்டம் இருக்கிறது என்று மூத்தமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் 'கண்டால் சுட்டை' மனதிலே வைத்துக்கொண்டு சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். 6 மில்லியன் பேர் வாழ்விலே சிக்கியிருக்கிறார்கள். 6 மில்லியன் பேர் இருக்கிறபோது, ஒரே சட்டத்தைக் கொண்டு வருவதின் மூலம் அது 10 மில்லியனாகக் கூட உயரலாம். ஆக, அத்தனை பேர்களையும் குண்டாஸ் சட்டத்தில் கைது செய்து ஜெயிலிலே போட முடியாது.



1989 பிப்ரவரி 21] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

(மாண்புமிகு போலைத் துணைத் தலைவர் தலைமை)

10 இலட்சம் பேர்கள் என்றால் மாவட்டத்திற்கு சுமார் 50,000 பேர் என்று வருவார்கள். அவ்வளவு பேர்களையும் குண்டாஸ் சட்டத்தில் கைது செய்து, ஜெயிலில் அடைக்க முடியாது. அவர்கள் அத்தனை பேர்களையும் ஓராண்டு, இரண்டாண்டு ஜெயிலிலே வைக்க வேண்டுமென்றால் அரசாங்கத்திற்கு எவ்வளவு செலவு ஏற்படும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகவே தான் சொல்கிறேன், அத்தனை பேர்களையும் ஜெயிலில் ஓராண்டு இரண்டாண்டுக்கு அடைத்து வைக்க முடியாது. மதுவிலக்குச் சட்டத்தின் மூலம் குற்றங்களைக் குறைப்பதற்காகத்தான் இந்தச் சட்டம் வந்திருக்கிறது. ஆகவேதான் இந்தத் திருத்தத்தைச் சொல்கிறேன். ஜெயில் தண்டனை மற்றும் அபராதம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படிச் செய்தால் ஒன்றும் குடி முழுகிவிடாது.

மாண்புமிகு போலைத் துணைத் தலைவர்: குடி முழுகி விடாது என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்ல வேண்டாம். (சிரிப்பு).

திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவரவர்களே, குடி முழுக வேண்டியதுதான். ஆனால் குற்றத்தை எப்போதுமே முழுமையாகத் தடுத்துவிட முடியாது; ஆனால் குறைக்கலாம். குறைப்பதற்காகத்தான் இந்தச் சட்டத்திலே ஜெயில் தண்டனை, அபராதம் இரண்டையும் சேருங்கள் என்று சொல்கிறேன்.

அதைப்போன்று, குற்றவாளிகளைப் பிடிக்கிறபோது போலீஸ் ஸ்டேஷனிலே வைத்துக்கொண்டு அங்கே இருக்கிற போலீஸ் அதிகாரிகள் 500 ரூபாய், 600 ரூபாய் அபராதம் என்று போடுகிற வியை எடுத்து விடுங்கள். அது கூடாது, அதிலே பல தவறுகள் நடக்கக்கூடும். அபராதம் போடுகிற அதிகாரம் நீதிமன்றத்திற் குத்தான் இருக்க வேண்டும். குற்றவாளிகள் நீதிமன்றத்திலே நிறுத்தப்பட்டு, அங்கே வழக்கு விசாரிக்கப்பட்டு, தண்டனை வழங்க வேண்டும். ஒரு இன்ஸ்பெக்டரோ அல்லது ஒரு சப்-இன்ஸ்பெக்டரோ வழக்கை நடத்தக்கூடாது. அவர்களிலே நல்லவர்களும் இருப்பார்கள். கெட்டவர்களும் இருப்பார்கள். அவர்களுடைய அங்கீகாரம் இருப்பதால்தான் இத்தகைய தவறுகள் நடைபெறுகின்றன. குறிப்பாக இப்படிப்பட்ட தவறுகள் அவர்களுடைய அங்கீகாரம் இல்லாமல் நடைபெறாது. ஆகவே,

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 பிப்ரவரி 21

அரசுத் துறையாக இருந்தாலும் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களுக்கு தண்டனை அளிக்கின்ற அதிகாரம் நீதிமன்றத்திற்குத் தான் இருக்க வேண்டும். இந்த திருத்தங்களோடு இதனைச் சட்டமாக்க நிறைவேற்றுங்கள். நாங்கள் திரும்பத் திருப்பச் சொல்லியும் கேட்கவில்லை என்றால், நீங்கள் நிறைவேற்றுகின்ற சட்டத்தினபடி குற்றவாளி அதிகாரிகளைத்தான் செய்யும், அரசு முடிவினால் அப்படியே செய்யட்டும்.

திரு. கோ. விஜயன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சில விளக்கங்களைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக நான் சொல்வது, 3 ஆண்டு தண்டனை, 3,000 ரூபாய் அபராதம் என்று இருந்தபோதுதான், அதற்குப் பின்னாலே 5 ஆண்டு தண்டனை, 7,000 ரூபாய அபராதம் எனறு சட்டம் இருந்தபோதுதான் 6 இலட்சம் பழகுகுகள் வந்திருக்கின்றன. இந்தச் சட்டத்தினால் அது 60 இலட்சமாக உயரும் என்று சொல்லியிருக்கிறார்கள் ஆனால் இந்தச் சட்டத்தின்மேல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது? தண்டனை கூடுதலா, குறைவா என்பதல்ல பிரச்சினை. சட்டத்தை எப்படி கையாளுகிறார்களோ, எப்படி இதற்கு முன்னாலே கையாண்டிருக்கிறார்களோ அதைப் பொறுத்துதான் குற்றங்கள் கூடுவதும் குறைவதும்.

குற்றங்களைக் குறைப்பதற்காகத்தான் சட்டங்கள் போடுகிறோம். அப்படிச் சட்டத்தைப் போட்ட பின்னாலேதான் 6 இலட்சம் வழக்குகள் வந்திருக்கின்றன. இதற்கு முன்னாலே என்ன செய்தார்கள் என்று பார்க்க வேண்டும். அபராதம் விதிக்கும்போது, சாராயம் காய்ச்சுபவர்களைக் காவல் துறை அதிகாரிகள் பிடித்து, அவர்களிடத்திலே பணத்தை வாங்கி வைத்துக்கொண்டு, வழக்கு வரும்போது நாங்கள் அபராதத்தைக் கட்டி விடுகிறோம்; நீங்கள் போய் கள்ளச் சாராயம் காய்ச்சிக் கொண்டிருங்கள் என்று சொல்லி அனுப்பியவர்கள் உண்டு. இப்படி அதிகாரிகளே கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களை வைக்கப்படுத்தியிருந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை வந்திருப்பதால், கடந்த காலத்திலே ஏற்பட்டிருக்கிற அனுபவத்தின் மூலமாக நாம் தெரிந்து கொள்வது இப்படிப்பட்ட சட்டம், தண்டனை இருந்தால் மட்டும் போதாது, அதனால் மட்டும் தடுத்துவிட முடியாது. சட்டம் எப்படிச் செயலாக்கப்படுகிறது



1989 பிப்ரவரி 21] [திரு. கோ. விஜயன்]

என்பதைப் பொறுத்துத்தான் குற்றங்கள் குறையும். எதிர் காலத்திலே கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களை இந்தச் சட்டத்தினால் மட்டுமே மூடியாக்கத் தடுத்து நிறுத்திவிட முடியாது. தண்டனை கொடுத்தால் மட்டும் குற்றங்கள் குறைந்து விடாது. சட்டத்தை எப்படி நடைமுறைப்படுத்தப் போகிறார்கள். குற்றங்கள் குறையக்கூடிய வகையிலே சட்டம் செயல்படுத்தப்படுமா என்பது போன்ற விளக்கங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய உரையிலே தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்களோ, தலைவர்களோ எந்த ஒரு கருத்தைச் சொன்னாலும் அதற்கு விடையளிப்பது ஆளும் கட்சியின் பொறுப்பாக இருக்க வேண்டுமே தவிர எதிர்க்கட்சியிலே இருக்கின்ற உறுப்பினர்கள் அடிக்கடி விடையளிப்பதற்காக எழுவதும் அவ்வப்போது பதில் சொல்வதும் இந்த அவையின் முறைக்கு மாறானது என்பதைத் தங்கள் மூலமாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து திரு அ. இராசேந்திரன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது . . .

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே, அவரவர்கள் கருத்துக்களைச் சொல்லலாம். ஆனால் கருத்துக்கள் சொல்லும்போது பிறக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் சொல்கிற பதிலுக்குப் பிறகு சொல்லலாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்னதால் நான் விளக்கம் சொல்கிறேன். அதைத் தவறு என்று சொல்கிறார்களா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் திருப்பித் திரும்ப விளக்கிக் கொண்டிருப்பது இந்த அவையினுடைய மாண்புக்கு நல்லதல்ல.

**மாண்புமிகு டோலவத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் நிரம்பப் பேசியிருக்கிறீர்கள். சொன்ன கருத்துகளே மீண்டும், மீண்டும் வருகிறீர்கள். எந்தவிதமான புதுக் கருத்தும் இல்லை. **ஆலோசனை** என்ற பெயரால அதிக நேரம் எடுத்துக் கொள்கிறீர்கள். எனவே **தாங்கள் தயவுசெய்து** அமர வேண்டும். அடுத்து திரு. இரா சேந்திரன் அவர்கள் பேசுவார்கள். (குறுக்கீடு). உங்களுடைய **ஆலோசனைகளைச்** சொல்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டு விட்டது. அதை அரசு எடுத்துக் கொள்ளும். எனவே **தயவு** செய்து அமர வேண்டும். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, அவையை ஒரு முறையாக நடத்துவதற்கு **உதவியா**க இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இந்த வேண்டுகோளைத் தெரிவிக்கிறேன். ஒவ்வொரு உறுப்பினரும் **அதற்கு** முன்னாலே பேசிய உறுப்பினர்களின் கருத்துக்களை **மறுத்துச்** சொல்கிற ஒரு இயல்பான வாய்ப்பு இந்த அவையிலே **இருக்கிறது.** அப்படி ஒவ்வொருவரும் மறுத்துச் சொன்னவுடன், முதலிலே பேசியவர்கள் மீண்டும் எழுந்து பதில் சொல்வதாக இருந்தால் அப்படியே இதற்கு முன்னால் பேசிய ஒவ்வொருவரும் பதில் சொல்ல ஆரம்பிப்பார்கள். அப்போது இந்த **மசோதாவை** நிறைவேற்றுவதில் இடையூறு ஏற்பட்டுவிடும். **ஆகவே** கருத்து **ரிமை** எல்லோருக்கும் உண்டு. அதாவது மோட்டிவ் (நோக்கம்) கற்பிப்பதோ அல்லது வேறுவிதமான **குற்றங்கள்** சாட்டினாலோ அப்போதுதான் விளக்கம் சொல்லலாமே தவிர, கருத்துக்களை மறுக்கின்ற வகையில் முதலில் பேசிய **உறுப்பி**னர்கள் மறுபடியும் தங்களுடைய கருத்துக்களை நிலை நாட்டுவதற்காக இந்த அவையிலே இப்படிச் சந்தர்ப்பம் **தருவது முறை**யல்ல.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ற முறையிலே **நான் பேசிய** தற்குப் பின்னாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருந்தால் இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. **ஆகவே** நான் பேசியதற்குப் பின்னாலே அமைச்சரவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும். மொத்தமாகத்தான் நான் இதைச் **சொல்**கிறேன். (குறுக்கீடு). தயவுசெய்து கொஞ்சம் பொறுமையாகக் கேட்க வேண்டும். நாங்கள் எல்லோரும் பேசியதற்குப் பின்னால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லப் போகிறார்கள் என்றால் சரி. நான் பேசி முடித்து விட்டேன். அதற்குப் பிறகு



1989 பிப்ரவரி 21] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

தாங்கள் முன்னேற்றக் கழகத்தின் தோழமைக் கட்சியின் சார்பிலே எழுந்து, நான் சொல்வதைச் சொல்லி அதற்கு ஒரு விளக்கத்தையும் சொல்லிப் பேசினார்கள். அதை அனுமதித்தீர்கள். நான் சொன்னது தவறு என்று அவர் சொன்னதால்தான் நான் எழுந்து பதில் சொல்ல விழைந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருந்தால் இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. அதிலே எனக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. எல்லோரும் எழுந்து மாறி மாறிப் பேசி பதில் சொல்லிக்கொண்டே இருக்க முடியாது. அப்படி என்றால் அமைச்சர் பதில் சொல்ல முடியாது. அதை நான் ஒத்துக் கொள்கிறேன்.

நான் பேசியதற்குப் பின்னால், நான் பேசிய கருத்தைக் குறிப்பிட்டு, அதற்கு ஒரு திருத்தம் சொல்லி, அதில் தவறு இருக்கிறது என்பது மாதிரிச் சொன்னதால்தான் நான் பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் வந்தது. அது தவறில்லை . . .

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனிக்க வேண்டி இருக்கிறது. எதிர்க்கட்சியின் சார்பில் மற்றொரு உறுப்பினர் பேசினார். அவர் பேசிய பேச்சுக்கு மேல் விளக்கம் சொல்லவர் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அமர வேண்டும். உங்களுக்குத் தாராளமாக நேரம் ஒதுக்கியாகி விட்டது. மற்ற கட்சி உறுப்பினர்கள் பேசியதற்குப் பின்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்ல வேண்டும். அதற்கு முன்பாக நீங்கள் குறுக்கிட்டுக்கொண்டே இருக்கிறீர்கள் . . . .

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கே (குறுக்கீடு) இவ்வாறு ஒரு பிரச்சினை வந்தபோது எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற எல்லா தலைவர்களும், கூட்டு முன்வடிவு வருகிறபோது யாராவது பேசியிருந்தால் கூட அப்பிராயம் சொல்லலாம், என்று நீங்கள் தீர்ப்பு வழங்கினீர்கள். அதற்குப் பின்னால் நான் பேச அனுமதி கேட்டு இந்தச் சட்ட முன்வடிவில் நான் பேசினேன். அப்படிப் பேசியதற்குப்

[திரு. எஸ். நிருநாவுக்கரசு] [1989 பிப்ரவரி 21

பின்னால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருந்தால் இந்த விவாதமே வந்திருக்காது. நான் பேசியதற்குப் பிறகு, ஏற்கெனவே பேசிவிட்ட கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் குறுக்கிட்டு நான் பேசியது தவறு என்று சொன்ன காரணத்தால்தான் அதற்குப் பதில் சொல்ல வேண்டி வந்தது. அவை முன்னவர் அவர்கள் சொல்கிற மாதிரி, ஒவ்வொருவரும் பதில் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டாம் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதில் கருத்து வேறுபாடே இல்லை. இந்தப் பிரச்சினையை நான் எழுப்பவில்லை. நான் சொன்னதற்குப் பிறகு அவர் பதில் சொன்னதால்தான் பதில் சொல்லும் உரிமை இருப்பதால் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) அவர் ரெஃபர் பண்ணியதால்தான் சொன்னேன். நான் என்ன சொல்கிறேன் என்றால் ஆளும் கட்சிக்குச் சாதகமாகப் பேசினால் அதை ரசித்துக் கேட்டுக்கொண்டே இருப்பது, மாற்றிக் கருத்துச் சொன்னால் உடனே தட்டி உட்கார வைப்பது சரியான மரபல்ல. அதைப் பின்பற்றக் கூடாது.

(மூற்பகல் 11-50)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இடையிலே கருத்து விளக்கம் சொல்வதாகத்தான் சொன்னாரே தவிர, பேசுவதற்கு அனுமதி கேட்டுப் பேசவில்லை. நீங்கள் கொடுத்த கருத்து விளக்கம், நேற்றைய தினம் சொல்லப்பட்டதால்,—ஏதாவது கருத்து விளக்கம் சொல்ல வேண்டியிருந்தால்—அந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசிய பிறகுப் பின்னால், எதிர்க்கட்சித் தலைவர், ஒருசில கட்சிகளினுடைய தலைவர்கள் எழுந்து தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம் என்று அறிவிக்கப்பட்டதே தவிர பேசுவது என்ற முறையில் அல்ல. அவையில் மற்ற எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் யாராவது ஒரு கருத்தைச் சொல்வார்களேயானால், உடனே அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களே எழுந்து மறுப்பு சொல்லிக் கொண்டிருந்தால் இப்படிப்பட்ட மசோதாக்களை நிறைவேற்றுகிறபோது அதிலே காலதாமதம் ஏற்படுகிறது என்ற காரணத்தால்தான் நான் சொன்னேன். அப்படி ஏதாவது சொல்ல வேண்டுமானால் அந்த விளக்கத்தை சபாநாயகர் அனுமதியோடு சுருக்கமாகச் சொன்னால், இந்த அவையினுடைய மரபுக்கு ஏற்புடையதாக இருக்கும்.



1989 பிப்ரவரி 21]

திரு. எஸ். நிருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே அதிகமான நேரத்தைச் செலவிட வேண்டியதில்லை. எனென்றால், நான் சொல்வதுபோல, நான் பேசியதற்குப் பின்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருந்தால், இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. அதைத்தான் நான் முதலிலே சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் விளக்கம் கேட்டிருந்தால் நான் பதில் சொல்லு மாட்டேன். நான் அமைச்சர் அல்ல; அமைச்சர்தான் பதில் சொல்ல வேண்டும். 'அது, நான் செய்த தவறு' என்ற காரணத்தால், அந்த அடிப்படையிலே பேசிய காரணத்தாலே அந்த உரிமையை எடுக்க நான் முயற்சி செய்தேன். அவ்வளவுதான். இதிலே வேறு பிரச்சினை ஒன்றும் இல்லை. நான் சொல்வது, குற்றம் கடுமையாக இருக்கிறபோது, தண்டனை கடுமையாக இருக்கிறபோதே ஆறு லட்சம் வழக்குகள் இருக்கின்ற எனிமையாக்குகிறபோது அறுபது லட்சமாக உயரும் என்பதைத் தான் சொன்னேன். அதை நடைமுறைப்படுத்தும்போதுதான் தெரியும் என்று சொன்னார்கள். எந்த அரசாங்கமும்—முன்னாலே இருந்த அரசாங்கமும்—இந்தச் சட்டத்தை நடை முறைப்படுத்த முயன்றது. இப்போது இருக்கிற சட்டத்தை இந்த அரசு நடைமுறைப்படுத்த முயற்சிக்கும். ஆனால் வெறும் சோதனைகளாலோ, குறைந்த தண்டனைகளாலோ குற்றவாளி களைத் தடுத்துவிட முடியாது; குறைத்துவிட முடியாது; அந்த அடிப்படையில்தான் நான் இந்த இரண்டையும் சேருங்கள் என்று சொன்னேன். சிறைத் தண்டனை, மற்றும் அபராதம் என்று போடுங்கள். அதனால் குற்றங்கள் குறையும் என்று சொன்னேன். மறுப்பு சொன்னதால்தான் நான் பதில் சொன்னேன். வேறு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து ஒரு கருத்தை வலியுறுத்துகிற்று காரணத்தால் ஒரு விளக்கம் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த கால சட்டமன்றத்தில் அன்றைக்கு இருந்த மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் கூர்வத்தோடு இந்தக் கடுமையான சட்டத்தைக் கொண்டுவந்தபோது, நான் மிகக் கடுமையாக எதிர்த்து விளக்கம் சொல்லி விமர்சனம் செய்து, நான் இந்த அவையிலே பேசியிருக்கிறேன். அப்படி நான் பேசியபோது மாண்புமிகு முதல்வர் அவர்கள் நான் பேசிய

[போராசிரியர் க. அன்பழகன்] [1989 பிப்ரவரி 21

கருத்துக்களைப் பற்றி என்னிடத்திலே பேசினார். இரண்டொரு கருத்துக்களை நான சொன்னேன். "நீங்கள் சொல்வது நியாயம்தான்; ஆனால் இப்படி ஒரு சட்டம் கொண்டுவந்து பார்க்கலாம் என்று நான் கருதுகிறேன்" என்று உரையாடலின் போது அவர் சொன்னார். அது இந்த அவைக் குறிப்பிலே இருக்காது. ஆனால் இந்தச் சட்டம் நடைமுறையில் செத்துப் போயிருந்தது. அந்தச் சட்டத்தை நடை முறைபடுத்த அரசாங் கத்திற்கு வழியே இல்லை. அப்படி குறைபாடுகள் உள்ள ஒரு சட்டத்தை எற்று ஒரு நாடியும் நடைமுறைப்படுத்தியது கிடையாது—இன்னும் சொல்லப் போனால், 'சோஷியல் ஈவல்'—சமூகத்திலே உள்ள மிகக் கொடிய பழக்கம். பழக்கம் வேறு; அக்கிரமம், அநியாயம் வேறு மற்றவர்களுக்குச் செய்கின்ற தீங்கு, மற்றவர்களுக்குச் செய்கின்ற கொடுமை, மற்றவர்களை ஏக்ஸ்பிளாய்ட் செய்வது, மற்றவர்களைச் சுரண்டுவது, மற்றவர் களை ஏமாற்றுவது. கற்பழிப்பது—இவையெல்லாம் அக்கிர மங்கள். இந்த அக்கிரமங்களுக்குக் கடுமையான சட்டம் இருக்க லாமே தவிர, மனித குறைபாட்டுக்கு, மனிதனுடைய மிக இயல் பான கெட்ட பழக்கத்திற்கு, அந்தப் பழக்கத்தால் அவனே தன்னை அழித்துக்கொள்கிற இந்த சமூகக் கேடு போன்ற பழக் கத்தால் வரும் கேட்டிற்குக் கடுமையான தண்டனைச் சட்டம் கூடாது என்று அன்றைக்கு நான் வாதாடியிருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால், கடுமையான சட்டம் இருந்த கார ணத்தினால்தான் ஆறு லட்சம் வழக்குகள், ஆறு லட்சத்து நாற்ப தாயிரம் வழக்குகள் இவ்வளவு நாட்களுவரை தூங்கிக்கொண் டிருந்தன. நீதிமன்றங்களாலே அவற்றை விசாரித்துச் செயல் படுத்த முடியவில்லை. காவல்துறையிலேகூட அந்த வழக்கு களை நடத்துவதற்குப் போதுமான அளவுக்கு அவர்களிடத்திலே பணியாளர்கள் இல்லாத நிலைக்கு ஆளாகியிருந்தது.

இன்னொன்று, ஆறு லட்சத்து நாற்பதாயிரம் வழக்குகளும் ஆயிரமு ஆண்டுகளில் சேர்ந்துபோன வழக்குகள். இந்த வழக்குகள் எல்லாம் ஒரு ஆண்டிலே உருவான வழக்குகள் அல்ல. மேலும் இந்த ஆறு லட்சத்து நாற்பதாயிரம் வழக்குகளில் உள்ள எல்லோரும் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் அல்ல. அந்த எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கும். குடிப்பழக்கத்திற்கு ஆளான மக்கள் பல பேர் அந்த வழக்கிலே இருக்கிறார்கள். எனவேதான் எளிய தண்டனை வழங்கும் சட்டம்தான். சமூகத்



1989 பிப்ரவரி 21] [போராசிரியர் க. அன்பழகன்]

தைத் திருத்துகிறபோது கையாள வேண்டியதாகும் என்பது சமூக நீதி முறையைப்பற்றி உலகம் எல்லாம் ஒப்புக்கொள்ளப்பட் டிருக்கிற ஒரு கொள்கை. மக்களிடத்திலே மது ஒழிப்புக் கருத்தைப் பரப்ப வேண்டுமென்ற கருத்து இந்த அவையிலே பேசப்பட்டது. அது ஒரு காலத்திலே தி.மு.க. பொதுக் குழு வில்லே பேசப்பட்ட கருத்து எனறுகூட எதிர்க்கட்சியைச் சேர்ந்த வர்கள் சொன்னார்கள். பொதுக் குழுவிலே பேசப்பட்ட அந்தக் கருத்துக்கு ஏற்ப டெம்ப்பரன்ஸ் மூவ்மென்ட் என்று அமைப்பு நீதிக் கட்சி காலத்திலே இருந்தது. அந்த அமைப்பு மதுவிலக்குக் கொள்கை இடம் பெறாத காலத்தில் மதுவின் கொடுமையை மக்க ளிடத்திலே பரப்புவதற்காக நடத்தப்பட்ட ஒரு இயக்கம், மக்க ளிடத்திலே அப்படிபட்ட ஒரு இயக்கம் வேண்டும் என்பதை அந்த நாட்களில் எம்.ஜி.ஆர். அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அந்த இயக்கம், அவர் ஆட்சியில் அமராமல் வெளியிலே இருந்த பொழுதும், அவரே தலைவராக இருந்தும் அது நடத்தப்பட வில்லை; அவர் முதல் அமைச்சராகியும் அது செம்மையாக நடத்தப்படவில்லை; அவர் கொண்டுவந்த இந்தச் சட்டம் நடை முறையில் ஒரு இம்மி அளவு கூடச் செயல்படுத்தப்படவில்லை. இவ்வளவு செயலற்றுப்போய்விட்டதற்குப் பின்னாலேதான் சீர் திருத்துவதற்காக இந்தச் சட்டங்கள் வருகின்றன என்ற நிலை உளளது. கடுமையான தண்டனை விதித்து விடுவதாலே மட்டும் சமூகத்தைக் காப்பாற்ற முடியாது; தண்டனையினுடைய அளவைப் பொறுத்தவரை, மக்களின எண்ணத்தினை மாற்று வதற்குத்தான் முயற்சிக்க வேண்டுமென்ற முறையில், எளிய தண்டனைச் சட்டம் கொண்டு வரவேண்டுமென்பது இந்த அரசாங்கத்தினுடைய இலட்சியமாகும். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எதிர்க்கட்சித் தலைவரைக் கேட்க விரும்புவது, ஒவ்வொன்றுக்கும் கருத்து தெரிவித்து, எத்தனை தடவைதான் நீங்கள் பேசுவீர்கள். உங்களுக்குத் தரப்பட்ட உரிமையை நீங்கள் தவறாகப் பயன் படுத்துகிறீர்கள். ஒரு தடவை ஆலோசனை சொல்கிறீர்கள்; இரண்டு தடவை சொல்கிறீர்கள்; மூன்று தடவை சொல்கி றீர்கள்; அது குறிப்பிலே இருக்கிறது. மீண்டும், மீண்டும் அவை முன்னவர் விளக்கம் சொன்ன பிறகு, உங்களுக்கு ஏதோ புரிதற்க நான் வாய்ப்புத் தந்ததுபோல் பேசுகிறீர்கள்; ஏதோ 20 தடவை, 30 தடவை எழுந்து பேசலாம் என்று நீங்களே முடிவுக்கு வந்தால், இந்த அவையை எப்படி நடத்துவது என்று நான் கேட்க விரும்புகிறேன். (கூச்சல்-குழப்பம்). அருள்கூர்ந்து

நீங்கள் உட்கார்ந்துகொள்ளுங்கள். உறுப்பினர் திரு இராசேந்திரனைப் பேச அழைக்கிறேன். (குறுக்கீடு) நான் யாரையும் அனுமதிக்கப் போவதில்லை. நீங்களே உட்கார முடியுமா, முடியாதா? அவ்வளவுதான்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: அவர் சொன்னதற்கு நான் பதில் சொல்ல வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒன்றும் வேண்டியதில்லை.

திரு. அ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெண்தாடி வேந்தன் பெரியார் அவர்களுக்கும். . . . . (கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

திரு. எஸ். திருநாவுக்கரசு: பதில் சொல்வதற்கு உரிமை இல்லையென்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களே அதை எதிர்பார்த்தால், தானும் அதைக் கையாளவேண்டும். (குறுக்கீடுகள்) ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்லிக்கொண்டிருக்கத் தேவை இடையாது. அவை முன்னவர் ஏற்கனவே சொல்லியாயிற்று, நீங்களும் ஏற்கெனவே பலமுறை விளக்கம் சொல்லியாயிற்று, புதிய விளக்கங்கள் தேவை இல்லை. ஒருங்குப் பிரச்சினை என்ற முறையிலே நீங்கள் எழுப்பலாம், அதற்கு மறுப்பு இருந்தால். (குறுக்கீடு) அது உங்களுடைய பொறுப்பல்ல; ஆலோசனை சொல்கிற வேலை உங்களுடைய வேலை அல்ல. உங்களுக்குத் தரப்பட்ட வாய்ப்பை நீங்கள் தவறாகப் பயன்படுத்துகிறீர்கள். (குறுக்கீடுகள்) யார் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதை அவை முடிவு செய்ய வேண்டும். நீங்கள் முடிவு செய்ய வேண்டியதில்லை. (குறுக்கீடுகள்) இப்பொழுது நீங்கள் உட்கார வேண்டும்; இல்லாவிட்டால் நான் கடுமையாக இருப்பேன்.

THE HON. THIRU DURAIMURUGAN: This is not the proper way to behave in this House எதிர்க்கட்சித் தலைவராக இருந்தால் கூடப் பரவாயில்லை, ஆளுங்கட்சித் தலைவர்.



திரு. அ. இராசேந்திரன்: என்னை வேட்பாளராக நிறுத்திய கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும் நன்றி கூறி, என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கிய போளூர் தொகுதி மக்களுக்கும் நன்றி கூறி . . . (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் திரு. திருநாவுக்கரசுக்கு ஒரு மணித்துளி மட்டும் தருகிறேன். அருள்கூர்ந்து விளக்கம் தாருங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் பேரன்போடு 1 நிமிடம் கொடுத்ததற்கு நன்றி. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசுகிறபொழுது அரசால் அந்தச் சட்டங்கள் செயல்படுத்தப்படாமல் அந்தச் சட்டங்கள் செத்துப் போயிருந்தன என்று சொன்னார்கள். நான் சொன்னேன், அரசு செயல்படுத்திய காரணத்தால்தான் 6 இலட்சம் வழக்குகள் வந்தன. அந்த வழக்குகள் நீதிமன்றத்திலே தேங்கியிருந்தன. நீதிமன்றத்திலே அரசாங்கம் தலையிட முடியாது. எனவேதான் நீதிமன்றத்திலே வழக்குகள் தேங்கியிருந்தன. எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், சட்டம் கொண்டு வந்தது; சட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தாமல் போய்விட்டது; அதனால்தான் வேறு சட்டம் கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். அந்த அரசு அந்தச் சட்டத்தைச் சிறப்பாகப் பயன்படுத்திய காரணத்தால்தான் 6 இலட்சம் வழக்குகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையினர் வேறு யாரும் பேசக் கூடாது, அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: 6 இலட்சம் வழக்குகள் தேங்கியிருந்தன. நீதிமன்றத்திலே அரசாங்கம் தலையிட முடியாது. எனவே அந்த அடிப்படையிலேதான் நீதிமன்றத்திலே அந்த வழக்குகள் தேங்கின. அதற்காக, நீங்கள் பைசல் செய்ய நடவடிக்கை எடுங்கள், அது வேறு விவகாரம். ஆனால், குற்றம் பெருகுகிற காரணத்தாலே வேறு திருத்தங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னீர்கள். அதைத்தான் நான் சுட்டிப் பிட்டுச் சொன்னேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறையைச் சார்ந்த அமைச்சர் அவர்களே, ஒரு அரசாங்கம் புதிய ஒப்பந்தம் ஒன்று கொண்டு வந்து ஒரு நல்ல சட்டம், கடுமையான சட்டமாகவும் இந்த அவையிலே நிறைவேற்றப்பட்டு அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த மூன்றரை பல்லாண்டுக் காலத்துக்கு வாய்ப்பு இருந்தும், அவ்வாறு செயற்படாளமையால் இந்தச் சட்டத்தின் விளைவைப் பரிசீலனை செய்யக்கூடிய அந்த வாய்ப்பு இல்லாத நிலையில் நடைமுறைப்படுத்தப்பட முடியாத அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததால் 6 இலட்சம் வழக்குகள் தேங்கின. ஆகவே அப்படி தேங்கிய காரணத்தினால் அந்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதிலே உள்ள சிக்கலை இந்த அரசு ஆராய்ந்து இந்த மாற்றங்களை செய்கிறது. எந்தச் சட்டமும் நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக இருக்க வேண்டும், எளிதாக இருக்கவேண்டும். உடனடியாக மக்கள் இந்தச் சட்டம் செயற்படுகிறது என்பதை உணர வேண்டும். அதற்குப் பின்னால் ஏற்படுகின்ற சமூக விளைவுகள், சமூக விளைவுகளை அவர, அது அரசாங்கத்தினுடைய சட்டத்தால் ஏற்படுகின்ற குறைபாடுகள் அல்ல. எனவே இந்தச் சட்டத்தால் ஏற்பட்ட குறைபாடுகளை மாற்றுவதற்குத் தான் இப்போது கொண்டுவரப்படுகிற திருத்தம் ஏற்றது என்று அரசாங்கம் கருதுகிறது.

*(நண்பகல் 12-00)*

**திரு. அ. இராசேந்திரன்:** மாண்புமிகு போலைத் தலைவர் அவர்களே, அரசுத் தரப்பில் முன் மொழியப்பட்ட மதுவிலக்குச் சட்டம் 5/89-ல் என்னுடைய கணிவாக கருத்துக்களை தெரியிக்க விரும்புகிறேன். தமிழ்நாட்டில் 6,40,000 வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன என்று சொல்லப்பட்டது. அதற்கு காரணம் எல்லாம் சொல்லும்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சட்டம் கடுமையாக இருந்தது, சட்டம் கடுமையாக இருந்த காரணத்தினால், சட்டம் கடுமையாக இருக்கும்போதே இத்தனை வழக்குகள் இருந்தன. இப்படி சுதந்திரம் குறைக்கப்பட்டால் இன்னும் வழக்குகள் அதிகமாக இருக்கும் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது வழக்குகள் தேங்கி நிற்கின்றதன் காரணமே இரண்டாம் வருப்பு நீதிபதியில் நீதிமன்றங்களிலேயிருந்து, முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றங்களுக்கு மாற்றியதன் காரணமாக முந்தைய அரசு கொண்டு வந்த சட்டத் திருத்தத்தின் காரணமாக வழக்குகள் தேங்கி நின்றன.





அவை முன்னவர் அவர்கள் சொன்னபடி நடைமுறைப்படுத்த முடியாத சட்டங்கள் கொண்டு வந்தார்கள். அதன் காரணமாக வழக்குகள் எல்லாம் தேங்கி நின்றன. இந்த மது விலக்குச் சட்டத்திற்கு தாவொரு வண்ணமும் திருத்தம் கொண்டுவரப் பட்டது. அந்தத் திருத்தப்படி ஒருவன் 3-வது முறையாக குடித்தால் நாடு கட்டாயப்படவேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள். நாடு கடத்தப்படவேண்டுமென்று சொன்னால் அவன் வாழுகின்ற பகுதியிலிருந்து வேறு பகுதிக்கு அவன் கடத்தப் படவேண்டுமென்று கடுமையான சட்டம் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டம் அமல் நடத்தமுடியாத சட்டம் என்ற காரணத்தினாலும் மேலும் முந்தைய வரிசையில் இருந்த ஒரு சில நண்பர்கள், கட்சிக்காரர்கள் அவர்களே நாடு கடத்தப்படவேண்டியவர்களாக இருந்த காரணத்தினால் அந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட முடியவில்லை. மேலும் காவல்துறை அதிகாரிகள் கைகள் கட்டப்பட்டன. ஆகவேதான் இப்படிப்பட்ட வழக்குகளை எல்லாம் நீதி மன்றங்கள் சந்திக்கவேண்டிய சூழ் நிலை இருந்தது.

மேலும் இந்தக் குடிசைத் தொழில். குடிசைத் தொழில் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் தொழில் குடிசைத் தொழிலாக மாறியதற்குக் காரணமே முந்தைய அரசுதான் காரணம். இதற்கெல்லாம் அவர்கள் பதில் சொல்லவேண்டிய காலம் வந்திருக்கிறது. இந்தச் சட்டத்தில் 'and' எடுத்து விட்டு, 'and' என்பது ஏற்னவே இருந்தது, அதை 'or' என்று மாற்றிவிட்டார்கள். அதை மாற்றவேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். நிச்சயமாகச் சொல்கிறேன். ஏழையெளிய மக்களை வாட்டி வைக்கின்ற, அமல்படுத்தமுடியாத சட்டங்களை 'and' என்று போட்டுவிட்டு உண்மையிலேயே குற்றம் செய்கின்றவர்களைக்கூட நீதிமன்றத்திற்கு வரும்போது அவர்கள் குற்றவாளிகள் இல்லை என்று மறுக்கப் பட்டதன் காரணமாக இந்த 6,40,000 வழக்குகள் தேங்கி நின்றன. நிச்சயமாக இந்தச் சட்டத்திருத்தத்தில் குற்றத்தைச் செய்கின்ற வர்கள் 'அவர்கள் நிறைந்த தண்டனை வில்லை அபராதம்' என்று இருப்பது நிச்சயமாக வழக்குகள் குறைவதற்கும், ஏழை எளிய மக்களை காப்பாற்றுவதற்கும் இந்தச் சட்டத்திருத்தம் உண்மை

[திரு. அ. இராசேந்திரன்] [1989 பிப்ரவரி 21

யிலேயே வழிவகை செய்யுப் என்று நான் சொல்ல விரும்புகிறேன். அடுத்து, மேலும் இங்கே பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு போலைத் தலைவர் அவர்களே, on a point of order please, அது 'டிமான்ட்ஸ்' ஆக இருந்தாலும் சரி, அது 'பில்'-ஆக இருந்தாலும் சரி, பேசுகிறபோது வரிசையாக, எதிர்க்கட்சி வரிசையிலே உள்ளவர்கள் பேசி, எதிர்க்கட்சி வரிசையிலே பேசி முடித்த பிறகு, ஆளுங்கட்சி சார்பிலே அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதுதான் மரபு. இப்போது நாங்கள் எல்லாம் பேசி முடித்தபிறகு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசினால் அவர்கள் பதில் சொல்கிறபோது பல விவரங்களைச் சொல்வார்கள். அதற்கு இந்தப் பக்கத்திலேயிருந்து பதில் சொல்ல முடியாது. இப்போது அமைச்சர் அவர்கள் சொல்கிறதற்கும் மேலே உறுப்பினர்கள் ஒன்றும் பதில் சொல்லப்போவதில்லை. பேசவிடுவது என்றால், நாங்கள் பேசுவதற்கு முன்னாலே, அவர்களைப் பேச விட்டு இருக்கவேண்டும். ஆளுங்கட்சியிலே இருப்பவர்களை பேசவிட்டு எங்களைப் பேசவைத்து கடைசியாக நாங்கள் பேசிய கிறுப் பின்னாலே அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டும். அதுதான் மரபு. அது டிமான்ட் ஆக இருந்தாலும் சரி, பில்லாக இருந்தாலும் சரி. இதுமாதிரி தவறாக நடக்கும்போது எப்படிச் சொல்லாமல் இருக்கமுடியும். நான் எழுந்தால் கோபித்துக் கொள்கிறீர்கள் நீங்கள் . . . .

மாண்புமிகு போலைத் தலைவர் : அடுத்தமுறை அதைச் செய்யலாம்.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே compounding offence பற்றி குறிப்பிட்டார்கள். இது நல்ல, வரவேற்கத் தகுந்த அம்சமாகும். மேலும் வழக்குகளைத் துரிதப்படுத்தியாக வேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டம் படித்தவர்களாக இருப்பதாலும், வழக்குமன்றத்திற்குச் செல்கின்ற ஒரு வழக்கறிஞர் என்ற காரணத்தாலும் ஒரே ஒரு கருத்தைச் சொல்கிறேன். Motor Vehicles Act-ல் ஒரு பிரிவு இருக்கிறது. நீதிமன்றத்திலிருந்து சம்மனை அனுப்பும்போதே, அவர்களுக்கு ஒரு தொகையை



1989 பிப்ரவரி 21] [திரு. அ. இராசேந்திரன்]

இப்போதைக்கு குறிப்பிட்டு குற்றத்தை ஒப்புக்கொள்வதாக இருந்தால், குறிப்பிட்ட அபராத தொகையைக் கட்டணம் என்று நீதிமன்றத்திலிருந்து குறிப்பிட்டு அனுப்புவார்கள். அதுபோல இந்த வழக்குகளைப் பொறுத்தமட்டிலும் கூட நீதிமன்றத்திலிருந்து சம்மனை அனுப்பும்போதே, குற்றத்தை ஒப்புக்கொள்வதாக இருந்தால் நீங்கள் இவ்வளவு பணத்தைச் செலுத்த வேண்டுமென்று குறிப்பிட்டால் வழக்குகள் தேங்காமல் விரைவில் வழக்குகளை முடிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்து. என்னுடைய தொகுதியைப் பற்றி. . .

மாண்புமிகு போலைத் தலைவர் : இப்பொழுது சட்ட திருத்தத்தைப் பற்றி மட்டும் பேசுங்கள். தொகுதியைப் பற்றி அல்ல.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களால் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்ற தமிழ்நாடு பதிவிக்கு இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவின்மீது ஒருசில கருத்துக்களைக் கூறுவதற்கு நான் முற்படுகிறேன். இன்றைக்கு இந்தச் சட்ட திருத்தத்தைக் கொண்டுவருவதற்கான நோக்கத்தைப் பற்றி குறிப்பிடும்போது, ஏற்கெனவே இருந்த சட்டத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு தண்டனைக் குறைவாக இருந்த காரணத்தினால் 6 லட்சம் வழக்குகளுக்கு மேல் தேங்கியிருந்தன. அந்த வழக்குகளை விரைந்து முடிக்கின்ற வகையிலே இந்தச் சட்டத் திருத்தத்தை இங்கே கொண்டு வந்ததாக தெரிவித்திருக்கிறார்கள். இதிலிருந்து, அடிப்படையில் தண்டனையின் அளவு குறைக்கப் பட்டிருக்கிறது. இதற்கு முன்பு warrant case ஆக இருந்தது இப்பொழுது சம்மன் ஆக மாற்றப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு non-bailable ஆக இருந்தது இப்பொழுது பெயிலபிள் ஆக மாற்றப்பட்டிருக்கிறது. இதுதான் இன்றைக்கு எற்பட்டிருக்கிற முக்கியமான மாற்றங்கள். இந்த அளவுக்குத் தண்டனைகள் குறைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் தேங்கியிருக்கின்ற வழக்குகளை விரைவில் பைசல் செய்யலாம் எல்லா விரைவில் எப்படி முடிக்கலாம் என்று எனக்குப் புரியவில்லை. அதற்காக இதிலிருந்து ஒரு புதிய சட்டத் திருத்தத்திலே ஒரு புதிய செக்சனையே கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள். செக்சன் 17(1) யில் Power to compound offence என்கிற

[திரு. பொன். விஜயாகவன்] [1989 பிப்ரவரி 21

அவையிலே சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சிறுகும் ஒரு தவறுமற்ற ஒன்று என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இது அவர்களாக கொடுத்திருப்பது. நிர்வாகத்திற்கு, எக்ஸிகியூட்டிவிற்கு, அதிகாரத்தை வழங்கி, 500 ரூபாயிலிருந்து 2000 ரூபாய் வரை அபராதத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று இருக்கிறது. ஒன்று, இது கோர்ட்டுக்கு வழிவகுக்கும் என்பதால் இதனை நான் ஏற்றுக்கொள்ள மறுக்கிறேன். இல்லையென்றால், 500 ரூபாயிலிருந்து 2 ஆயிரம் ரூபாய் வரை என்று அவர்கள் போட்டு விடுவார்கள் என்ற காரணத்தால் அதனால் ஏற்படுவதை இங்கே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். "Any person who has committed..." என்கின்ற அந்த வார்த்தையோடு அதை நிறுத்தி விட்டிருந்தால் கூட பரவாயில்லை.

"or is reasonably suspected of having committed an offence under this Act ....."

ஒரு சந்தேகத்தின் பேரில் போதும் என்கிற அளவிலே சொல்வது சரியானதல்ல. இது சட்டத்திற்குப் புறம்பானது. Saspicion is not conclusive proof. இதனால் பாதிக்கப்படுபவர்கள் நடவடிக்கைகளை கூட எடுக்கலாம். அப்படி ஏற்படுகின்ற நிலையில் நாம் கோர்ட்டுக்கு போகிற அவசரத்திற்குப் பதிலாக நிர்வாகத்திற்கு விண்ணப்பிப்பது, அவரவரும் பணத்தைப் பெற்றுக்கொண்டு, compound செய்கின்ற முறை நல்ல முறையல்ல. ஆகவே, இந்த செக்சன் 24(டி) யை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அடுத்து, இந்தத் திருத்தத்தின் அடிப்படையைப் பார்க்கின்ற போது, 500 ரூபாயிலிருந்து 2 ஆயிரம் ரூபாய் வரை பெறலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு ஏறத்தாழ 6 இலட்சம் வழக்குகள் தேங்கிக்கிடக்கின்றன. அவ்வளவு வழக்குகள் இருப்பதால், 500 ரூபாய் கட்டினால் அரசுக்கு 30 கோடி ரூபாய் கிடைக்கிறது. ஆயிரம் ரூபாய் கட்டினால் அரசுக்கு 60 கோடி ரூபாய் கிடைக்கிறது. 2000 என்று அந்த எல்லைக்குள்ளே அபராதம் போட்டால், அதை ஒத்துக்கொண்டு 2000 ரூபாய் கட்டினால் 120 கோடி ரூபாய் அரசுக்குக் கிடைக்கிறது. அதைப் பார்க்கின்றபோது, கூம்புத்திற்கான தண்டனை என்பதற்குப் பதிலாக, ஒரு வரி மாதிரிதான் இது தெரிகிறது. இன்னும் சாராயத்திற்கு ஒரு வரி விதிப்போ என்று என்னுகிற அளவுக்குச் சட்டம் இருக்கிறதென்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே கள்ளச் சாராயத்திற்கு வரி விதிப்பதற்காகத்தான் இந்தச் சட்டம் வருவதுபோல இருக்கிறது. இருக்கக்கூடிய நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கு கள்ளச் சாராயத்திற்கு ஒரு வரி விதிக்க முடியுமென்ற அடிப்படையிலே இந்தச் சட்டம் இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன என்று சொன்னால், அந்த வழக்குகளைத் தீர்ப்பதற்கு ஸ்பெஷல் கோர்ட்ஸ் போட முடியும். தனியாக நீதிமன்றங்களை அதற்கு மட்டும் வைத்து, அந்தக் கோர்ட்டுகளிடம் அந்த வழக்குகளைத் தர வேண்டும். அதை எனபடுகிறதோ, தவறென குறைகிறதோ அது வேறு விஷயம். இன்னும் ஒன்று. இன்றைக்கு இருக்கிற குண்டாஸ் ஆக்டைப் பயன்படுத்தலாமென்று மறைமுகமாக முதலமைச்சராகவும் தெரிவித்தார்கள். குண்டாஸ் ஆக்டை எப்படிப் பயன்படுத்த முடியும்? Habitual offenders இருக்கிறார்கள். அவர்களை எப்படி கண்டுபிடிக்கமுடியும்? பணத்தைக் கட்டுகிறவன் பினாமி பெயரில் கட்டிவிட்டால் யார் habitual offender என்பதை தெரியாது யார் மீது வழக்கு தொடருவது? பணம் வேண்டுமானால் சர்க்காருக்கு வரலாம் இதனால் கள்ளச் சாராயத்தைக் குறைக்க முடியாது. கள்ளச் சாராயத்தை அழிக்க முடியாது. எனவே அரசாங்கம் செக்ஷன் 24(டி)யைத் தவிர்க்க வேண்டும். அதை நீக்கிவிட்டு, வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன என்றால் அந்த வழக்குகளை விசாரிப்பதற்கு ஸ்பெஷல் கோர்ட்ஸ், தனி நீதி மன்றங்களை அமைப்பது தான் முறையாக இருக்கும். அப்படியில்லாமல் ஏற்கெனவே உள்ள சட்டத்தின் அடிப்படையில். . . .

திரு. என். கணபதி: தலைவரவர்களே, மாண்புமிகு ஜனதா கட்சி உறுப்பினர் திரு. விஜயாகவன் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்த நோக்கிலே தண்டனை பிகச் கடுமையாக இருக்கிறது என்பதால், செகண்ட் கிளாஸ் மேஜிஸ்டிரேட்டுகளுக்கு பவர் இல்லை என்று, பர்ஸ்ட் கிளாஸ் மேஜிஸ்டிரேட்டுகளைப் போட்டு 1983 ஜுவலரி மாதத்தில் ஜி.ஓ. போட்டு, நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டன. ஆனால் இன்றுவரை வழக்குகள் நடைபெறவில்லை. ஏனவே புதிதாக ஸ்பெஷல் கோர்ட்ஸ் போட வேண்டியதில்லை. ஏற்கெனவே இருக்கும் ஸ்பெஷல் கோர்ட்டுகளில் 6, 7 ஆண்டுகளாக வேலையில்லாமல் தூங்கிக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, 24 (டி) பிரிவுதான் இன்று சர்ச்சைக்குரியதாக இருக்கிறது. அதற்கு விளக்கத்தைச் சொல்லிவிட்டால், மற்ற உறுப்பினர்கள் அதையே மீண்டும் பேசாமல் இருப்பார்களென்று எதிர்பார்க்கிறேன். 24 (டி) என்று போடப்பட்டிருப்பது, புதிதாக சேர்க்கப்பட்டிருப்பது, Power to compound offence. Any Prohibition Officer specially empowered by the State Government இதை வைத்துக்கொண்டு ஒருவேளை துஷ்பிரயோகம் செய்வார்களோ என்ற சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புவது, சார்ஜ்-சீட் போட்ட பிறகு, அந்த வழக்குகள் நீதிமன்றத்திலே தான் நடைபெறும். இப்போது உள்ள 6 லட்சத்து 40 ஆயிரம் வழக்குகள் நீதிமன்றத்தில் தான் நடைபெறும். அந்த உத்தரவாதத்தினை மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயராகவன் அவர்களுக்கும், இங்கே பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவராகிய திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். Prohibition Officer என்பதற்கு definition இருக்கிறது. Prohibition Act-ல் இருக்கிறது. இப்போதே சொல்ல வேண்டுமென்றால் சொல்கிறேன், இல்லையென்றால் கடைசியில் சொல்கிறேன்.

மாண்புமிகு போலைவத் தலைவர்: கடைசியாகச் சொல்லுங்கள்.

திரு. பொன். விஜயராகவன்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் குறிப்பிட்டபோது ஒன்றைச் சொன்னார்கள். Prohibition Officer என்பதற்கு சட்டத்திலேயே definition இருக்கிறது. அவர் Executive. நிர்வாகத்தில் இருக்கக் கூடியவர்கள். நிர்வாகத்தில் இருக்கிறவர்கள் அதைச் செய்யக் கூடாது. நீதிமன்றங்களில் இருக்கிறவர்கள்தான் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினேன். நிர்வாகத்தில் உள்ள Executive க்கு இடம் கொடுத்தால் தவறுகள் நடக்க வாய்ப்பு இருக்கும்.

இன்னொரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது, suspicion is not conclusive proof. அதைத் திருத்த வேண்டுமென்றுதான் சொன்னேன். நீதிமன்றங்கள்தான் செய்யும் ஏன்றால் ஆட்சேபணையில்லை. ஆனால் வரி விதிப்பு என்ற அளவுக்கு பணம் மட்டுமல்லாமல், தண்டனையும்



இருக்க வேண்டும். இல்லையென்றால் ஏமாற்றி விடலாம். தண்டனை இருந்தால், habitual offenders -க்கு வாய்ப்பு இல்லாமல் இருக்க முடியும். ஹாபிச்சுவல் அபெண்டர்ஸ் தொடர்ந்து குற்றம் செய்யக்கூடிய நிலைமையை எப்படிக் கண்டு பிடிப்பது என்பதுபோன்ற குறைபாடுகள் இருக்கின்றன. இந்தக் குறைபாடுகளைத் தவிர்த்து, சட்டத்தைக் கொண்டு வருவதில் ஆட்சேபணை இல்லை. மிகப் பெரிய தண்டனையைக் கொடுக்கக்கூடாது. கொசுவை அடிக்க ஆட்டம் பாம் வேண்டுமென்று கேட்கவில்லை. மதுவிலக்குக் கொள்கை வேண்டுமா வேண்டாமா என்ற அந்த சர்ச்சைக்குள் நான் போகவில்லை. ஆனால் கள்ளச் சாராயத்தை எப்படி ஒழிப்பது என்பதன் அடிப்படையில் நடவடிக்கைகள் இருக்க வேண்டும். 6 லட்சம் வழக்குகள் தேங்கி விட்டன, ஆகவே இதைச் செய்கிறோம் என்ற அடிப்படையில் இதைச் செய்யக்கூடாது என்ற கருத்தைச் சொல்லி, நான் முதலில் சொன்ன திருத்தங்களை ஏற்று அரசாங்கம் சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டு, அப்படிக் கொண்டு வந்தால் அதை ஏற்கத் தயார் என்று சொல்லி, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. பெ. சீனிவாசன்: மாண்புமிகு போலைத் தலைவர் அவர்களே, (தம் இருக்கையைச் சுட்டிக்காட்டி) இங்கே நான் உட்கார்ந்திருக்கிற இடத்தில், கடந்த காலத்திலுடைய 'போர்க்கால சின்னம்' இருக்கிறது. அதை ரிப்பேர் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு போலைத் தலைவர்: இதைத் தனியாகச் சொல்லியிருந்தால், தனியாகவே கவனித்திருக்கலாம்.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு சட்டப் போலைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டத் திருத்தத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்காவ வாய்ப்புக் கொடுத்ததற்காக நான் நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

6 லட்சம் வழக்குகள்தான் இங்கே ஒரு பிரச்சினையாக விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. முதலில் மதுவிலக்கை அமுல் படுத்துவது—பின்னர் மதுவிலக்கை ரத்து செய்வது. இது ஒரு அரசாங்கம் எடுக்கக்கூடிய கொள்கையாகும். ஆங்கிலத்தில் ஒரு அறிஞன் சொன்னான் Crime is the product of Law.

[திரு. டி. எச். பாண்டியன்] [1989 பிப்ரவரி 21

அதாவது புதிய புதிய சட்டங்களைப் போடும்போது, புதிய புதிய குற்றவாளிகள் உருவாகிறார்கள். சும்மா இருந்த மக்களை, மதுவிலக்கை ரத்து செய்துவிட்டு "நீங்கள் குடியுங்கள்" என்று சொல்லுவதும், அதற்குப் பிறகு அவர்கள் குடித்து கொஞ்ச காலம் பழகிவிட்ட பிறகு, "நீங்கள் குடிகளைக் கூடாது, குடித்தால் குற்றம்" என்று சொல்லுவதும் இன்றைக்கு இருக்கிற சமூக நீதிக்கு எதிரானதும் என்பதை முதலில் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். மக்களாகக் கேட்கவில்லை, நீங்கள் குடிக்கலாம் என்று சொன்னீர்கள்—அவர்கள் குடித்தார்கள். அதற்குப் பிறகு 'குடிக்கக்கூடாது' என்று சொன்னோம்—அவர்கள் குற்றவாளி யாகிவிடுகிறார்கள். இதற்குப் பொறுப்பு, அந்தத் தனி மனிதன் அல்ல. ஏழை எளிய மக்கள்தான் இங்கே குற்றவாளிகளாக— இந்த 6 லட்சம் வழக்குகளில் ஒரு 5 லட்சம் பேராவது இருப்பார்கள். நான் காலையில் சட்ட அமைச்சரிடம் சொன்னேன். 4 (1) (ஜே)—குடித்தவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் பார்வம் செய்யவில்லை—தவறு செய்யவில்லை—சட்டத்தை மீறவில்லை. அவர்கள் மீது உள்ள வழக்குகளையாவது முதலில் வாபஸ் பெறவேண்டும் என்று சொன்னேன். பெரிய பெரிய குற்றங்களைச் செய்தவர்களை மட்டும் நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தி, வழக்கை நடத்திக் கொண்டு, மற்ற வழக்குகளை வாபஸ் செய்வதுதான்—திரும்பப் பெறுவதுதான் உண்மையிலேயே நாட்டில் சமுதாய நீதியை அரசாங்கம் செய்வது போலாகும். **Delay in disposal of the cases, is a ground for quashing it** என்று சென்னை உயர்நீதிமன்றம் ஏற்கெனவே தீர்ப்பு வழங்கியிருக்கிறது. 6 ஆண்டுகளாக தீர்ப்பளிக்கப்படாமல் இந்த வழக்குகள் நீதிமன்றத்தின் முன்னால் இருக்கின்றன. எனவே அவைகளை நீங்கள் வாபஸ் செய்யவில்லை என்றால்—சென்னை உயர்நீதிமன்றம் "சார்ஜ் ஷீட் போடவில்லை என்ற காரணத்தைச் சொல்லியே ஆயிரக்கணக்கான வழக்குகளை ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே ரத்து செய்தது—அதே பாணியில் இந்த வழக்குகளையும் யாராவது உயர்நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றால், நிச்சயமாக 6 லட்சம் வழக்குகளும் நீதிமன்றத்தால் ரத்து செய்யப்படும். இதை அரசாங்கமே செய்யலாம். மக்கள் வாக்குகளைப் பெற்று வந்திருக்கிற இந்த அரசாங்கம் செய்ய வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது, தண்டனை கடுமையாக இருந்து, சிறைக்குச் செல்லக்கூடிய அளவுக்கு தண்டனையை வழங்கினால் குற்றங்கள் குறையும்



1989 பிப்ரவரி 21] [திரு. டி. எச். பாண்டியன்]

என்று சொன்னார். அபராதம் போட்டால் அது தவறு செய்ய வலுக்கு அபராதம். ஆகவே சிறைக்குள் போட்டால் அது அரசாங்கத்திற்கு அபாரதம், நீங்கள் செலவழிக்க வேண்டும். ஒரு ஆளுக்கு ஒரு நாளைக்கு 10 ரூபாய் என்று 3 மாதம் போட்டால், ஆயிரம் ரூபாய் உங்களுக்கு அபாரதம். ஜண்டர் சட்டத்தில் போட்டால் 15 ரூபாய் செலவழிக்க வேண்டும் நாள்தோறும். ஆகவே சிறைக்குள் அடைப்பது அரசாங்கத்திற்கு லாபம் கிடையாது. ஆகவே, இந்தக் கருத்துக்களை முதலில் நான் உங்கள் முன்னால் வைக்க ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 12-20)

இன்றைக்கு பல பெரிய பெரிய குற்றவாளிகள் White Coller Offenders, FERA Violators, Income-Tax Offenders. Real Estate என்று சொல்லிக்கொண்டு நாட்டையே கொள்ளை அடிக்கிறவர்கள், வெளியே உலா வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். இந்த ஏழை மக்கள் மீது நடவடிக்கையெடுப்பதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். நம் முடைய நாட்டில் யார் வேண்டுமானாலும் நிலத்தை விற்கலாம். ரியல் எஸ்டேட் ஆரம்பித்துக் கொள்ளலாம். அமெரிக்கா நாட்டில் அதற்கு லைசன்ஸ் பெற வேண்டும். இங்கே அதற்கு லைசன்ஸ் கிடையாது. யார் வேண்டுமானாலும் யாருடைய நிலத்தையும் விற்கலாம். இது நம் நாடு. இந்த நாட்டிலே எதையும் செய்யலாம். தப்பித்தும் கொள்ளலாம். ஏழைகள் மாட்டிக் கொள்கிறவர்கள். ஆகவே, இந்த சாதாரண ஏழை எளிய மக்களைப் பற்றி, நான் இங்கே அவர்களை எப்படி தண்டிப்பது என்று விவாதிப்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. கோடிக்கணக்கான லட்சக்கணக்கான வரியை செலுத்தக்கூடியவர்கள், செலுத்தாத இந்தக் காலத்தில் இந்த ஏழை எளிய மக்களுக்கா ஆயிரம் ரூபாய் அபாரதம் போட வேண்டும்? இவர்களையா தண்டிப்பது? வாக்குச்சாவடிக்கே வராதவர்கள், ஒரு அரசாங்கம் வர வேண்டுமென்று ஆசைப்படாதவர்கள், அவர்களைப் பாதுகாப்பதற்கா இந்த அரசாங்கம்? இந்த நிலையை மாற்றவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன். இதையே ஒரு வழியாகச் சொன்னான் ஒரு குற்றவியல் நிபுணன். **'Criminal behaviour is learnt'** தானாக, பிறப்பால் ஒருவன் சட்டத்தை மீறுவதா கிடையாது, நீங்கள் சொன்னீர்கள், குடித்தார்கள். இப்போது குடிக்கக் கூடாது என்று சொல்கிறோம். அவர்களை குற்றவாளிகளாக

[திரு. பி. எச். பாண்டியன்] [1989 பிப்ரவரி 21

ஆக்கிக் கொண்டிருக்கிறோம். அவர்களைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். நான் இங்கே தெரிவித்துக் கொள்வது எல்லாம் இந்த சட்டப் பிரிவே தேவை இல்லாதது. இந்த சட்டமே இன்னலுக்கு தேவையே கிடையாது. If there is no law no crime. If you produce law you are producing criminals. ஆகவே, அரசாங்கம் அதற்கு துணை போகக் கூடாது. பெரிய பெரிய White Collar Offenders, -ஐ பிடியுங்கள். அவர்கள் உலா வந்து கொண்டிருக்கிறார்கள். பெரிய மனிதர்கள், concentrate on the coins நம்முடைய தமிழகத்தில், பிக்பாக்கெட்டி களைப் பிடிக்காதீர்கள். (குறுக்கீடு) அதாவது சிறிய குற்றவாளி கள், சிறிய குற்றவாளிகள் என்றால் ஏழை. பிக்பாக்கெட்டில் என்றால் 5 ரூபாய், 10 ரூபாய், சிறியவர்கள். அதாவது ஏழையை அழிப்பதற்கு இந்த சட்டமன்றம் அல்ல. தமிழ்நாட்டிலே ஒரு வி.ஐ.பி., எங்கே பார்த்தாலும் மஞ்சள் நிறத்தில் அவருடைய பெயரைப் போட்டு பிளாட்டுகளைப் போட்டு விற்றுக் கொண் டிருக்கிறார்கள். யாராவது அதுபற்றி எண்ணினோமா? நான் ஒருமுறை மலேசியாவிற்கு சென்ற நேரத்தில் சொன்னார்கள். அங்கேயிருந்து வந்தார்கள், வரை படங்களைக் காட்டினார்கள். சென்னைக்கு அருகில் அந்த இடம் என்றார்கள். தமிழ்நாட்டிற்கு வந்தபோது அந்த இடம் விழுப்புரத்தில் இருந்தது என்றார்கள். யாராவது இதுபற்றி சிந்தித்தோமா, கிடையாது. காரணம் அவர் அவர்கள் வி.ஐ.பி. அந்த அளவிற்கு நம்முடைய நாட்டில் பெரிய பெரிய தவறு செய்யக்கூடியவர்கள் இருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் என்றைக்கு இந்தப் பெரியவர்களை, நாட்டை ஏமாற்றுகிறவர்களை, ஊரை ஏமாற்றுகிறவர்களை, ஏழை எளிய மக்களை ஏமாற்றுகிறவர்களை தண்டிக்கிறீர்களோ, அவர்கள் மீது சட்டத்தைக் கொண்டு வருகிறீர்களோ, அதுவரையில் இந்தச் சட்டங்கள் இந்த நாட்டிற்கு தேவையே கிடையாது. இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவீர்களானால் உண்மையில் மக்கள் அவதிப்படுவார்கள். இந்த ஆயிரம் ரூபாய் அபராதத்தைக் கட்ட வேண்டுமென்றால், ஒரு தாய் தன் கழுத்தில் இருக்கிற தாலியை விற்றுத்தான் கட்ட வேண்டும். அந்த நிலை ஏற்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு உதாரணம் சொன்னேன். இன்னும் இதுபோன்று பல உதாரணங்களைச் சொல்லலாம். அன் றைக்கே சொன்னேன். (குறுக்கீடு) இனம் வழுதி அவர்கள் நான் பேசியதும் பேசலாம், அவர் அனுமதித்தால். முன்பே ஒருமுறை கோயம்புத்தூர் சாலையைச் சொன்னேன். ஒருவர். அவையில் இல்லாதவர்களுடைய பெயரைச் சொல்லக்கூடாது. . .



1989 பிப்ரவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்புமிகு உறுப்பினர் அவர்களே, உங்களுடைய கருத்துக்கள் எல்லாம் மிகவும் சிறந்தவை என்பதில் எவருக்குக் கருத்து வேறுபாடு இல்லை. ஆனாலும் இப்போது நாம் இந்தச் சட்ட முன்வடிவை முடிக்க வேண்டும்.

திரு. பி. எச். பாண்டியன்: முடித்து விடுகிறேன். ஒருவர், 400 ஏக்கர், எங்கே, மகாபலிபுரம் சாலையில், பினாமி, பாருக்குத் தெரியும்? என்ன நடவடிக்கை? ஏன் எடுக்க முடியவில்லை? ஏன் கண்டுபிடிக்க முடியவில்லை? பெரியவர்கள் போலிகின் கண்ணுக்கு தெரிய மாட்டார்கள். அரசாங்கத்திற்கும் தெரிய மாட்டார்கள். ஆகவே இந்த ஏழை மக்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தாது. ஏழை மக்களுக்கு இந்தச் சட்டம் தேவையில்லை. ஏழைக் குடும் பங்களை இந்தச் சட்டம் வாழ வைக்காது, ஏழைத் தாய்மார்கள் தங்களுடைய உடைமைகளை இழப்பதற்கு இந்தச் சட்டம் பயன் படும் என்பதைச் சொல்லி, என்னுடைய கருத்துக்களைத் தெரி வித்து, இந்தச் சட்டத்தை வாபஸ் பெறுங்கள், 6 லட்சம் வழக்கு களில் பெரிய குற்றங்களைச் செய்தவர்கள் மீது வழக்கு போடுங் கள், சாதாரண ஏழை எளிய மக்களை, சாமானியர்களை விட்டு விடுங்கள் என்று சொல்லி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் மீது கருத்துக்களைச் சொல்லிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என் னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன். என்னுடைய பதில் உரையில் சில பிரச்சினை களைப் பற்றிப் பதில் சொன்னாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கின்ற கருத்துக்களை, நம்முடைய அரசு அதிகாரி கள் குறிப்பு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் நன்மை பயக்கத்தக்க பிரச்சினை களிலே அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவு ஒரு எளிய சட்ட முன்வடிவு 'அமெண்ட்மென்ட்', ஒரு சாதாரண, எளிய முறையிலேதான் இந்த சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். வழக்கு மன்றங் களில் தேங்கியிருக்கின்ற வழக்குகளை இன்னும் காலதாமதம் செய்யாமல், பைசல் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்தச் சட்ட முன்வடிவை அரசு கொண்டு வந்திருக்கிறது.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1989 பிப்ரவரி 21

புள்ளிவிவரங்களைப் பார்க்கிறபோது, 6,34,940 வழக்குகள் தேங்கியிருப்பதாக அவைகள் சொல்கின்றன. கடந்த காலங்களில் உள்ள புள்ளிவிவரங்களைப் பார்க்கிறபோது, 1984 ஆம் ஆண்டில் 43,705 வழக்குகள்; 1985 ஆம் ஆண்டில் 57,468 வழக்குகள்; 1986 ஆம் ஆண்டில் 55,186 வழக்குகள்; 1987 ஆம் ஆண்டில் 1,98,282 வழக்குகள், 1988 ஆம் ஆண்டில் 2,59,406 வழக்குகள் தேங்கியிருக்கின்றன. இந்த வழக்குகளை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். இன்னும் காலதாமதம் செய்யக்கூடாது என்பதற்காகத்தான் இந்தச் சட்ட முன்வடிவை அரசு கொண்டு வந்திருக்கிறது. இதில் செய்யப்பட்டிருக்கிற திருத்தங்கள் எல்லாம், கடுமையான தண்டனை மூலமாக சட்டம் கொண்டு வந்தபோது, வழக்கு மன்றங்களில் இருக்கிற பிரபலமான வழக்கறிஞர்கள் அவர்களுக்கு ஆஜரான்றார்கள். நம்முடைய பி. எச். பாண்டியன் போன்றவர்கள் எல்லாம் அவர்களுக்காக ஆஜராகி வழக்கை கன்டெஸ்ட் செய்த காரணத்தால், வழக்குகளில் ஒரு தேக்கம் ஏற்பட்டது. இப்போது இந்தத் தண்டனையைக் குறைத்து, 3 மாதம் அல்லது அபராதம் என்று தண்டனையுடைய கடுமையைக் குறைத்து, இந்தச் சட்ட முன்வடிவை கொண்டு வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அதிலும் குறிப்பாக இந்த 'புரஹிபிசன் ஆபிசரைப்பற்றி ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருகிறபோது

"24-D. Power to compound offences-(1) Any Prohibition Officer specially empowered by the State Government in this behalf may accept, from any person ..... ....."

என்று புரஹிபிசன் ஆபிசர் என்ற ஒருவரை—அதிகாரம் கொடுக்கின்ற ஆபிசர்,—நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, புரஹிபிசன் ஆபிசர் என்று சட்டத்தில், ஏற்கெனவே டெபினிசனிலே இருக்கிறது.

(பிற்பகல் 12-30)

Section 2, sub-clause 14—

'Prohibition Officer' means the Commissioner, the Collector, or any officer or other person lawfully appointed or invested with powers under Section 25.

என்று ஏற்கெனவே இருக்கிறது Prohibition Officer' என்று யாரை நியமிக்கலாம் என்று சொல்லால், கலெக்டர், கமிஷனர். அல்லது அதிகாரிகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி இருக்கிற நிலைமையைப் பொறுத்தவரையில், இந்த 6 இலட்சம் வழக்கு



1989 பிப்ரவரி 21] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

களில், "சார்ஜ் ஷீட்" பைல் செய்யப்பட்டு, அவைகள் நிலுவையில் இருக்கின்றன. இந்த வழக்குகளைப் பொறுத்தவரையில் நீதி மன்றங்கள் தான் விசாரணை செய்து முடிவு செய்ய வேண்டும் என்று அரசு கருதுகிறது. அந்த முறையில்தான் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது எழுகின்ற பிரச்சினை இப்படி நீங்கள் 'எக்சிகியூடிவ்'-ல் இருக்கிற ஒருவரைப் போட்டால் என்ன செய்வது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள், பி.எச். பாண்டியன், பொன். விஜயராகவன், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எஸ். திருநாவுக்கரசு இவர்கள் எல்லாம் சட்டம் படித்தவர்கள். எனவே தான் இப்படி இதற்கு ஒரு திருத்தத்தைக் கொண்டு வருபோது நான் அதிகாரிகளைக் கேட்டேன், இதற்கு முன் உதாரணம் இருக்கிறதா என்று. 'Precedents' இருந்தால் கோர்ட்டிலே கொண்டுவரச் சொல்வார்கள். அப்படி இருக்கிறதா என்று நான் கேட்டபோது அவர்கள் கொடுத்திருக்கிற விவரப்படி

"Legislative precedents for compounding of offences Section 54 of the Wild Life Protection Act, 1972 (Central Act 8 of 1972).

Section 15 of the Tamil Nadu Entertainments Act, 1939 (Act 10 of 1939).

Section 55 of the Tamil Nadu Forests Act, 1882 (Act 5 of 1882)."

Compounding facility—

என்று சொல்கின்ற வசதிப்படி, சில சட்ட திட்டங்கள் அமலுக்கு வருகின்றன. அதைப் பின்பற்றித்தான் இந்த விதிமுறையும் கொண்டு வரப்படுகிறதே தவிர, வேறு அல்ல.

இன்னொரு உத்தரவாதத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்படி நியமிக்கப்படுகின்ற அதிகாரி ஒரு 'Responsible Officer' ஆக, ஒரு பொறுப்புள்ள அதிகாரியாக இருப்பார் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இனிமேல் தான் இதுபோன்ற அதிகாரத்தைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதில் உங்களுடைய கருத்துக்களைக் கவனத்தில் கொண்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1989 பிப்ரவரி 21

ஒரு கருத்து அரசாங்கத்தைப் பொறுத்து என்ன இருக்கிறது என்று சொன்னால், அப்படி நியமிக்கப்படுகின்ற 'Prohibition Officer—not below the rank of R.D.O.' என்ற அளவிற் குத்தான் இருக்க வேண்டும் என்ற ஒரு கருத்து இருக்கிறது. அது பரிசீலனை செய்து முடிவு செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் இப்படி 'Reasonably suspected'— அதைத் தான் நண்பர் விஜயாகவன் அவர்கள் அழுத்தமாகப் பேசினார்கள். 'Suspreion' ஏற்பட்டாலே அது விவகாரம்தான். யாருக்கும் சந்தேகம் ஏற்படக்கூடாது. இதைப் பொறுத்த வரையில் நாம் பார்க்கும்போது,

"The expression 'reasonably suspected of having committed an offence' occurs in all the legislative precedents.

S. 15 of the Tamil Nadu Entertainments Act, 1939.

S. 54 of the Wild Life Protection Act, 1972.

S. 55 of the Tamil Nadu Forests Act, 1882. In all these cases, 'power to compound offences' has been given to various authorities."

எனவே, இது ஒன்றும் புதுமையல்ல. ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிற அந்த அச்சத்தையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவின் மீது பேசிய உறுப்பினர்கள் மதுவிலக்கு முதலாவது திருத்த சட்டம், அந்தச் சட்ட முன்வடிவுகளுக்கு வெளியே சென்று கருத்துக்களைத் தெரிவித்தார்கள். ஆனால் இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது வரி போடுகின்ற ஒரு சட்டமல்ல. 'Taxation Measure' அல்ல. அபராதம் போடுவது தண்டனைதான். அபராதம் விதிப்பது என்பது இப்போது வழக்குகளை பைசல் செய்யலாம் என்ற நோக்கத்தோடு இந்த அரசாங்கம் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் Thiru P. H. Pandian, M.A. (Criminology). எப்போதும் 'சினிமா' பற்றித்தான் எண்ணிக் கொண்டிருப்பார்கள். எனவே, அவர்கள் பல விவரங்



1989 பிப்ரவரி 21] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

களைப் பற்றிச் சொன்னார்கள். மகாபலிபுரத்திலே 400 ஏக்கர்கள் என்று சொன்னார்கள். அந்த விவரங்களை எல்லாம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் கே. பி. கந்தசாமி அவர்களிடம் கொடுத்தால், அவர் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விவாதத்தில் பங்கு கொண்டு உரையாற்றியபோது, நம்முடைய முதலமைச்சர் அவர்களும், நம்முடைய அவை முன்னவர் அவர்களும், இடையிலே பல விளக்கங்களையும் தந்திருக்கிறீர்கள். என்னுடைய பணியை அவர்கள் இலகுவாக ஆக்கியிருக்கிறார்கள். எனவே இதற்கு மேல் விளக்கங்கள் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். அப்படி உங்களுக்கு விளக்கங்கள் தேவை என்று சொன்னால் நேரிடையாக வந்து கேட்டால் விளக்கங்களை நான் தருவதற்கு தயாராக இருக்கிறேன் என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவினை ஏற்றுக்கொண்டு, சட்டமாக இயற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வியாக்கியானத்தைக் கொடுக்க வேண்டுமென்றார்கள். நான் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன். அவர் கண்டு பிடித்துச் சொல்ல வேண்டும். கண்டு பிடிக்க முடியவில்லை என்றால் நான் தொடுக்கிறேன். கையிலே வைத்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி:** அவைத் தலைவர் அவர்களே, இன்னும் 2 நாட்களுக்குள் நான் அதைக் கண்டு பிடித்துச் சொல்கிறேன். ஆனால் இன்றோடு அவை முடிகிறது என்று சொல்லுகிறார்கள். அவை மீண்டும் கூடுகிற நேரத்தில் நிச்சயமாக அந்தத் தகவலை நான் இங்கே அளிப்பேன் என்று சொல்லி முடிக்கிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன்:** மொரைத் தலைவர் அவர்களே, இங்கே ஐ.டி.எஸ். பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில்

**மாண்புமிகு போவைத் தலைவர்:** உங்களுக்கே தெரியாதா மா.பி. அமைச்சர் சொன்னதை ஏற்றுக்கொண்டு, விரைவில் கண்டுபிடித்து நீங்கள் இரண்டு பேரும் தனியாகச் சந்தித்து இதற்கு ஏற்பாடு செய்து கொள்ளுங்கள். இப்போது சட்ட முன்வடிவை நிறைவேற்ற வேண்டும்.

பேரவைத் தலைவர்] [1989 பிப்ரவரி 21

பேரவை முன்னவர் கோரி:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 5/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்".

இம்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 14 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, தெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி (சங்ககிரி): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட இம்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 5/1989) நிறைவேற்றப் பெற வேண்டும்."

இம்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

## 7. அரசினர் தனித் தீர்மானம்.

## மின்சாரியம் வடகிழக்கு சுற்றுலாமண்டலம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அரசினர் தனித் தீர்மானங்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. கே. ராஜ் (நாகர்கோவில்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இக்கண்ட அரசினர் தனித் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்), சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 65-வது பிரிவின் (1)-வது உட்பிரிவின் படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக ஆயிரத்து அறுநூறு கோடி ரூபாய் இருக்கலாமென்று மேற்படி சட்டத்தின் அதே பிரிவைச் சேர்ந்த (2)-வது உட்பிரிவின்படி முன்னரே செய்யும் மாநில அரசின் செயற்குறிப்பு ஏற்கப்படலாம்".



1989 பிப்ரவரி 21.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதன் மீதான விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் மிக மிகச் சுருக்கமாகப் பேசி நேரத்தைக் கடைப்பிடிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். முதலில் இந்த விவாதத்தினைத் தொடங்கி வைக்கிறார் திரு. சு. குருதாதன் அவர்கள்.

திரு. சு. குருதாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள தமிழர்கள் மட்டுமின்றி கடல் கடந்து வாழுகின்ற தமிழர்களையெல்லாம் பாதுகாத்து வருவின்ற செம்மல் இதயமெல்லாம் நிறைந்திருக்கும் அருமைச் அண்ணன் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இனமான பேராசிரியர் அவர்களுக்கும், என்களுடைய இளைஞர் அணி தளபதி அண்ணன் ஸடாலின் அவர் களுக்கும், என்னுடைய அரசியல் ஆசான் வை கோபால்சாமி, எம்.பி. அவர்களுக்கும், ஒருமுறை அண்ணா அவர்கள் உரை யாற்றுகிறபோது 'என் தம்பி கருணாநிதி சிறைபட்டுக் கிடக்கிற பாளையங்கோட்டை சிறைச்சாலைதான் எனக்குப் புண்ணிய ஸ்தலம்' என்று பெருமையோடு சொல்லிக்கொண்ட அந்தப் பாளையங்கோட்டை தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றி யைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1948 ஆம் ஆண்டு இயற்றப் பட்ட மின்சாரச் சட்டத்தினை, தமிழ்நாடு மின்சார வாரியம் தனது மூலதனச் செலவிற்காக தமிழ்நாடு நிதி வாயிலிருந்தும், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்தும், வணிக வங்கி யிடமிருந்தும், மின்சார நிதிக் கழகத்திலிருந்தும், அதேபோல் கிராமப்புற மின்வசதிக் கழகத்தின் மூலமாகவும் கடன்களைப் பெற்றதே இதற் சான்று ஆகிறது.

(பிற்பகல் 12-10)

அப்படிக் கடன் வாங்குகின்ற தொகை ஆயிரம் கோடிக்கு மேல் செல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்கின்ற உச்சவரம்பும் அதிலே இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், கடந்த கால கட்டத்தில் தம்மையெல்லாம் ஆண்டு கொண்டிருந்த அரசாங்கம் அதைத் திருத்திச் சரியாகச் செயல்படாத காரணத்தால், இன்றைக்கு மொத்தக் கடன் தொகை சுமார் ரூ. 986 கோடிக்கு வந்தாகி விட்டது. மின்சார வாரியம், இந்த அரசாங்கம் நல்ல பணிகளைச் செய்ய வேண்டுமென்றால் பணம் தேவை. 'சட்டியில் இருந்தால் தான் அகப்பையில் வரும்' என்பது பழமொழி. ஆனால் இன்றையதினம் நிதியைப் பார்க்கின்றபோது சட்டியே உடைந்து

[திரு. சு. குருநாதன்] [1989 பிப்ரவரி 21

கொண்டு இருக்கிறது. ஆகவே நாம் பணத்திற்கு எங்கே செல்வது? இந்தச் சட்டியை வாங்கி அதிலே உணவு சமைக்க வேண்டுமென்றால் பணம் தேவை. அந்தப் பணத்தை வாரி வழங்குவதற்காகத்தான் இன்றைக்கு இந்த மின்சார வாரியம், இந்த அரசாங்கம் 1,600 கோடி ரூபாய் கடன் வாங்குவதற்கு இங்கே அனுமதி கோரியிருக்கிறது. இப்படி அதிகமாக நிதியைப் பெருக்க வேண்டும் என்ற எண்ணத்தைப் பார்க்கின்ற போது இந்த அரசாங்கம் இந்த பணத்தின் மூலம் நல்ல பல திட்டங்களை நிறைவேற்றும் என்கின்ற எண்ணம் எனக்கு இருக்கின்ற காரணத்தால் இந்தத் தீர்மானத்தை நான் வரவேற்று அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**திரு. செ. நார்முகமது:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே கலந்து கொண்டு உரையாற்றுகின்ற ஒரு வாய்ப்பினை எனக்கு நல்கிய, என்னைத் தேர்ந்தெடுத்த பத்மநாபபுரம் தொகுதி மக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்து நான் இந்தப் பொருளுக்கு வருகின்றேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக, கடனாக ஒரே சமயத்தில் ஆயிரம் கோடி ரூபாய் வரையிலும் பெற்றுக் கொள்ளலாம் என்று இருந்ததை இன்றையதினம் 1,600 கோடிக்கு மிகாமல் பெற்றுக் கொள்ளலாம் என்ற திருத்தத்தை வேறு வழியில்லாத காரணத்தினாலே மின்வாரிய அமைச்சர் அவர்கள் இங்கே முன்மொழிந்து இருக்கிறார்கள். அதிலே அவர் குறிப்பிட்டிருக்கின்ற விளக்கக் குறிப்பில், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம், வணிக வங்கிகள், மின்சார நிதிக் கழகம், கிராமப்புற மின் வசதிக் கழகம், முதலாக ஏற்கெனவே பல நூறு கோடி ரூபாய் கடனாகப் பெறப்பெற்றிருக்கிறது என்ற விவரத்தையும் சொல்லியிருக்கிறார். அந்த விவரக் குறிப்பிலே இதுவரையிலும் திருப்பிக் கொடுக்கப்படாத நிலுவைத் தொகை 1988 டிசம்பர் 31ந் தேதி ரூ. 980.84 கோடி இருந்து கொண்டிருக்கிறது என்ற விவரத்தையும் அவர் தந்திருக்கிறார். நாம் ஏற்கெனவே வாங்கிய கடன் ரூ. 986 கோடி அல்லது ஒரு மிகாம் கோடி ரூபாயும் திருப்பிக் கொடுக்கப்படாமல் இருக்கின்ற நிலையில் மேலும் கடன் பெறுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். இந்தத் தொகுதியைச் சார்ந்த திரு. பன்னீர்செல்வம் அவர்களும் குறிப்பிட்டதைப் போல் கடன் பெற்றால் தான் வேலை வாய்ப்பு என்ற இலக்கை வேறு எதுவும் இல்லை.



1989 பிப்ரவரி 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதிப்புமிகு உறுப்பினர் அவர்களே, இது கம்பராமாயணத்திலே இல்லை. (சிரிப்பு).

**திரு. செ. நார்முகமது:** பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்கவும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இப்படிப்பட்ட தவறுகள் இருந்தால் திருத்துவதற்கு இருக்கிறார் என்ற நம்பிக்கையோடுதான் நான் இந்தச் சுவரை செய்திருக்கிறேன். திருத்திக் கொள்கிறேன். ஆகவே அப்படிப்பட்ட நிலையில் இந்த நேரத்திலே நாம் மிகவும் கலக்கத்தோடும், கலைவையோடும் இந்தக் கடன் பெறுகின்ற . . .

**திரு. எம். அப்துல் லத்தீப்:** கம்பராமயணத்தில் இல்லை என்றால் வேறு எதிலே இருக்கிறது என்று சொன்னால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது செவி வழிச் செய்தி. நெடுநாள் செய்தி.

**திரு. செ. நார்முகமது:** நன்றி, பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, இப்படிப்பட்ட கலக்கத்தோடு, கலைவையோடு நாம் இந்தக் கடன் பிரச்சினையைப் பற்றிப் பார்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கூற ஆசைப்படுகிறேன். மேலும் இப்படி நிலுவைத் தொகையாக ஆயிரம் கோடி ரூபாய் அளவிலே வைத்திருக்கின்ற அளவுக்கு மின்வாரியத்திலே நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதைப் பற்றியும் நாம் கவலைப்பட்டுத்தான் தீரவேண்டும். மின் வாரியம் நஷ்டத்திலே ஓடுகிறது. மின்வாரியம் நஷ்டத்திலே ஓடுவதற்கான காரண காரியங்கள் என்ன என்பது பற்றியும் நாம் ஆய வேண்டும். காரணம், வாங்குகின்ற கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டாம் என்ற எண்ணத்தோடு நாம் பெறப் போவதில்லை. அந்தக் கடனைத் தவணைமுறையாகத் திருப்பிக் கொடுக்க வேண்டும். கடனுக்கான வட்டியைச் செலுத்தியாக வேண்டும். ஆகவே, அனைத்தையெல்லாம் செலுத்துவதற்கான அதிகாரமும், அதற்கான வாய்ப்புகளும் இருக்கிறதா என்பதைப் பற்றியும் ஆராய வேண்டிய நிலையில் இருக்கிறோம். இன்றைய தினம் மின் வாரியத்தில் ஏற்பட்டிருக்கின்ற சீர்கேடுகளின் காரணமாக, நிர்வாகச் சீர்கேடுகளின் காரணமாக இந்தமாதிரி கடன் தவணையைக் கட்ட முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறதா என்பதை இந்த அரசும், மாண்புமிகு மின்வாரிய அமைச்சர் அவர்களும் ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. செ. நார்முகமது] [1988 பிப்ரவரி 21

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்த அவையிலே தினசரி பல்வேறு ஆச்சரியப்படுகின்ற அவலங்களை எடுத்துச் சொல்கின்ற இந்த நேரத்தில் மின் வாரியத்திலே இப்படிப்பட்ட அவலங்கள் நடந்திருக்கின்றனவா நிர்வாகச் சீர்கேடுகளின் காரணமாக, ஊழலின் காரணமாக தமிழ்நாடு எடுத்துக் கொண்டிருக்கின்றதா என்பதைப்பற்றியும் இந்த அரசு ஆராய வேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். நிர்வாகச் சீர்கேடுகளை இருந்தால் அவைகள் போக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

அதேபோல், நான் இரண்டாவதாகக் குறிப்பிட விரும்புவது, இன்றைக்கு மின் வாரியத்திலே ஏற்படுகின்ற நஷ்டத்திற்கு அடிப்படையாக அமைந்திருப்பது 'லைன் லாஸ்' என்று சொல்லப்படுவது. லைன் லாஸ் என்று சொன்னால், நான் எனக்குக் கிடைத்த தகவலைச் சொல்ல விரும்புகிறேன். 1984-85 இல் 18.68 சதவிகிதம் லைன் லாஸ் ஏற்பட்டிருக்கிறது 1985-86 இல் 18-70 சதவிகிதம் ஏற்பட்டு இருக்கிறது. 1986-87 இல் 19.65 சதவிகிதம் லைன் லாஸ் ஏற்பட்டிருக்கிறது. நாம் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்திலேயே கிட்டத்தட்ட 20 சதவீதம் லைன் லாஸ் என்கின்ற முறையிலே வீணாகிக் கொண்டிருக்கிறதே, அந்த லைன் லாஸைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த லைன் லாஸ் என்பதிலே மின் திருட்டும் இருக்கிறதா என்பதைப் பற்றியும் தாங்கள் கவனித்துக் கொள்ளவேண்டும் என்றும், அதையும் ஆராயவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மின் திருட்டு சம்பந்தமாக, 1984-85 இல் 825 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டதாக, 1985-86 இல் 501 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டதாக, 1986-87 இல் 701 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டதாக தகவல்கள் எல்லாம் கிடைத்திருக்கின்றன. இலட்சக்கணக்கான ரூபாய்க்கான மின்சாரம் திருடிச் செல்கிறது. ஆகவே, திருட்டை அதிகமாகக் கண்டுபிடித்து, அந்தப் பணத்தைப் பெறுவதன் மூலமாக இப்படிப்பட்ட துர்ப்பாக்கியமான நிலையிலிருந்து மின் வாரியத்தைப் பாதுகாக்க முடியும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கோடிக்கணக்கிலே மின் பாக்கி வைத்திருக்கின்ற பெரிய ஆலை முதலாளிகள் இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து அந்த மின் பாக்கிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் துணிய



21ஆம் பிப்ரவரி 21] [திரு. செ. நார்முகமது]

நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு மாதம், ஒரு நாள் பிந்திவிட்டதென்றால் ஏழை எளிய மக்களின், விடுகளிலே இருக்கின்ற மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. விடு இருளிலே மூழ்குகிறது. ஆனால் பெரு முதலாளிகள் கோடி கோடியாக லாபம் கொட்டுகிறவர்கள் எல்லாம் இன்னும்கூட லட்சக்கணக்கிலே கட்ட வேண்டியிருக்கிறது. எனக்குக் கிடைத்த தகவலின்படி நமக்கு இந்த ஆண்டிலே வரவேண்டிய தொகை— 34.48 கோடி ரூபாய் பெரு முதலாளிகளிடமிருந்து பெறவேண்டியிருக்கிறது. என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட நல்ல நடவடிக்கைகள் எடுக்கின்ற நேரத்திலே, மின் வாரியத்திலே மக்களுக்குக் கடன் தருகிறோம். அந்தக் கடன் தொகை மக்களுக்குப் போய்க் கிடைக்க வேண்டும். இன்று பல இடங்களிலே டிரான்ஸ்பார்மர் சரியாக இல்லாத காரணத்தினால் மின் விளக்குகள் எல்லாம் மின்மினிப் பூச்சிகளைப் போல அலங்கரித்துக் கொண்டு இருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட நிலையினால் மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலையிருக்கிறது. ஆகவே அனைவரும் இந்த அரசை மக்கள் நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறார்கள். புதிய அரசு வந்துவிட்டது, இருள் நீங்கி, வெளிச்சம் வந்துவிடும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆகவே, அதைச் செய்ய வேண்டும்.

தெரு விளக்குகள் போன்றவைகள் போடுவதிலே காலதாமதம் ஏற்படுகிறது. விவசாயத்திற்கு இணைப்புகள் கிடைப்பதிலே காலதாமதம் ஏற்படுகிறது. அதேபோல், வீடுகளுக்கு இணைப்புக் கொடுப்பதிலே காலதாமதம் ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க வேண்டும் . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிக மின் கவிவு ஏற்படுகிறது. (சிரிப்பு).

**திரு. செ. நார்முகமது:** பேரவைத் தலைவர் அவர்களே, உங்களின் அனுமதியோடு உடனடியாக முடித்துக் கொள்கிறேன். ஒரு கருத்தை மாத்திரம் கூற அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலையிலே நாம் கடன் பெற்று உருவாக்குகின்ற இந்த அமைப்பு முழுமையாக மக்களுக்குச் சென்று சேருகின்ற வகையிலே, பயன் கிடைக்கின்ற வகையிலே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற ஆதங்கத்தின் காரணமாகத்தான் நான் அதிக நேரம் எடுத்துக்கொண்டேன். ஆகவே அதை தடை பெறுபடுத்தக் கூடாது என்று கூறி நான் வேறு வழியில்லாமல்

[திரு. செ. தார்முகமது] [1989 பிப்ரவரி 21

அரசு கொண்டுவருகிற இந்தச் சட்டத்தினை, இந்தத் தீர்மானத்தினை ஆதரிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற காரணத்தால் ஆதரிக்கிறோம். ஆனால் மின் துறையிலே இருந்துவருகின்ற நிர்வாகச் சீர்கேடுகளை இல்லாமல் ஆக்கவும், இது மக்களுக்கு உரிய வகையிலே பணியாற்றவும், அரசும் மாண்புமிகு மின்துறை அமைச்சரும் முன்வந்து நல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. மு. இராமநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கம். 'விடங்கொண்ட மினைபோல வெண்தழல் மெருகைப் போல' . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது இடைச் செருகல்; அருள்கூர்ந்து அமரலாம். (சிரிப்பு) அடுத்து திரு. பி. வி. இராஜேந்திரன்.

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கோரி இருக்கின்ற கடன் வாங்குவதும், தமிழக மின் வாரியத்தினுடைய கடன் வாங்கும் தகுதியினை நீட்டிக்கின்ற அனுமதியின் மீது என்னுடைய விவாதத்தைத் துவக்குவதற்கு முன்னால், என்னைத் தேர்ந்தெடுத்து இங்கே அனுப்பி இந்த விவாதங்களை உங்கள் முன்பு வைக்கின்ற ஒரு ஜனநாயகக் கடமை ஆற்றுகின்ற பணியினை எவ்வித நந்து வேதாரண்யம் தொகுதி மக்களையும் இந்த மன்றத்திலே 1967-லிருந்து 1971 ஆம் ஆண்டுக் காலம் வரை பணி புரிந்த எனது தந்தையார் வெங்கடாசலத் தேவர் அவர்களுடைய நினைவையும் மனதில் கொண்டு இந்தக் கடன் நீட்டிப்புக்கான மசோதாவின் மீது என்னுடைய வாதங்களை முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-54)

சில்செஸ்டர் சாக்ஸில் பெருமகனார் அவர்கள் சொல்வார்கள், நான் ஒரு எதிர்க்கட்சி உறுப்பினராக இன்றைக்கு இருக்கிறேன். எதிர்க்கட்சிகளினுடைய பணி என்பதில் நியாயமான கோரிக்கைகளை ஏன் ஆதரிக்கவில்லை என்ற கேள்வியும் எழும். அவர்கள் சொல்கிறார்கள்.

"The role of the Opposition is to oppose, and not to support. When called to support, support with a kick, but never with a caress".



1989 பிப்ரவரி 21] [திரு. பி. வி. இராஜேந்திரன்

எதிர்க்கட்சி என்றால் எதிர்த்துக்கொண்டேதான் இருக்க வேண்டும் என்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஆதரிக்க வேண்டும் என்று சொன்னாலும் ஒரு உதையோடு அவர்களை எட்டி உதைத்து ஒரு ஆதரவைத் தாருங்கள், கட்டி அணைத்து ஆதரவைத் தாருங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'கிக்' என்றால் உதை என்று மட்டும் தான் பொருளா? அல்லது வேறு பொருளும் இருக்கிறதா? (சிரிப்பு).

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் கடன் வாங்குகின்ற கடனாளி நாடு. கடன் யார் எல்லாம் தருகிறார்களோ அங்கெல்லாம் கை நீட்டிக்கொண்டிருக்கின்ற நாடு, நாம் என்னதான் சொன்னாலும், என்ன வளம் இல்லை இந்தத் திரு நாட்டில்; என் கையை ஏந்தவேண்டும் வெளி நாட்டில் என்றெல்லாம் சொன்னாலும் நமக்குள்ள நெருக்கடி கடன் வாங்கித்தான் தீரவேண்டும். அதுவும் இன்றைய சூழ் நிலையில் தமிழக மின்சார வாரியம் 1,000 கோடி அல்ல அது 1,600 கோடி அல்ல; அது 2,000 கோடி ரூபாய் வாங்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டாலும் அதனையும் முதலிடுகிறதற்காக என்று கேட்டால் நிச்சயமாக அதனை ஆதரிக்க எங்களுடைய காங்கிரஸ் பேரியக்கம் கடமைப்பட்டிருக்கிறது. காரணம் அந்த மின் நிலையங்கள்தான் தமிழகத்திற்கும் இதரியாவிற்கும் வாழ்க்கையைத் தரும்.

பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் பிளைவா உற்பத்தியைச் செய்கின்ற அந்தப் புனித இடங்களைத்தான் தான் வணங்குகிறேன், தேவாலயங்கள் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு 1,600 கோடி ரூபாயைக் கேட்டிருக்கிறார்கள் அதைத் தொகையை அடுத்த தமிழ்நாடு மின்சார வாரியம் பெறவேண்டும் என்று கேட்பதை நாங்கள் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம். அதிலே 'இன்ப்ராஸ்ட்ரக்சரில்' செய்கின்ற முதலீடுகள் எல்லாம் ஒழுங்காக நடைபெற்றதா என்பதை நம்முடைய அமைச்சர் அவர்களும் இன்றைக்குப் பொறுப்பு ஏற்று இருக்கின்ற அதனுடைய தலைவர் திரு. டி. வி. ஆந்தோணி அவர்களும் பொறுப்போடு செய்வார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது.

[திரு. பி. வி. இராஜேந்திரன்] [1989 பிப்ரவரி 21

இவ்வளவுக்குமுந் தொடர்ந்து மின் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. தமிழகத்தில் மட்டும் அல்ல, அனைத்து இடங்களிலும் நாம் உற்பத்தி செய்கின்ற மின்சாரம் அதிக வோல்டேஜ் லைனில் செல்கின்ற போது 15½ சதவிகிதத்திற்கு மேலாக லைன் லாஸ் இருக்கிறது. 10 யூனிட் நாம் தயாரிப்பதில் 4 யூனிட் சென்று விடுகிறது என்று வைத்துக்கொண்டால் அது, நிச்சயமாக அந்த 4 யூனிட்டிற்குரிய லாஸ் 10 யூனிட் தயாரிப்பதற்கான அதே உற்பத்திச் செலவுக்கு வந்து விடுகிறது. ஆக 4 யூனிட்டை நாம் சேமிப்பதில் 10 யூனிட் உற்பத்தி செய்வதற்கு அது சமமாக இருக்கும். அதில் அக்கறை காட்டவேண்டும் என்று நான் இந்த முறையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு நான் வாழ்கின்ற திமுக்குத் தஞ்சை மாவட்டத்தில் கல்லணை, நரிமணம் போன்ற பகுதிகளில் இன்றைக்கு இயற்கை எரி வாயு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து 15 மெகா வாட் நிறனுள்ள Gas Turbine கொண்டு வருவதற்கான திட்டங்கள் இருக்கின்றன. மாண்புமிகு மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. பிரம்மதத் அவர்கள் வந்திருந்தபோது அதற்கான ஏற்பாடு அனைத்தையும் செய்வேன் என்று தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் பெயரால் அங்கே வாக்குறுதிகளைத் தந்திருக்கிறார்கள்.

இந்த அரசு மத்திய அரசோடு இணக்கமாக இருக்கின்ற அரசு. அதேபோல் இன்றைக்குத் தலைநகர் அவர்களுடைய தலைமையில் இருக்கின்ற அரசு மத்திய அரசோடு இணக்கமாக இருந்து தமிழகத்திலை முன்னேற்றத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற நம்பிக்கையோடு கேட்டுக்கொண்டு இருக்கின்றது. மத்திய அரசோடு தொடர்பு கொண்டு Gas Turbine— களை நெய்வேலி தஞ்சை மாவட்டத்தின் கல்லணை, நரிமணம் ஆகிய பகுதிகளில் கொண்டு வந்து, ஆந்தப் பகுதியில்—இன்றைக்கு விவசாயத்தை நம்பியிருக்கின்ற மக்கள், விவசாயம் செயல் இழந்து போய் இருக்கின்ற நிலைமையில் தூலைகள் வேண்டும் என்று கேட்டுப்பாம்பிற பகுதி என்பதால்—தூலைகள் வருவதற்கு உறுதுணையாக இருக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நகராட்சிகள், மாநாட்சிகள், பேரூராட்சிகள், ஒன்றியங்கள் இவைகளில் எல்லாம் குடிநீர் தட்டுப்பாடு இன்றைக்கு மின்சாரம் இல்லாததால் அதிகமாக இருக்கிறது.



1989 பிப்ரவரி 21] [திரு. பி. வி. இராஜேந்திரன்]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 3 மணி நேரமாவது மின்சாரம் கிடைப்பதற்கு உத்தரவாதம் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அன்று 12 மணி நேரமாக மாற்றித் தருவதற்கு அவர்கள் முயலவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் பகல் முழுவதுமாக அந்த மின் இணைப்போடு இருந்துகொண்டு இருக்கிறார்கள், இரவிலாவது கொஞ்சம் மின்சாரம் கிடைக்க வேண்டும். அவர்களுக்கு அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டும் அல்லாமல் இன்றைக்கு conventional energy என்று இப்போது நாம் உபயோகம் செய்கின்ற Atomic, Hydel, Thermal இவைகளையெல்லாம் விட்டுவிட்டு மத்திய அரசு மிகுந்த அக்கறை கொண்டிருக்கின்ற Non-conventional energy sources மற்றும் இன்றைக்கு இருக்கின்ற solar energy மற்றும் wind mill இவைகளின் மீது தமிழக அரசு இன்றைக்கு எடுத்து இருக்கின்ற முனைப்புகளைத் தனித்து இன்னும் சற்று வேகமாக எடுத்து மலைப் பகுதி அனைத்தும் இணைத்து ஏற்படுத்தப்பட்டு இருக்கின்ற மின் இணைப்புகள் செல்ல முடியாத பகுதிகள், குக் கிராமங்கள் போன்ற இடங்களுக்கும் இது போன்ற சக்திகளைத் தந்து மலைவாழ் மக்களுக்கு வழிவகை செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். காற்றாலை அமைத்து அதன் மூலமாக மின்சாரம் அல்லது கூட்டுத் துறை அல்லது பொதுத் துறை இவைகளின் மூலமாக இன்றைக்கு சக்தியினுடைய உற்பத்தியைப் பெருக்குவதற்கு 'ரினாய்' தொழில்நுட்பத்துக்கு வழி வகை காண வேண்டும். அதிலே நீங்கள் மைய அரசோடு இணைந்து மாகச் செயல்பட வேண்டும். நாடாளுமன்றத்திலுள்ள மூன்றாவது திருத்தத்தின் நான்கை இங்கே எடுத்துக் காட்டி அனுப்பி இருக்கின்றார். தோழர் வைகோ அவர்கள் கூட உங்களோடு போராடுவதற்கு தன்னை அறிவித்திருக்கிறார். தோழர் வைகோ அவர்களை வாழ்த்தி தீர்மானத்தை வரவேற்று சொல்லியிருக்கின்ற அனைவரின் அன்பையும், அக்கறையோடு, தமிழகத்திற்கு நல்லதைச் செய்யுங்கள் என்று கட்டளையிட்டதன் நிமித்தமாகவும் இங்கே அனுப்பியிருக்கிறார்களைப்போல, டெல்லியோடு போராடுவோம் என்ற சொல்லும் குணம் மத்தவர்களுக்கு இல்லை, உங்களுக்கு மட்டும் இருக்கிறது. அதனால் நிச்சயமாக மூன்றாவது திருத்

[திரு. பி. ஜி. இராஜேந்திரன்] [1989 பிப்ரவரி 21

இணைந்து செயல்படவேண்டும். குறிப்பாக இந்த மின்சக்தி, மிக அதிகமாக ஒவ்வொருவருடைய முன்னேற்றத்திற்கும் வழி வகை செய்கின்ற இந்த சக்தி உற்பத்தியிலே நீங்கள் அக்கறை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பினைத் தந்த பேரவைத் தலைவராகிய உங்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தனித் தீர்மானத்தின் மீது நான் சார்ந்திருக்கிற கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு மின் உற்பத்தி மிகமிக அவசியமானது மட்டுமல்ல, அத்தியாவசியமான ஒன்று குறிப்பாக விவசாயத்திற்கும் தொழிலுக்கும் மிகத் தேவையான நேரத்தில் அதிகமான உற்பத்தியிருந்தும் தேவையான சில விதமான ஏற்பாடுகளையும் செய்வதற்கு அரசாங்கம் வழிவகைக் காண வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குப் பெரும்பகுதி, கடந்த காலத்தில் விவசாயி களுடைய மின் கட்டணம், சம்பந்தமாக பல்வேறு போராட்டங் களின் அடிப்படையில் நிகழ்வெறிய பாக்கிகளெல்லாம் பல இடங்களில் கட்டப்படாமல் இருந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பாக்கிகளையெல்லாம் வசூல் செய்யவேண்டுமென்ற முறையில் மின் துண்டிப்பு செய்வதன் காரணமாக பல்வேறு இடங்களில் இன்றைக்கு விவசாயம், மிகப்பெரிய பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. பல்வேறு இடங்களிலே, ஒரு வட்டாரத்திலே 1/3 பருவ மழை பற்றவில்லையென்ற காரணத்தைக் காட்டி பதிக்கான இணைப்புகள் கொடுப்பதெல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டிருக் கின்றன. அதுமட்டுமல்லாமல், அவர்கள் சொல்லக்கூடிய பல்வேறு காரணங்களில் ஒன்று, முன்னால் இருந்த கட்டண விகிதங்களில் மாறுதல் ஏற்பட்டு யூனிட்டுக்கு இத்தனை பைசா என்று சொல் வதற்குப் பதிலாக, 7 குதிரை சக்தியுள்ள மோட்டார் ஒட்டினால் இவ்வளவு கட்டணம் என்று ஒட்டுமொத்தமாக ஒரு ஏற்பாடு செய்ததன் காரணமாக, மின் இணைப்புகள் கோருகின்ற காலத்தில் அரசாங்கம் அந்த அடிப்படையிலே என்ன தொகை தெரியாமல் அவரவர்களுடைய விண்ணப்பங்களை பூர்த்தி செய்து கொடுத்து விட்டார்கள். இப்பொழுது அவர்கள் ஒருசிலர் 5 குதிரைச் சக்திகளைக் கொண்ட மோட்டார்களை உபயோகிக்கிறார்களோ அதற்குரிய தொகையைக்



1989 பிப்ரவரி 21] [திரு. சோ. அழகர்சாமி]

கட்டிவிட்டு வந்தால் கூட அதிகமென்றிலே முன்னாலே நீங்கள் தவறாக 5 குதிரை சக்திக்குப் பதிலாக 7 குதிரை சக்திக்கு நீங்களே கையெழுத்துப் போட்டிருக்கிறீர்கள் அல்லது 3 குதிரை சக்திக்குப் பதிலாக 10 குதிரை சக்திக்கு உயர்த்தியிருக்கிறீர்கள் என்று காரணத்தைக் காட்டி பழைய காலத்தினுடைய பாக்கி களையெல்லாம் செலுத்தவேண்டுமென்பதற்காக மின் துண்டிப்பு பல இடங்களில் நடந்திருக்கிறது. அதையெல்லாம் உடனடியாக நிறுத்துவதோடு இன்றைக்கு பழைய காலத்து பாக்கிகளை யெல்லாம் காலதாமதமாகச் செலுத்தியதன் காரணமாக, அந்தக் காலதாமதத்திற்காக அபராதமெல்லாம் போடப்பட்டிருக்கிறது. ஆகவே சம்பந்தப்பட்ட விவசாயிகளையெல்லாம் அழைத்துப் பேச வேண்டும். இன்னுமதில் தண்ணீர் இல்லாததன் காரண மாகவும் மேலும் பல்வேறு காரணங்களாலும் இந்தப் பாக்கிக ளெல்லாம் கட்ட முடியாமல் இருக்கிறது. அவைகளையெல்லாம் ரத்து செய்து விட்டு விவசாயத்திற்கு ஒரு முன்னுரிமை கொடுக்கக் கூடிய முறையில் மின்சாரத்தை வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது பகலிலே விவசாயத்திற்கென்று 6 மணி நேர மாவது மின்சாரம் கொடுக்கப்படவேண்டும். 3 மணி நேரம், 2 மணி நேரம் என்றுகூட சில இடங்களிலே மின்சாரம் கொடுக்கப் படுகிறது. அதிலே வோல்டேஜ் குறைவாக வருவதன் காரணமாக மோட்டார்களெல்லாம் தீய்ந்து விடுகிறது. இதனால் விவசாயி களால் விவசாயம் செய்ய முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. பூமியில் என்ஜினையும் வைத்துக் கொள்ள முடியாது. அதுமட்டு மல்லாமல் வேறு வகையிலேயும் தண்ணீரை இறைக்க ஒரு ஏற்பாடு இல்லாததன் காரணமாக விவசாயிகள் பெரு மளவில் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். மின் இணைப்பு பெறக்கூடிய விவசாயிகளின் மோட்டார்களுக்கு பகல் நேரத்திலே குறைந்தது 6 மணி நேரமாவது காலையிலோ அல்லது மாலை யிலோ மின்சாரத்தை வழங்கக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்து இன்றைக்கு இருக்கின்ற விவசாயத்தைப் பாதுகாப் பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கோடி, புதிய இணைப்புகள் கேட்கக் கூடிய இடங்களிலே யெல்லாம் சாங்கேயோ ஓரிரு இடங்களிலேயுள்ள பாக்கிகளைக் காரணம் காட்டி அந்த வட்டாரத்திலேயுள்ள பாக்கிக்காக மின் இணைப்புகள் கொடுப்பது மறுக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டுமென்ற தன்னுடைய யோசனையையும் கூறி, எல்லா

[திரு. சோ. அழகர்சாமி] [1989 பிப்ரவரி 21

உறுப்பினர்களும் கூறியதாதிரி நம்முடைய தமிழகத்திலேயுள்ள மின்சார இலாக்காவில் அதிகமாக 'லைன் லாஸ்' என்று சொல்லுகிறார்கள். அது வேறு இடங்களிலேயுள்ள அளவைவிட இங்குள்ள 'லைன் லாஸ்' அதிகமாக இருப்பதாகத் தொடர்ந்து இந்த மன்றத்திலே பல முடிவுகளை பேசப்பட்டு இருக்கின்றது. அதையும் தவிர்க்க கூடிய மாற்றங்களைச் செய்யவேண்டுமென்று கூறி விவசாயத்தை ஒரு முன்னுதாரணமாகத் தொழிலாகக் கருதி அதற்கு வேண்டிய மின் இணைப்புகளையும் கொடுக்க வேண்டும். இன்றைக்கு மின் இணைப்புக்காகக் காத்திருக்கக் கூடியவர் களுடைய பட்டியல் அதிகமாக இருக்கிறது. அவர்களுக்கு உடனடியாக மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

(பிற்பகல் 1.00)

மாண்புமிகு போலவைத் தலைவர்: போலவையின் அனுமதியோடு அவ்வப் சில மணித் துளிகள் நீட்டிக்கப்படுகிறது. அடுத்துப் பேச இருப்பவர் மதிப்புமிகு உறுப்பினர் திரு. எம். அப்துல் லத்தீப் அவர்கள். அவருடைய பேச்சு ஒரு மின் அதிர்ச்சியைப் போல் இருக்க வேண்டும்; மின் கசிவைப்போல் இருக்கக் கூடாது. (சிரிப்பு).

திரு எம். அப்துல் லத்தீப்: கலைவரசர்களே, நம்முடைய பொதுத் நிறுவனங்களில் மிகவும் சிறப்படுத்தப்பட வேண்டிய ஒரு துறையாக இந்த மின்சாரத் துறை அமைந்திருப்பது மிகவும் துரதிருஷ்டமாகும். கடந்த பல ஆண்டுகளாக இந்தத் துறை என்றைக்கும் இலாபகரமாக நடந்தது நிர்வாகச் செம்மையோடு நடந்தது என்ற ஒரு குறிப்பை நம்மால் காண முடியவில்லை. இங்கே எல்லோரும் எடுத்துச் சொன்னதைப்போல இந்தத் துறைக்கே உரிய சில குறைபாடுகள் Transit loss. That is not a loss என்று அடிக்கடி சொல்வார்கள். அதேநேரத்தில் 'theft' 'திருட்டு', அதுவும் அனுமதிக்கப்பட்டிருக்கிற ஒன்று. 'arrear' 'பாக்கி' என்றும் ஒரு தனியான கணக்கை எப்பொழுதும் அவர்கள் காட்டிக்கொண்டிருப்பார்கள். டிரான்ஸிட் லாஸ் என்பதிலே நம்முடைய மாநிலத்திலேதான் எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவிற்கு அதிகமான டிரான்ஸிட் லாஸ் என்ற அந்த வகையில் கணக்கு காட்டப்படுவது என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாகும். அதுவும் இந்தத் தலைநகரிலே



1989 பிப்ரவரி 21] [திரு. எம். அப்துல் லத்தீப்]

விளக்கம் கேட்டால் எறக்குறைய 20 பர்சென்ட் டிரான்ஸிட் லாஸ் இருந்தால் அது லாஸே இல்லை என்றுதான் பதிலில் அவர்கள் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதாவது 'transit loss' என்னவென்று சொன்னால் 18-லேயிருந்து 20 பர்சென்ட் லாஸ், அதாவது டிரான்ஸிட்டிலே லாஸானால் that is not a loss என்று சொல்லக்கூடிய அளவிற்கு இந்தத் துறையிலே இன்றைக்கும் நிலைமை இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

அதே நேரத்திலே அந்தத் துறையிலே மின்சாரத் திருட்டு நடைபெறுவது சாதாரணமாக இன்றைக்கு எங்குமே காணக் கூடியதாக அமைந்திருக்கிறது. Domestic consumption, Industrial Consumption, என்று தனித்தனியாக நாம் அடைப்புக்குறிக்கும் போது- Domestic Consumption இலே ஒருவர் மின்சாரத் திருட்டுத் தொகை பாக்கியாக இருந்தால் அதற்குக் கடுமையான நடவடிக்கையை அவர்கள் எடுக்கிறார்கள். உடனடியாக வீட்டுக்குக் கொடுத்திருப்பதை இணைப்பைத் துண்டிக்கிறார்கள். Industrial Consumption என்று வரும்பொழுது பிரச்சினைக்குரிய அளவிற்குப் பெரிய மனிதர்கள்—திருட்டுகளைச் செய்வதே மின்சாரத் துறையிலே பெரிய மனிதர்கள்தான், சாதாரண மக்கள் அல்ல. அவர்கள் இத்தகைய திருட்டுக்களைத் தொடர்ந்து செய்வதற்குக் காரணம் என்ன என்பதைப் பல நேரங்களிலே இந்தத் துறையினர் சுட்டிக்காட்டினாலும், கடுமையான நடவடிக்கையை அந்தத் துறையினர் அந்தத் துறையிலே வேலை செய்பவர்களின்மீது எடுக்க முடியவில்லை என்பதே காரணத்திற்குரிய ஒன்றாகும். அந்தத் துறையைச் சேர்ந்த ஊழியர்களும், பலமான சங்கங்களுடைய ஒத்துழைப்பு இன்றி எந்த வொரு தொழிற்சாலையும் மின்சாரம் திருட முடியாது என்பதையும் நாம் கவனத்திலே கொள்ள வேண்டும்.

இதனால் இன்றைக்கு 'arrears' என்று சொல்லப்படுவது இந்தத் துறைக்கே உரிய ஒரு தலையிடியாக மாறிவிட்டு இருக்கிறது. பல பெயரிய நிறுவனங்கள், நான் சொல்வது 'Industrial Sector' என்று சொல்லக்கூடிய அந்தத் தொழில் துறையிலே— உதாரணமாக ஒரு பத்தாண்டுகளுக்கு முன்பு மேட்டூரிலே இருக்கிற ஒரு பெரிய தொழிற்சாலை, எறக்குறைய 12 கோடி ரூபாய் பாக்கி, துறைக்கு. பத்தாண்டுகளுக்கு முன்பு அதற்குச் சேர்ந்த—(குறுக்கே) நான் 'மால்கோ' என்று சொல்ல விரும்ப

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1989 பிப்ரவரி 21

வில்லை. அதைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் நான் சொல்லி விடுகிறேன். மால்கோ நிறுவனம் பத்தாண்டுகளுக்கு முன்பு 12 கோடி ரூபாய் இந்தத் துறைக்குப் பாக்கி என்று அன்றைக்குச் சொல்லப்பட்டது. அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் துறைத் தலைவர்கள் சொல்வார்கள், நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் தயார். அந்த நடவடிக்கை ஒரேயொரு நடவடிக்கைதான். என்னவென்றால், அந்த மால்கோ நிறுவனம் மூழ்வதும் அதைக் கனக்கு எடுத்துப் பார்த்துக்கொண்டால் அதன் 'asset' என்று சொல்லக்கூடிய அதனுடைய மதிப்போ 6 கோடி ரூபாய்தான். அந்தத் தொழிற் சாலையை முழுமையாக எடுத்துக் கொண்டாலும் மொத்தத் தொகையை நம்மால் வசூலிக்க முடியாத அவர்கள் கொடுக்க முடியாமல் இருக்கிறார்கள். எனவே நடவடிக்கை எடுத்தால் அந்தத் தொழிற்சாலையை மூடுவதற்காகச் சொல்கிறார்கள். மூடினால் தொழிலாளர்களுடைய 'labour' பிரச்சினை வந்து வருகிறது. எனவே, இந்தப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது நாட்டினுடைய 'Agricultural Sector' என்று சொல்லக் கூடிய அதிலும் நாம் நெல்லை களைகளோடு நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடியவர்களாக இருக்கிறோம். ஏனென்றால் இங்கேகூட அடிக்கடி அந்தத் துறை வருகிறது. நான கேட்டுக் கொள்வதெல்லாம் இது ஒரு 'Commercial Undertaking' இந்த மின்சாரத் துறை என்பது ஒரு 'Commercial Undertaking' இந்தச் சமூக நலத் திட்டத்தின் அடிப்படையிலே விவசாயி களுக்கும் மற்ற ஏழை மக்களுக்கும், குடிசைவாழ் மக்களுக்கும் மின்சாரத்தை அளிப்பது இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை யாக இருந்தால் அதை ஒரு தனி டிபார்ட்மெண்ட்—அதை ஒரு செக்ஷனாகச் செய்து அது எப்படிச் செயல்பட வேண்டும் என்பதை நிர்ணயிக்க வேண்டும். அதேநேரத்திலே 'Domestic Consumption, Industrial Consumption Commercial Dealings' என்று சொல்லி வரக்கூடிய இடங்களிலே கடுமையான நட வடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் இது 1000 கோடி இல்லை. 1100 கோடி இல்லை எவ்வளவு வட்டியுடன் இதற்காக நீங்கள் இன்னும் அதிகமாகக் கடன்களை வாங்கப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. எத்தனை பர்செண்டேஜ் வட்டிக்கு நீங்கள் பணம் வாங்கப் போகிறீர்களா? இப்பொழுது 600 கோடி ரூபாய் அதிகமாக வேண்டும். அந்த



1989 பிப்ரவரி 21] [திரு. எம். அப்துல் லத்தீப்]

அளவிற்கு ஒரு லிமிட் என்று ஏற்படுத்த வேண்டுமென்று சொல் கிறீர்கள். எந்த வட்டி விகிதத்திலே நீங்கள் வாங்கப் போகிறீர் கள்? அதிலே Principal amount என்ன? Interest amount என்ன? repayment என்ன ஏற்பாடு? (You have come before the House just to float the amount) இந்த loan எடுப்பதற்காகத்தான் இது வந்திருக்கிறதே தவிர how to repay என்பதைச் சொல்லவில்லை. அதைச் சொல்ல வேண்டும். Arrears Collection, transit loss -க்கு என்ன செய்யப் போகிறீர்கள்? Domestic consumption என்றால் 5 ரூபாய பாக்கி க்குக் கூட உடனே மின்சாரத்தை துண்டித்து விடுகிறார்கள். அவர் களுக்குச் சலுகைகள் கொடுக்க வேண்டுமென்றால் நிர்வாகத்தைச் சீர்படுத்தப் போகிறீர்களா எவ்வளவு என்பதைத் தெரிவிக்க வேண்டும். நம்முடைய பொதுத் துறைகளிலே மிகவும் சீர்கேடு அடைந்துள்ள துறை ஒன்று இருக்கிறது என்றால் அது மின்சாரத் துறைதான். எனவே, மின்சாரத் துறையை மின்சாரம் போல விரைந்து செம்மைப்படுத்தி, சம்சாரத்தை எல்லாம் காப்பாற்ற வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு).

திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற தீர்மானத்தின் மீது ஒருசில கருத் துக்களை வழங்குகின்ற வாய்ப்பை உருவாக்கித் தந்த உங்களுக்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என்னை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்த கோபிச்செட்டிபாளையம் வாக் காளர் பெருமக்களுக்கும், இந்த நிலைக்கு என்னை உருவாக்கி யிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியை முதலில் உரித்தாக்கி, இந்தத் தீர்மானத்தின்மீது ஒன்றி ரண்டு கருத்துக்களை எடுத்துவைக்க நான் கடமைப்பட்டிருக் கிறேன்.

குறிப்பாக, இன்றைக்கு மின்சாரத் துறையில் ஏற்பட்டிருக்கிற இழப்புக்குக் காரணம் மின்சாரத் துறையிலே இருக்கின்ற 'லைன் மேன்' தான் என்று சொல்லி, பல்வேறு புள்ளி விவரங்களைத் தந் திருக்கிறார்கள். ஆண்டுதோறும் ஏற்படுகின்ற இந்த இழப்பீடும் அதைப்போன்று மின்சாரம் வழங்குகின்ற நேரத்தில் ஏற்படுகின்ற திருட்டும், காரணமாகத்தான் இந்த நிலைமை மின்சாரத்

[திரு. கே. ஏ. செங்கோட்டையன்] [1989 பிப்ரவரி 21

தரைக்கு ஏற்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக நீங்கள் பல்வேறு வழக்குகள் எல்லாம் போட்டாலும்கூட இன்றைக்கு அது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதைப் புள்ளி விவரங்கள் காட்டிக் கொண்டிருக்கின்றன.

இதை எல்லாம் தவிர்க்க வேண்டுமெனறால், நாங்கள் ஆளுமிற நேரத்தில் பல்வேறு கருத்துக்களை இங்கே எதிர் அணியிலிருந்து வழங்கியிருக்கிறீர்கள்; அந்தக் கருத்துக்களைப் பரிசீலனை செய்ய வேண்டும். அன்றைக்கு எதிர் அணியிலே இருந்து தனியாருக்கு சிறிய அளவில் மின்சாரம் உற்பத்தி செய்கிற்ற புல்வேறு வாய்ப்புகளை அளிக்க வேண்டுமென்று கருத்துக்களை வழங்கியிருக்கிறீர்கள். இவ்றைக்கு மேலை நாடுகளில் பார்க்கும் போது, குறிப்பாக ஜப்பான் நாட்டில் குறைந்த செலவில் கடல் அலையில் இருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதைப் பார்க்கி றோம். அதைப்போன்று காற்று அழுத்தத்தில்கூட மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். சூரிய வெப்பத்தில்கூட மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். இவற்றை எல்லாம் கருத்திற்கொண்டு, மின்சார வாரியத்தின் நஷ்டத்தைத் தவிர்க்க மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்து, சிறிய அளவில் தனி யாருக்கு மின்சாரம் உற்பத்தி செய்ய அனுமதி அளிக்க வேண்டு மென்ற கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு ஏறத்தாழ 1600 கோடி ரூபாய் கடன் சுமையை இந்த மின்சார வாரியம் சுமந்துகொண்டிருக்கிறது. இதே நிலைமை நீடிக்குமானால் மின்சார வாரியம் செயல்படுமா, செயல் படுவதற்கான சாத்தியக்கூறு இருக்குமா என்ற நிலைமை இருந்துக் கொண்டிருக்கிறது. முந்தைய ஆட்சிக்காலத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு திட்டங்களை ஏழை விவசாயிகளுக்காக மின்சாரத் துறையிலே கொண்டு வந்தார்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏழை விவசாயிகளுக்கு 5 ஏக்கருக்குக் கீழே நிலம் வைத்தி ருக்கிற சிறு விவசாயிகளுக்கு மின்சாரத்தை இலவசமாக அழுங்கிய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையே சாரும். ஒரு குதிரை சக்தி மோட்டார் வைத்திருக்கிறவர்கள் 75 ரூபாய் கட்டிவிட்டு, ஆண்டு முழுவதும் ஓட்டிக்கொள்ளலாம் என்ற வழிவகையை அவர்கள் வகுத்துத் தந்தார்கள். அப்படிப் பட்ட ஒரு நல்ல நிலையை உருவாக்கித் தந்து, அன்றாடம் உழைத்துக்கொண்டிருக்கிற ஏழை விவசாயிகளின் வாழ்க்கைத்



1989 பிப்ரவரி 21] [திரு. கே. ஏ. செங்கோட்டையன்]

தரத்தை உயர்த்தி, உழைத்து உற்பத்தி செய்கிற விவசாயிகளின் கண்ணீரைத் துடைத்துத் தந்தார்கள். அந்த அடிப்படையில் நான் இன்றைக்கு என்ன செய்கிறீர்கள் என்று பார்த்தால், மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது; அனல் மின் நிலை யங்களில் கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லி, மூன்று மணி நேரம்தான் மின்சாரம் வழங்க முடியும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-10)

நாங்கள் எதிர் வரிசையிலே இருக்கிறோம். ஆனால் விவசாயி களுக்கு பகலிலே 6 மணி நேரம் மின்சாரத்தைத் தொடர்ந்து கொடுத்துக்கொண்டிருந்த ஆட்சிதான் எங்கள் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி. ஆனால் நீங்கள் இன்றைக்குச் சொல்கிறீர்கள், அனல் மின்சார நிலையத்தில் பாது ஏற்பட்டு இருக்கிறது, ஆகவே மின்சாரத்தைத் தரிதமாக அளிக்க போர்க்கால அடிப்படையில் பணியாற்றி அந்த மின் கோளாறுகளை அகற்றி அனல் மின்சாரம் தொடர்ந்து சிறப்பான முறையில் பணியாற்றுவதற்காக நாங்கள் பணிகளைச் சுவக்கி இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

அன்றைய ஆட்சிக் காலங்களில் இதுபோன்ற குறைபாடுகள் ஏற்படுகிறபோது வேறு மாநிலங்களிலிருந்து மின்சாரத்தைப் பெற்று விவசாயிகள் கண்ணீரைத் துடைத்த ஆட்சிதான் அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதை மறந்து விடக்கூடாது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, எதோ இந்த அரசாங்கம் மின்சாரத்தையே கையிலே வைத்துக்கொண்டு விவசாயிகளுக்குக் கொடுக்கிறதைப்போல ஒரு தோற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. 'பிரேக்டவுன்' என்பது எதிர் பாராமல் ஏற்படுவது. நிரந்தரமாக மின்சாரம் தேவை என்றால் அண்டை மாநிலங்களோடு பேசி பெறப்படுகிற மின்சாரத்தை இந்த அரசாங்கம் வாங்கித் தரும். ஆனால் திடீரென்று பிரேக் டவுன் ஏற்பட்டது. இரண்டு மூன்று நாட்களுக்கு முன் எதிர் பாராத வகையில் அப்படிப்பட்டதொரு நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது உடனடியாக அதிகாரிகளோடு கலந்துபேசி, இரவு பகலாக நடவடிக்கை எடுத்து மூன்றே நாட்களில் அந்தப் பிரச் னை தீர்க்கப்பட்டிருக்கிறது.

[1989 பிப்ரவரி 21

திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு போலைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைத் தந்தார்கள். மூன்று நாட்களிலே இந்தக் குறைபாடு களைந்து தகர்ந்து இன்றைக்கு மின்சாரம் சீராக முறையில் கொடுக்கப்படுகிறது என்று குறிப்பிடுகிறார்கள்.

எங்களுடைய பகுதியைப் பொறுத்தவரையில் மின்சாரம் டகலிலே இரண்டு மணி நேரம் கூட கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் ஒன்றைக் குறிப் பிட்டுக் காட்டினார்கள். போர்க்கால அடிப்படையில் பணியைத் துவங்கி இருக்கிறோம், ஆனாலுங்கூட மூன்று மாதங்கள் அல்லது 4 மாதங்கள் அவகாசம் எற்படும் என்று புள்ளிவிவரங்கள் தருகி றார்கள். ஆனால் உணவுத்துறை அமைச்சர் அவர்கள் இன் றைக்கு பேசும்போது 3 நாட்களில் இந்தப் பிரச்சினையை முடித்துவிட்டோம் என்று சொல்கிறார். ஆகவே அமைச்சர் பெருமக்கள் சொல்வதில் மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் சொல்வதை நம்புவதா, அல்லது உணவுத்துறை அமைச்சர் சொல் வதை நம்புவதா என்பதை இங்கே நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகளின் கண்ணீரைத் துடைக்கக் குறைந்தது பகலிலே 8 மணி நேரம் மின்சாரம் வழங்கவேண்டும் என்பதற்காக வேறு மாநிலங்களிலிருந்து மின்சாரம் பெறுகிற வகையில் பேச்சு வார்த்தை நடத்தி மின்சாரத்தைப் பெற்றுத் தரவேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து இங்கே உரையாற்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த உங்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கி றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: பொருமதிப்பிற்குரிய போலைத் தலைவர் அவர்களே, இங்கே இந்தத் தீர்மானத்தை மூதலிலே அனைத்து உறுப்பினர்களுமே வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய திரு. ஜார் முகமது அவர்களும், திரு. சாஜேந்திரன் அவர்களும், அழகர்சாமி அவர்களும், மற்றும் அண்ணன் மதிப்பிற்குரிய திரு. லத்தீப் அவர்களும், உறுப்பினர்



1989 பிப்ரவரி 21] [திரு. கே. என். நேரு

திரு. செங்கோட்டையன் அவர்களும், இங்கே ஆலோசித்துப் பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. குரு ாமி அவர்களும், இவர்கள் அத்தனைபேரும் இங்கே மின்சாரக் கஷ்டம் இருக்கிறது, அதை எப்படி நிவர்த்தி செய்யப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். மேலும் மின்சாரத் திருட்டு பற்றி எல்லாம் குறிப்பிட்டார்கள். கடைசியாகப் பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. செங்கோட் டையன் அவர்கள், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் விவசாயி களுக்குக் காலையில் 6 மணி நேரமும் இரவில் முழு நேரமும் மின்சாரம் வழங்கப்பட்டது. ஆனால் இப்போது வழங்கப்பட வில்லை என்று குறை சொன்னார்கள். 10-வது மாதமே ஏற்பட்ட இழப்பின் காரணமாக, எண்ணூர் அனல் மின் நிலையமும், அதே போல் கல்பாக்கம் அனல் மின் நிலையமும், நெய்வேலி அனல் மின் நிலையமும் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி சுத்தம் செய்கிறேன் என்ற ஒரு காரணத்தைக் காட்டி அவர்கள் உற்பத்தியை நிறுத்தி யதன் காரணமாகவும், அதேபோல் நீலபெரும்புதூரில் இருக்கிற ட்ரான்ஸ்மிட்டர் பழுதடைந்த காரணத்தாலும்தான் ஒரு வார காலம், அல்லது 10 நாட்களுக்கு மிக அதிகமாக மின் தடை ஏற் பட்டது. அவையனைத்தையுமே சரி செய்து எடுக்கப்பட்ட நட வடிக்கையைத்தான் போர்க்கால நடவடிக்கை என்று நான் குறிப் பிட்டேன். ஆனால் இப்போது உணவுத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு மாதிரியாகவும், மின்துறை அமைச்சர் அவர்கள் ஒரு மாதிரியாகவும் பேசுவதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் சொன்னார்கள். உணவுத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னது சுப்பாக்கத்தில் ஏற்கெனவே பழுதடைந்த இரண்டு யூனிட்டுகள் அல்லாமல் மற்றும் இரண்டு யூனிட்டுகளும் பழுதடைந்தபோது அரசு விரைவாகச் செய்ப தனைத்தான் அவர்கள் சொன்னார்கள். அதுபோலவே ஒவ்வொரு விவசாயிக்கும், மனிலே 6 மணி நேரம் கரண்ட் கொடுத்தால், மின்சாரம் வழங்கிலாள் அதிக மின் அழுத்தம் இருக்காதென்ற காரணத்தினால், அதிக மின் அழுத்தக்கோடு 4 மணி நேரம் கொடுக்கலும், இரவிலே 10 மணியிலிருந்து காலை 6 மணி வரை மின்சாரம் கொடுக்கலும் ஒரு புதிய ஏற்பாடு செய்து, அது ஒவ்வொரு விவசாயிக்கும் அறிவிக்கப்பட்டு, அதுபோல வழங்கப்படுகிறது. இப்போது நெய்வேலியிலேயும், கல்பாக்கத் திலும் உற்பத்தி தொடங்கியிருக்கிறார்கள். இன்னும் நீலபெரும்

[திரு. கே. என். நேரு] [1989 பிப்ரவரி 21

டிராக்டர் டிரான்ஸ்பிட்டர் பழுது பார்த்து முடிந்துவிட்டால், நிச்சயமாக ஏற்கெனவே கொடுத்ததைப்போல இப்பவும் கொடுக்க முடியும் என்ற உறுதியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்டை மாநிலங்களில் இருந்து முந்தைய ஆட்சி மின்சாரம் வாங்கி விவசாயிகளுக்கு வழங்கியது என்று சொன்னார்கள். அது போலவே, அண்டை மாநிலங்களைக் கேட்கும்போது, அவர்களுக்கும் இப்போது மின் பற்றாக்குறை இருக்கிறது எனறு சொல்லியிருக்கின்றார்கள். அப்படி இருந்தும் நாங்கள் முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். அதைப்போலவே வழங்குவதற்கு என்று கூறி இங்கு உரையாற்றிய அத்தனை உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 65-வது பிரிவின் (1)-வது உட்பிரிவின் படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக ஆயிரத்து அறுநூறு கோடி ரூபாய் இருக்கலாமென்று மேற்படி சட்டத்தின் அதே பிரிவைச் சேர்ந்த (3)-வது உட்பிரிவின்படி முடிவு செய்யும் மாநில அரசின் செயற்குறிப்பு எற்கப்படலாம்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, திறை வேற்றப்பெற்றது.



1989 பிப்ரவரி 21]

## 9. அரசினர் தீர்மானம்.

### பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"பேரவை விதி 25(1)-ன்கீழ், பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப் பெற வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, திறை வேற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்படுகிறது.

பின்னர், பேரவை பிற்பகல் 1-17 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

12. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வடிப்பாலை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 18—2—1989 ஆம் நாளிட்ட 246 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

138692

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrafts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirun.lveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamamn Koil Street, Egmore, Madras-8.

IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9|31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. A. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dhanmani Stores, No. 3|1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B. B. Gandhi Street, Calcutta-17.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.